# தமிழரசு

16.1.1983 75காசு
திருவள்ளுவர் ஆண்டு 2014
துந்துபி - தை 3



# முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா

## சென்னை 27-12-1982



# பொங்கல் புது நாள்!



பேரறிஞர் அண்ணா

உலக நாடுகள் பலவற்றின் தலைநகரங்களை ஒருமுறைக்கு மும்முறை கண்டு வந்தேன். அங்கு எங்கும் விழாக்கள் பலப்பல நடத்தப்படினும் தமிழகத்தின் பொங்கற் புதுநாள் போன்றதோர் பொன் விழா இல்லை, நிச்சயமாக இல்லை. கோலாகல விழாக்கள் உள்ளன; பரபரப்பூட்டும் விழாக்கள் நடத்தப்படுகின்றன; கேளிக்கைகள், மதுபான விருந்துகள் மிகுதியாக எனினும் ஆர்ப்பரிப்பின்றி ஆனால் அகமகிழ்ச்சியுடன், போலிப் பூச்சுகளின்றி ஆனால் புதியதோர் பொலிவுடன், வீட்டில் உள்ள அனைவரும் கலந்துரையாடி மகிழ்ந்திருக்கும் நமது பொங்கற் புதுநாளுக்கு ஒப்பான விழா அங்கு எங்கும் இல்லை.

நாட்டியக் கூடங்களிலே அமளி! பாதைகளிலே புதுவேகம். மோதல். உயிர்ச்சேதம். அங்காடிகளிலே ஆரவாரம்! இவைகள் ஏராளமான அளவு! ஆனால் இங்கு வீடுதோறும் எழுகிறதே, முதியவரும் மூதாட்டியும், இளைஞரும் இளநங்கையும், சிறாரும் சிறுமியரும் கலந்து எழுப்பும் ''பொங்கலோ! பொங்கல்!'' என்ற இசை; அது அங்கு எங்கும் இல்லை. இருந்திடத் தக்கவிதமான சமூக அமைப்பே இல்லை!

வேறெல்லா விழாக்களும், ''போகும் இடத்திற்காக''! பொங்கற் புதுநாள் இருக்கும் இடத்திற்காக!

தமிழரின் தனிச் சிறப்பினை அறிந்திடப் பயன்படும் நமது இலக்கியச் செல்வத்தை நினைவிற்கொள்ளவும், மற்றையோர்க்கு எடுத்துக் கூறவும் பொங்கற் புதுநாள் ஏற்றது என்பதாலேயே பெரியோர்கள் இதனைத் ''தமிழர் திருநாள்'' என்றழைக்கின்றனர்.

பழம் பெருமை பேசி, பெருமூச்செறிந்து கொண்டே செயலற்று இருப்பதல்ல நமது குறிக்கோள். செயலினால் பெற்றிடும் செழுமையை எடுத்துக் காட்டிடும் நன்னாளாம் பொங்கற் புதுநாளில், செயலார்வம் மிகுந்திடுவது இயல்பு. செயலும் செம்மையானதாக அமைந்திட வேண்டும். பயனும் சமூகம் முழுவதற்கும் கிடைத்திடத் தக்க முறை கண்டாக வேண்டும். வெள்ளம் அழித்திடும்! வாய்க்கால் வளமூட்டும். செல்வம் சிலரிடம் சென்று குவிந்திடுவது-வெள்ளத்துக்கு ஒப்பானது. அது கொண்டவனையும் அழித்திடும், சமூகத்தில் வலிவற்றோரையும் அழித்திடும். எனவேதான் — சிந்தனையாளர், ''செல்வம் பெருக்கிட வேண்டும். அஃது முடக்கப்படாமல் சமூகம் முழுவதற்கும் பயன் அளிக்கக்கூடிய வழிமுறை கண்டாக வேண்டும்' என்று எடுத்துக் கூறினார்.

தமிழர் திருநாளாம் பொங்கற் புதுநாள் தனித்தன்மை பெற்றது.

உழைப்பே செல்வம்,
உழைப்பே உயர்வு
உழைப்பின்றி உலகு இல்லை.

என்பன போன்ற நற்கருத்துக்களைத் தருவதாக அமைந்திருககின்றது.

சீமான் மகன் கொண்டாடும் விழா அல்ல பொங்கற் புதுநாள்! சமூகத்தின் கோணல்களை நிமிர்த்தியாக வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டவர்க்கென்றே அமைந்துள்ள விழாவாகும்!

**(1969-ல் 'தம்பிக்கு' எழுதிய கடிதத்திலிருந்து)**


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2014

துந்துபி — தை 3

மலர்: 13 இதழ்: 14

16-1-1983


## பொங்கல் வாழ்த்து

அன்பு நெஞ்சங்களே!....

வணக்கம்.

பொங்கற் புதுநாளில் தமிழரசு வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், தமிழ்ப்பெருமக்களுக்கும் பொங்கல் வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.



# பண்பாட்டோடு இணைந்த கல்வி தேவை!

## — மாண்புமிகு முதல்வர்

தனக்கெனத் தனி வரலாறு கண்ட இச் சென்னை மாநகரில் அதன் தனிச்சிறப்புக்கு இங்கு நடைபெறும் வயது வந்தோர் கல்வி ஆய்வு அரங்க மாநாடு அமையும் எனக் குறிப்பிட விரும்புகிறேன்.

உலகெங்கிலுமுள்ள கல்வி வல்லுநர்கள் இங்கு பங்கு பெறுகிறார்கள் என்பதை எண்ணி எண்ணி மகிழ்கிறேன். இதற்குத் தனிப்பட்ட முறையிலும்-அமைச்சரவையின் சார்பிலும் தமிழக மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு நடைபெறும் இநத மாநாடு தமிழகத்துக்குத் தனிச் சிறப்பப வழங்கும் வகையில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் இங்கு வந்திருப்பதை எண்ணிப் பார்க்கும்போது, தமிழகத்தைப் பெரிதாக மதிக்கிறீர்கள் என்று நான் கருத வேண்டியுள்ளது.

வயதுவந்தோர் கல்வி, அறிவு தரும் பணியாகும்; மற்றவர்களுக்கு வழிகாட்டி இருக்கும் நீங்கள் எடுக்கவிருக்கும் முடிவுகள்- தரப்படும் கருத்துகள் - மக்களை வாழவைக்கப் போகிறது என்பதை எண்ணிப் பெரு மகிழ்வு கொள்கிறேன்.

படிப்பறிவு இந்தியத் துணைக கண்டத்தைப் பொறுத்த அளவில் 31 சதவிகிதம் என்றும், தமிழகத்தைப் பொறுத்த அளவில் 46 சதவிகிதம் என்றும் இருப்பதிலிருந்து உண்மையைப் புரிந்து கொள்ள உதவும் என்று கருதுகிறேன். ஆனால் நாங்கள்பொறுப்பேற்ற பிறகு படியாதவர் தொகை குறைகிறது என்பதுடன் வயதுவந்தோர் கல்வி அதிகரிக்கப்பட்டு ரூப்ஸ்கயா பரிசு பெறும் அளவுக்கு எங்கள் கடமைகளை ஆற்றியிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

பால் மாக்கி அவர்கள் குறிப்பிடும்போது, ஜனநாயகம் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஜனநாயகம் என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

அமரர் நேரு அவர்கள், வயது வந்தோர் அத்தனை பேருக்கும் வாக்குரிமை என்று சொன்னார். எந்த அடிப்படையில் சொன்னார் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

கல்வி எந்த அளவுக்குத் தேவையோ அதைப்போல ஒரு மனிதனுக்கு அனுபவம் தேவைப்படுகிறது. அனுபவத்துக்கு ஈடாக வேறு எதுவும் கிடையாது. மகாத்மா காந்தி ஆதாரக்கல்வி வேண்டும் என்று சொல்லியதை மனத்தில் எண்ணிப்பார்க்க வேண்டும். அடிப்படைக்கல்வி உணர்வு கொள்ளவேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார் என்று தான் நாம் கருத வேண்டும்.

தமிழக அரசைப் பொறுத்த அளவில் நாங்கள் எங்கள் தலைவரென மதிக்கும் அமரர் அண்ணா அவர்கள் சொல்லிய கருத்துக்களை மறக்கவில்லை; அவர் சொல்லிய வழியில் செல்கிறோம். அனுபவத்தைச் சரிவரச் செயல் படுத்த வேண்டுமென்றால் கல்வி வேண்டும் என்பது அவர் கொள்கை.

அந்த வகையில் நாங்கள் 11 ஆயிரம் பள்ளிகளுக்கு முதியவர்களை அனுப்புகிறோம் என்று சொல்வதில் பெருமையடைகிறோம். ஏறத்தாழ 3 லட்சத்து 60 ஆயிரம் முதியோர் கல்வி கற்கின்றனர். இந்த 3 லட்சத்து 60 ஆயிரம் பேர் கற்றுக் கொள்ள மாலை நேரத்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்பது எங்களுக்குத் திருப்தியைத் தருகிறது என்றாலும் சில அடிப்படை மாறுதல்களைச் செய்ய விரும்புகிறோம்.

எழுத்தை, எண்ணைக் கற்றுக் கொடுத்து அவற்றின் மூலம் அனுபவம் கொடுக்க காலம் அதிகமாகிவிடுகிறது. அந்த வகையில் புதிய கல்வி முறையை அறிமுகப்படுத்த ஆவல் உள்ளவர்களாக இருக்கிறோம். அதற்கு உங்களின் யோசனைகள் புதிய திட்டங்களாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் பல ஜாதி, மதம் உள்ளன. எல்லோரும் ஒன்று என்று பாரதியார் சொல்லியதை இந்த நேரத்தில் நினைவு படுத்த வேண்டியவனாக இருக்கிறேன். குறிப்பாக தமிழ்நாடு, பொதுவாக எந்த அளவு ஒற்றுமையுடன் வாழ முடியுமோ அந்த அளவு ஒற்றுமையுடன் நடந்து வருகிறோம் என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்ளவிரும்புகிறேன். இதற்கு அடிப்படையாகப் பல்லாயிரக்





**நெ**ஞ்சிலே முள் தைத்தால் கூட அது குழந்தையின் நகமாக இருந்தால் அந்தக் காயம் பட்ட இடத்தில் வலியேற்படுவதில்லை, சிரித்துக் கொண்டிருப்போம்.

**ச**மூகம் என்று வரும்போது அது பரவலாக இருக்க வேண்டும்; அனைத்துப் பிரிவிலே வாழும் மக்களுக்கும் அது வழிகாட்டுவதாக இருக்கவேண்டும். அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதாக இருக்கவேண்டும்.

கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்துள்ள பண்பாடுதான் காரணம் ஆகும்.

பண்பாடு இன்றி, கல்வி மட்டும் ஒருவரை நல்லவராக்க முடியாது. ஆகவே கல்வி, பண்பாட்டோடு அமைய வேண்டும். அப்படி இருக்கும் போதுதான் உங்களது போக்கு எங்களின் வரவேற்புக்கு ஒத்துக் கொள்ளும் நிலை உருவாகியுள்ளது என்பதை இங்கு சொல்லிக் கொள்கிறேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்களைப் போலப் பண்பாடு இருக்கிறது. அதன் அடிப்படையில் தோன்றும் நோக்கங்கள் மக்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டும் என்ற நேரடி உணர்வு அத்தனையும் நம்மை ஒற்றுமைப் படுத்தியிருக்கிறது. இதற்கு அடிப்படை - குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், வயதுவந்தோர் அறிவு பெறுவதற்கு நீங்கள் முயற்சி செய்வது, இன்று பலருக்கும் புரியாவிட்டாலும், எதிர்காலத்தில் இதைப் புரிந்து கொள்ளும் நிலை உருவாகும் என்று நம்புகிறேன். இதைக் கூறுவதில் நல்ல அனுபவம் எனக்கே இருக்கிறது.

நான் ஒரு கிராமத்துக்குச் சென்றபோது அங்கு முதியோர் ஒருவரைச் சந்தித்து - ''நீங்கள் ஏன் முதியோர் பள்ளிக்குச் செல்லவில்லை'' என்று கேட்டேன்.

''இனிமேல் பள்ளிக்குச் சென்று என்ன பயன் எனக்கு'' என்று

''வயது வந்தோர் இனிமேல் கல்வி கற்று என்ன செய்யப் போகின்றனர்'' என்று கேட்பவர்களும் உள்ளனர்.

முதியவர்கள் ஓர் அகராதி என்பதை அவர்கள் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். முதியவர்கள் தரும் பதில் அகராதிகளில் கூடக் காண முடிவதில்லை.

நான் அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்த போது இரண்டொரு நாட்கள நைரோபியில் தங்கும் வாய்ப்புப் பெற்றேன்.

மகாத்மா காந்தியை நைரோபி மக்கள் மதிக்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரைப் பாராட்டுகிறார்கள். கறுப்பர் எனப்படும் அவர்களுக்கு விடுதலை வாங்கித் தந்தார் அவர் என்ற உணர்வைப் பெற்றிருப்பதாகச் சொன்னார்கள்.

அமெரிக்கா சென்று பார்த்த போது வெள்ளையர்களும் கறுப்பர்களும் அங்கு ஒற்றுமையாக வாழ்ந்து வருவதைக் கவனித்தேன். முதியவர்கள் எல்லாம் கடவுள் போல எண்ணி வணங்கப்படுகிறார்கள். அதுபோன்ற உணர்வுகளை முதியவர்கள் பெற்றிருந்தாலும் கூட அதை அவர்கள் வெளியில் சொல்ல - எழுதிக் காட்ட நீங்கள் எல்லாம் பணி புரிகிறீர்கள் என்பதை நான் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஜனநாயகம் காப்பாற்றப்பட பண்பாட்டை - கல்வியை - ஒற்றுமையை - முதியோர்களுக்குக் காட்ட ஒட்டுமொத்தமாக உலாவரச் செய்யும் முயற்சி தேவை.

**(14-12-82ல் வயது வந்தோர் கல்வி கருத்தரங்கில் ஆற்றிய உரையிலிருந்து)**


இந்த இதழுடன் இலவச இணைப்பு

1983-ஆம் ஆண்டு நாட்காட்டி



# பத்திரிகையாளர்களின் நண்பன் - தமிழக அரசு

சென்னை செய்தியாளர் சங்கத்தின் வெள்ளிவிழாவில் கலந்து கொள்கின்ற ஒரு மிகச் சிறந்த வாய்ப்பை அளித்திருக்கின்ற இந்தச் சங்கத்தின் நிர்வாகிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் முதலில் எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்! இந்தச் சங்கத்திலே எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்ற கணக்கைவிட, இவர்கள் ஆற்றுகிற பணியின் மூலம் இந்த நாட்டு மக்களுக்கு எத்தகைய சேவையைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் கணக்கிலே எடுத்துக் கொள்ளக்கூடிய செய்தியாகும்.

இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகள் இதைக் கட்டிக்காத்து, இந்த வெள்ளிவிழாவை கொண்டாடுகிறவர்களை நான் இந்த நாட்டின் சார்பாக, குறிப்பாகத் தமிழக மக்களின் சார்பிலும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் சார்பாகவும் வாழ்த்தவும் பாராட்டவும் நன்றி தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். 25 ஆண்டுகள் இது போன்ற சங்கங்களை உருவாக்கி நடத்துவது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல.

இந்தச் சங்கத்தினுடைய விழாவில் கலந்து கொண்டு இதிலே வந்து உரையாற்றிய நமது மதிப்பிற்குரிய அமரர் பண்டிதநேரு அவர்கள் உரையாற்றியதையும், பிறகு பெருந்தலைவர் காமராஜர், முன்னாள் முதல்வர் திரு. பக்தவச்சலம், அமரர் பேரறிஞர் அண்ணா போன்றவர்களெல்லாம் இந்தச் சங்கத்தில் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கியிருக்கிற சூழ்நிலைகளையும் எண்ணுகிற நேரத்தில், அதனுடைய 25-வது ஆண்டு விழாவிலே இந்த தகுதி அளவுக்கு அருகில் கூட வரமுடியாத என்னைக் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைத்த நண்பர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால்-அவர்கள் என்னை அழைத்திருக்கிறார்கள் என்பதைவிட தமிழக முதல்வர் அவர்களை இங்கே அழைத்

முதல்வர் அவர்கள் வருகிற இடத்திலே அவர்கள் வர இயலாமல் போன சூழ்நிலையில் அவருக்குச் செய்தியைச் சொல்லுகிற அந்தத் தொண்டனாக இருக்கிற என்னை அவர்கள் அழைத்திருக்கிறார்கள் என்று நான் எடுத்துக் கொள்கிறேன்.

இந்தச் சங்கத்தின் நிகழ்ச்சிகளில் இதற்கு முன்னாலும் கலந்து கொண்டிருக்கிறேன். இவர்கள் முதல் முயற்சியாக இந்தச் சங்கத்தினுடைய உறுப்பினர்களுக்கு 'ஆயுள் காப்பு உறுதி' வழங்குகிற ஒரு நிகழ்ச்சியிலேயும் கலந்து கொள்கிற வாய்ப்பை அன்றைக்குப் பெற்றேன். அதைப்போல இந்தச் சங்க உறுப்பினர்களுக்கு மருத்துவ வசதியை அளிப்பதற்கான திட்டத்தை உருவாக்கி, அதை நமது அருமை நண்பர் ராயல் என்பீல்டு கம்பெனி நிர்வாக இயக்குநர் அவர்கள் இங்கே நன்கொடையாக அந்த 'பிரிமியத் தொகை'யை அளித்து அந்த பாலிசிகளை வழங்குகிற அந்த வாய்ப்பினையும் இந்த வெள்ளிவிழாவில் செய்தியாளர் சங்கத்தின் நிர்வாகிகள் அளித்திருக்கிறார்கள். அதை மிகப் பெருமையாக நான் கருதுகிறேன்.

இந்தச் சங்கத்தின் கோரிக்கையைப் பொறுத்தவரை ஏற்கனவே இச் சங்கத்திற்கென்று கட்டடம் கட்டுவதற்காக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிற செய்தியை நம்முடைய நிருபர்கள் சங்கத்தலைவர் வரவேற்புரையில் தெரிவித்திருக்கிறார்கள். தினசரி சந்தித்துக் கொண்டிருக்கிற நமது செய்தியாளர்கள் இந்தக் கருத்தை முன்னமே சொல்லியிருக்கலாம். சொல்லியிருந்தால் இதற்குள் இந்நேரம் அந்த இடமே அவர்களுக்கு வந்து இருக்கும்.

ஆகவே அப்படி அரசு ஆணை பிறப்பித்து இடம் ஒதுக்கப்பட்டிருக்குமேயானால் அது விரைவிலேயே உங்களுக்கு எந்தத் தடையும் இல்லாமல் கிடைப்பதற்கு தமிழக அரசு

வர் சார்பிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே இந்தச் சங்கத்தை நடத்துவதற்கு வேறு எந்த உதவிகள் அரசாங்கத்திடம் இருந்து வரவேண்டும் என்று விரும்பினாலும் அதை அரசாங்கம் செய்து தரும். அதை மீண்டும் இந்த நேரத்திலே அவர்களுக்கு நினைவுபடுத்த மட்டுமே நான் விரும்புகிறேன். ஆதலால் தான், இன்றைக்கு விவாதத்திற்குள்ள பிரச்சனையாக இருக்கிற இந்தச் சட்டத்திருத்தம் 292(ஏ) இருக்கிறதே அதைப்பற்றிக் கூட மாண்புமிகு மத்திய செய்தித்துறை அமைச்சர் குறிப்பிட்டு இது ஒரிசாவில் நிறைவேற்றியபோது எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. தமிழகத்தில் நிறைவேற்றியபோது எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இப்போது பீகாரில் நிறைவேற்றியபோது எதிர்ப்பு தெரிவிக்கிறார்களே என்று ஆச்சரியப்பட்டார். நான் மத்திய அமைச்சர் அவர்களுக்கு அன்போடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக அரசின் மீது அவ்வளவு நம்பிக்கை நமது செய்தியாளர்களுக்கு - பத்திரிகையாளர்களுக்கு இருக்கிறது.

அதனால்தான் 20 ஆண்டுகளுக்கு மேலாக நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றியோ சட்டத்தைப் பற்றியோ, அவர்கள் கவலைப்படாமல் இருந்தார்கள் என்றால், தமிழக அரசு கையிலே ஒரு ஆயுதத்தை எடுத்துக் கொள்கிறது என்றால், அது தற்காப்பிற்காக எடுத்துக் கொள்கிறதே தவிர மற்றவர்களைத் தாக்க அல்ல. அதிலும் குறிப்பாக மிகவும் அன்பிற்குரிய பத்திரிகையாளர்களைத் தாக்குவதற்கு அல்ல என்ற நம்பிக்கையை நம்முடைய பத்திரிகையாளர்களுக்கு உருவாக்குகிற அடிப்படையை தமிழக அரசு, இன்றைக்கு மட்டுமல்ல அன்றைக்கு இருக்கிற அரசு ஏற்படுத்தியது என்பதினால் தான் 292(ஏ) திருத்தம் கொண்டுவந்தபோதும் யாரும் அதைப்பற்றி அஞ்சவில்லை - கவலைப் படவில்லை.

தண்டனையைக் கடுமையாக்கி அந்தத் தண்டனையை உயர்த்திய காரணத்தினாலே தான் ( Non-bailable ) திருத்தத்தை மாற்றிய நேரத்திலும் - இது சட்டத்தின் விளைவாலே வருகிறதே தவிர யாரையும் தண்டிக்க வரவில்லை என்ற உணர்வு நமது மாநிலத்திலுள்ள பத்திரிகையாளர்களுக்கு நிறைவாக இருந்தது, இருக்கிறது... இன்னும்

**மாண்புமிகு செய்தி,அறநிலையத்துறை அமைச்சர்**

# திரு. இராம. வீரப்பன்

இருக்கிறது என்ற நம்பிக்கையை அரசு காப்பாற்றும் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

அப்படியானால் பீகார் அரசைக் குறை சொல்கிறேனோ என்று நமது மத்திய செய்தித்துறை அமைச்சர் அவர்கள் எண்ணிவிடக் கூடாது. ஒரிசா அரசு மீது கோபப் படாமல் தான் இருந்திருக்கிறார்கள். ஆகவே சூழ்நிலைக்கேற்ப இந்தச் சில பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன. அல்லது தோன்றுகிறதே தவிர அது சட்டத்தினால் மட்டும் அல்ல என்பதை நாம் உணர்ந்து கொண்டாக வேண்டும். மத்திய அமைச்சருக்குக்கூட நமது விளக்கத்தைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்

## பத்திரிகைகளின் பொறுப்பு

**திரு என். கே. பி. சால்வே**
**(மாண்புமிகு இந்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர்)**



'பொறுப்புள்ள பத்திரிகை தர்மத்தை வளர்க்கப் பத்திரிகையாளர்கள் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். பத்திரிகைகளின் உரிமைகள் பறிக்கப் படமாட்டாது என்பதில் அரசு சார்பில் உறுதி அளிக்கிறேன். அதே போலப் பத்திரிகைகளும் பொறுப்பில்லாமல் எழுதுவதையும், தவறான செய்திகளைப் பிரசுரிப்பதையும் நிறுத்த வேண்டும். இந்திய ஜனநாயக அமைப்பில் பத்திரிகைச் சுதந்தரம், வழங்கப்பட்ட உரிமை தான். ஆனால் பொறுப்பற்ற பத்திரிகை தர்மம் தவிர்க்கப்பட வேண்டும்

(நிருபர்கள் சங்க வெள்ளிவிழாவில்)

(Non-bailable) என்று தமிழக அரசு தானே கொண்டுவந்திருக்கிறார்கள் என்று உதாரணம் காட்டிப் பேசப்படுகிறது என்று எங்களுக்குச் செய்தி வந்திருக்கிறது. நீங்கள் ஒரு அமைப்பை-அடிப்படையை-அங்கே இருக்கிற மிகப் பெரிய வேறுபாட்டை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே என் பணிவான வேண்டுகோள்.

தமிழகத்தைப் பொறுத்தவரை நீதியையும் நிருவாகத்தையையும் ரொம்ப நாளைக்கு முன்னாலே தனியாகப் பிரித்துவிட்டோம். இங்கு யாரையாவது அதிகாரியைக் கைது செய்தால் அந்த அதிகாரியே அந்த நபரை ஜாமினில் விடமுடியாது என்பதுதான் (Non-bailable) கைது செய்யப்பட்டவர் நீதிமன்றம் போய் ஒரு மாஜிஸ்திரேட்டிடம் தன்னை ஜாமீனில் வெளிக் கொண்டுவரத் தடை விதிக்கவில்லை. அதற்குக் காரணம் நீதி வேறு, நிருவாகம் வேறு என்று பிரிக்கப் பட்டது. ஆனால் பீகார் மாநிலத்தில் அப்படி இல்லை. யார் கைது செய்கிறார்களோ அவரேதான் இன்னொரு இடத்தில் போய் மாவட்ட மாஜிஸ்திரேட்டாக இருந்துகொண்டு ஜாமீனுக்கு வரும்போது, ''இவரை விடுவதா வேண்டாமா'' என்பதில் நீதிபதியாக இந்த நிருவாகியே இருக்கிறார் என்ற மிகப்பெரிய வேறுபாட்டை அருள்கூர்ந்து அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகவே கைது செய்கிற போலீஸ் அதிகாரி அவரை உடனடியாக ஜாமீனில் விட முடியாது என்பதுதான் இன்றைக்கு இருக்கிற சட்டத்திருத்தம். அந்த

கூட பிறகு தண்டனையை அதிகப்படுத்தும் போது அது இயற்கையாகவே அந்தச் சட்ட விதிகளின்படி அது (Non-bailable) வந்து விடுகிறது.

அப்படி ஏற்பட்டதே தவிர, திட்டமிட்டுச் செய்யப்பட்டது அல்ல என்பதை நான் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். இங்கேகூட நீங்கள் ஒன்றை உணர்ந்து கொள்ளவேண்டும். சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றது. அது ( Reasonable Restriction ) என்று அது இந்திய அரசின் சட்டத்திலேயே உரிமை தருகிறது. அந்தக் கருத்துச் சுதந்தரம், பேச்சுச் சுதந்தரம், பத்திரிகைச் சுதந்தரம் என்று பேசப்பட்டாலும் சுதந்தரங்கள் எல்லாம்இந்த நாட்டு மக்களுக்காகத் தான். ஒருவருக்கு எழுத்துச் சுதந்தரம் என்றால் அவருக்காக அல்ல எழுத்துச் சுதந்தரம் அவர் இந்த நாட்டு மக்களுக்காக எழுதுகிறார். அதனால் தான் இந்தச் சுதந்தரம். அவர் இந்த நாட்டு மக்களுக்காகப் பேசுகிறார். அதனால்தான் பேச்சுச் சுதந்தரம் வேண்டும். ஆகவே நாட்டு மக்கள் நன்மைக்காகப் பத்திரிகை நடத்துகிறார்; அதனால் பத்திரிகைச் சுதந்தரம் வேண்டும். அதை விட்டுவிட்டு நான் என் இஷ்டத்திற்கு எதையாவது பேசுவேன், எதையாவது எழுதுவேன் எனக்குச் சுதந்தரம் வேண்டும் என்று கேட்பதற்காகச் சில சுதந்தரங்களும் வரவில்லை. அந்த அடிப்படையில் நாமும் கேட்டுக் கொண்டிருக்கவில்லை.

அப்படிக்கேட்டால், அது எங்கே போய் நிற்கும் என்றால், ஒரு விபச்சாரி 'எனக்குச் சுதந்தரம் உண்டு; இந்த நாட்டில் விபச்சாரம் செய்யச் சுதந்தரம் வேண்டும்-ஈடுபடுவதற்கு' என்று கேட்பது போல மாறிவிடும். ஆகவே பேச்சுச் சுதந்தரம், பத்திரிகைச் சுதந்தரம், எழுத்துச் சுதந்தரம் வேண்டும் என்பதெல்லாம் யாருக்காக? இந்த நாட்டு மக்களுக்காக! இந்த நாட்டு மக்களுக்காக எழுதும் ஒரு எழுத்தாளனை - செய்தியாளரை - ஒரு பத்திரிகையாளரைத் தடுக்கக்கூடாது. எப்போது? உண்மையைச் சொல்லுகிறபோது. இந்த நாட்டு மக்களுக்கு நன்மையைத் தேடித்தரும் போது. மறைக்கப்பட்ட விவரங்களை வெளியில் கொண்டுவரும்போது - தடுக்கக் கூடாது. அதுதான் சுதந்தரம்.

நம்முடைய பண்டித நேரு அவர்கள் உரையாற்றியதிலிருந்து எடுத்துச் சொன்னார்கள். உண்மைதான்! இது வெறும் கோஷம் அல்ல, பத்திரிகைச் சுதந்தரம் என்பது இன்றைக்கு வெறும் கோஷமாக எடுத்துக் கொள்ளமுடியாது என்பதுதான் இன்றைக்குள்ள பிரச்சனை! இது வெறும் கோஷம் அல்ல. இந்த நாட்டு மக்களுடைய வாழ்வை மாற்றியமைக்கிற கோஷம்! மாற்றி அமைக்கிற பிரச்சனை.


இந்த நாட்டை நாம் எந்த அளவுக்கு உயர்த்தப்போகிறோமோ அதற்கு அடிப்படை அமைக்கிற பிரச்சினை. ஆகவேதான் இதில் வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றைக்கு வளர்ந்து வந்திருக்கிற சூழ்நிலையில் எப்படியெல்லாம் பிரச்சினைகள் வந்துகொண்டிருக்கின்றன என்பதையும் நாம் பார்க்கிறோம். அதனால்தான் தமிழகத்தில் இந்தச் சட்டத்திருத்தம் வந்த அந்தக் காலத்திலேயும் சரி, இந்தக்காலத்திலேயும் சரி, நல்ல பத்திரிகையாளர்கள் நிரம்பியிருக்கிற தமிழகத்தில் இந்தச் சட்டத் திருத்தம், நல்ல பத்திரிகையாளர்களை ஒன்றும் செய்யாது என்ற நம்பிக்கையில் சும்மா இருந்தார்கள். இன்றைக்கும் சும்மா இருக்கிறார்கள். அப்படி ஒரு வேளை வெளியிலே சந்தேகம் ஏற்பட்டுவிட்டதே என்கிற காரணத்திலேதான் தமிழக அரசே பத்திரிகையாளர்களை எல்லாம் அழைத்து, என்ன சந்தேகம், ஏன் சந்தேகப்படுகிறீர்கள்? 'என்று கேட்பதற்காக குழு அமைத்திருக்கிறது. அதற்கும் தமிழகம்தான முன்னோடியாக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பத்திரிகையாளர்களைப் பார்த்துப் பயப்படுகிறவர்களும் இங்கே இல்லை. அல்லது பயமுறுத்துகிற பத்திரிகையாளரும் இங்கே இல்லை. ஆனால் பத்திரிகையாளர்கள் என்ற பெயராலே இன்றைக்குச் சிலர் நுழைந்துகொண்டு அந்தப் பத்திரிக்கையாளர் கூட்டத்தில் வந்துகொண்டு பெரிய திருவிழாக் கூட்டத்தில் 2 பேர் ஏன் பிக்பாக்கெட்அடிக்க வருகிறவன்போல மிகப் பெரிய கூட்டத்திற்குள்ளே ஒரு நாலு பேர் தவறு செய்ய உள்ளே நுழைவதுபோல், இன்றைக்குப் பத்திரிகையாளர் உரிமையைப் பயன்படுத்துவதற்கு இந்தக் கூட்டத்தில் உள்ளே நுழைந்திருக்கிறார்களே அவர்களைக் கண்டுபிடிப்பதற்குத்தான் இப்படிப்பட்ட சில ஆயுதங்கள் தேவைப்படுகின்றன. சில இடங்களில் செக்போஸ்ட்வைத்திருக்கிறார்கள். அதை பல இலாக்காக்கள் நிருவகிக்கின்றன-விற்பனை வரித் துறை வைத்திருக்கிறது, வனத்துறை வைத்திருக்கிறது- சுங்க இலாகா வைத்திருக்கிறது. ஆகவே பாதையில் பயணம் செய்கிறவர்கள் எல்லாம் காரில் பயணம் செய்கிறவர்களெல்லாம் ஏன் இந்த செக்போஸ்ட்டை வைத்திருக்கிறார்கள் என்று கேட்பதில்லை. காரணம் அவர்களுக்குத் தெரியும். இது நமக்கல்ல. திருடிக்கொண்டு வருகிறவர்களுக்கு-வரி கட்டாமல் வருகிறவர்களுக்கு அல்லது வனத்துறைப் பொருளை வெட்டிக் கொண்டு வருகிறவர்களுக்கு இந்த ''செக்போஸ்ட்'' என்பது மற்றவர்களுக்கெல்லாம் தெரியும். அதனாலே செக்போஸ்ட்டைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

அப்படி ஒருவேளை அந்த செக்போஸ்ட், சில வேளைகளில் நல்ல பயணிகளைக்கூடத் தடுத்து நிறுத்தும். தடுத்து நிறுத்தினால் நல்லவர்களாக இருப்பவர்கள் இறங்கி அந்த 'செக்'

## மருதுபாண்டியன் போக்குவரத்துக் கழகம்

**1983-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் காரைக்குடியைத் தலைமையகமாகக் கொண்டு, மருதுபாண்டியன் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படவிருக்கிறது.**

தற்போதுள்ள பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அதன்வசமுள்ள 1,219 பேருந்துகளில் 350 பேருந்துகள் புதியபோக்குவரத்துக்கழகத்திற்குக் கொடுக்கப்படும். மருதுபாண்டியன் போக்குவரத்துக் கழகம் புதுக்கோட்டை மற்றும் கிழக்கு இராமநாதபுரம் பகுதிகளில் தனது பேருந்துகளை இயக்கும். பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மதுரை மற்றும் மேற்கு இராமநாதபுரம் பகுதிகளில் இயங்கும்.



**நிருபர்கள் சங்க உறுப்பினர்களுக்கு 'மருத்துவ வசதி அளிப்பதற்கான திட்டத்தை' மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் துவக்கி வைத்தார்.**

போஸ்ட்டில் இருக்கிறவர்களிடத்திலே "ஐயா, நாங்கள் இந்தக் காரிலே வருகிறவர்கள். இந்த ஊருக்குப் போகிறவர்கள். அந்தத் தவறைச் செய்கிறவர்களல்ல. உங்களுடைய சந்தேகம் நியாயமானது. ஆனால் நாங்கள் உங்கள் சந்தேகத்திற்குரியவர்கள் அல்ல'' என்றுசொல்லிவிட்டு அந்த செக்போஸ்ட்காரன் அந்த செக்போஸ்ட்டை எடுத்தபிறகு போகவேண்டும். அதுதான் (Reasonable Restriction) ஆனால் செக்போஸ்ட் போட்டிருக்கிறது என்று வருகிறவன், எனக்கு செக்போஸ்ட்டா? என்னுடைய பயணத்தைத் தடுக்க செக்போஸ்ட்டா? ஆகவே நான் நிறுத்தமாட்டேன். நான் தாண்டிப்போவேன். அல்லது எடுத்துக் கொண்டு போவேன் என்று நல்லவர்கள் போனாலும் அது குற்றம் தான். நல்லவர்கள் போனாலும் அது சந்தேகத்திற்கு இடமளித்துவிடும்.

ஆகவே செக்போஸ்ட் போன்று ஒன்று இருந்தால் அதை நிறுத்தி தெளிவுபடுத்திவிட்டுப் போகமுயலவேண்டுமே தவிர தாண்டிப்போக வேண்டும் என்பது அது சமுதாயத்திற்கு நல்லது அல்ல; நாட்டை வளர்ப்பதற்கும் பயன்படாது-காரணம் இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஒரு செய்தியைப் பார்த்தீர்கள். ஜோலார்பேட்டை ரயில்வே கேட் காவலாளியைக்கட்டிப் போட்டு, அடித்துப் போட்டு அதை மூடிவைத்துவிட்டு அந்த வழியிலுள்ள பஸ்ஸை, கார்களை அதிலே இருந்தவர்களையெல்லாம் காயப்படுத்தி, நகைகளை எல்லாம் திருடிக்கொண்டு போனார்களே அப்படித் திருடிக்கொண்டு போன நிகழ்ச்சியைப் பார்த்தபோது, சில நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தால் ''இது தவறு. இது சுதந்தரத்தில் தலையிடுவது. மனித நடமாட்டத்தையே கட்டுப்படுத்துவது'' என்று சொல்ல ஆரம்பிப்போமானால் நமக்கே எப்படிப் பாதுகாப்புக் கிடைக்கும். அந்தக் காரில் நான் இல்லை- அந்த அடி வாங்கியவர்களில் என் மனைவி இல்லை, என்பதினாலே அங்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை தவறு என்று ஆகிவிடுமா?

எனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்றால் நான் எங்கே வேண்டுமானாலும் போய் சொல்லுவேன். ஆனால் மற்றவர்களுக்கு ஏற்படுகிறபோது எடுக்கப்படுகிற பாதுகாப்பு நடவடிக்கை தவறு என்று விமர்சிக்க ஆரம் ஏற்படுத்தமுடியும்? ஆகவேதான் (Reasonable Restriction) என்ற வார்த்தைக்கு மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. - பொருள் இருக்கிறது.

பண்டித நேரு அவர்கள் சொன்னது போல எந்தச் சுதந்தரம் என்றாலும் அது பத்திரிகைச் சுதந்தரம் ஒன்று மாத்திரம் தனியாக வந்துவிடுவதில்லை. இந்த நாட்டில் சுதந்தரமாக வாழுவதற்காகத்தான் நாம் சுதந்தரமே பெற்று இருக்கிறோம். ஆனால் இந்த சுதந்திரம் யாருக்காக? நான் எழுத்துச் சுதந்தரம் கேட்கிறேன். என்றால் எனக்காக எழுதுகிறேன் என்றால் நான் எதைவேண்டுமானாலும் எழுதிப் பணம் சம்பாதிப்பதற்கு -எனக்குச் சுதந்தரம் தராது. அந்தச் சுதந்தரம் கிடைக்காது. 'மக்களுக்கு எழுதுகிறேன், அதை, நீங்கள் தடுக்கிறீர்கள் என்றால் அதில் நியாயம் இருக்கும்; ஆகவேதான் அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் பத்திரிகை சுதந்தரத்தைப் பற்றி- எழுத்துச் சுதந்தரத்தைப் பற்றி-பேசுகிற நேரத்திலே நம்முடைய மாநிலத்திலே இருக்கிற பத்திரிகையாளர்கள் இங்கே பெரியவர்களெல்லாம் பாராட்டியிருக்கிறார்களே அந்தத் தகுதியை நீண்ட காலமாக பெற்றுக் கொண்டிருப்பவர்கள். அதனால் தான் இங்கே அமைதி இருக்கிறது. இந்த அமைதியான குட்டையைக் குழப்பச் சிலபேர் வந்திருக்கிறார்கள். நாமெல்லாம் இன்றைக்கு மிகச் சிறந்த வரலாற்றைப் படைத்துக் கொண்டிருக்கிற சிறந்த பத்திரிகைகளைத் தமிழகம் பெற்றிருக்கிறது.

மிகச் சிறந்த எழுத்தாளர்களை ஆசிரியர்களை-பத்திரிகையாளர்களை - செய்தியாளர்களைத் தமிழகம் பெற்றிருக்கிறது.

இந்தியா முழுவதும் வழிகாட்டும் ஆற்றல் மிக்கவர்களை-நேர்மையானவர்களைத் தமிழகம் பெற்றிருக்கிறது. அதனால்தான் திரு.சால்வே அவர்களே! இங்கே கொந்தளிப்பு இல்லை! இங்கே கிளர்ச்சி இல்லை! அவநம்பிக்கை இல்லை! எங்களை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்! நாங்கள் அவர்களைப் புரிந்து கொண்டிருக்கிறோம். எங்களை என்று, இன்றைக்கு இருப்பதினால் நான் சொல்லுகிறேன். முன்னாலே சட்டத்திருத்தம் கொண்டுவந்தபோதும் அவர்களை இவர்கள் புரிந்து கொண்டிருந்தார்கள். இவர்களை அவர்களும் புரிந்து கொண்டிருந்தார்கள். எனவே தான் தமிழகத்தின் சார்பில் இந்தச் சட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் கொண்டுவந்தாலும் வேறு எங்கேயும் எதிரொலித்தாலும் இதனுடைய விளைவுகளைப் பற்றிப் பரிசீலிப்பதற்கு குழுவை அமைத்திருக்கிறார்கள் என்பதை நான இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.


சில காளான்கள் முளைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே அந்தக் காளான்களைக் கிள்ளி எறியவேண்டும். வயலுக்குள் இருக்கிற விவாசாயி அரிவாளைக் கையில் எடுத்துக் கொண்டு போனால் அவன் ''களை'' எடுக்கப் போகிறான் என்று நம்பவேண்டுமே தவிர, விளைகின்ற பயிரையே அவன் அறுக்கப் போகிறான் என்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது. ஆகவே, 'களையாக இருப்பவர்கள் சப்தம் போடுவார்கள். களை போடுகிற சப்தத்திற்குப் பயிர்கள் ஆதாவாக இருக்கக்




பயிர் எது! களை எது? அதை நீங்கள் தான் காட்ட வேண்டும். ஆகவே தமிழ் மக்களின் சார்பில்-ஏழை எளியவர்கள் சார்பில்- படிக்காத பாமரர்கள் சார்பிலேயும் இன்றைக்கும் வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்கள் சார்பிலேயும் நான் பத்திரிகையாளர்களை-செய்தியாளர்களை -நம்பிக்கையோடு கேட்கிறேன். தமிழகத்திலுள்ள செய்தியாளர்கள் இதற்கு வலு அளிப்பார்கள். உரம் அளிப்பார்கள்-இதை ஊக்குவிப்பார்கள் என்ற தைரியத்தினால் தான் அந்த ஏழை மக்களின் சார்பிலே இந்தப் பிரச்சினைகள் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேனே தவிர, அரசு சார்பிலோ-அமைச்சர் என்ற முறையிலோ இந்தக் கருத்தை எடுத்து வைக்கவில்லை என்று தெரிவித்து, நாம் அனைவரும் சுதந்தரத்திற்காகப் பாடுபடுவோம்.

எழுத்துச் சுதந்தரம் மாத்திரமல்ல· எல்லாச் சுதந்தரமும் வந்தாகவேண்டும்; என்னைப் பற்றி இழிவாக எழுதுகிறானே அவனைத் தடுப்பதற்கு எனக்குச் சுதந்தரம் இல்லை. அதற்கும் வழிகண்டாக வேண்டும். ஆகவே அப்படிப்பட்ட பிரச்சினைகளை நாமெல்லாம் கலந்து பேசி ஒரு முடிவை எடுக்கத்தான் தமிழக அரசு அந்தக் குழுவைப் போட்டிருக்கிறது. அந்தக் குழுவைப் போட்டதே செல்லாது-சட்டப்படி செல்லாது என்று வழக்குமன்றத்திற்குப் போயுள்ள விசித்திரத்தைப் பார்க்கிறோம். முன்னே போனால் இடிக்கிறது. பின்னே போனால் உதைக்கிறது என்கிறார்கள். ஆகவே கடிக்கிற குதிரை எது? உதைக்கிற குதிரை எது? ஆளைச் சுமந்து கொண்டு போகிற குதிரை எது? என்பதை நீங்கள் தான் நாட்டிற்கு அடையாளம் காட்ட வேண்டும் என்று சொல்லி, இவ்வளவு மிக சிறந்த விழாவில் கலந்து கொள்ள அழைத்த உங்களின் அன்பு உள்ளத்திற்கு என்னுடைய அன்பைத் தெரிவித்து தமிழக அரசின் சார்பிலே குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இருக்கிற எழுத்தாளர்கள் அனைவரையும் நண்பராகக் கருதுகிறார். நீங்களும் அவரை நண்பராகக் கருதுகிறீர்கள். ஆகவே அந்த நட்புறவோடு நாம் சட்டத்தின் பக்கங்களில் விதிகளைத் தேடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஒருவருக்கு ஒருவர் புரிந்து கொண்டுவிட்டால் நாம் எல்லோரும் நண்பர்கள்தாம். சகோதரர்கள்தாம். சந்தேகம் என்று வந்துவிட்டால் தொட்டதெல்லாம் சந்தேகம்தான். கணவன் மனைவி இடத்தில் சந்தேகம் பிரித்துவிடுகிறது என்றால், வாழ்க்கையிலே பிரிப்பதற்குக் கேட்கவேண்டியது இல்லை. ஆகவே அந்தச் சந்தேகங்களையெல்லாம் தாண்டி நாம் நம்முடைய உறவை இந்த நாட்டு மக்களின் நன்மைக்காக வளர்ப்போம்! பாதுகாப்போம்! என்ற உறுதியை இந்த இருபத்தைந்தாவது வெள்ளி விழாவில் நாம் அனைவரும் எடுத்துக்கொண்டு, செய்தியாளர்களின் நன்மைக்கு பழி வாங்கப்படுகிறார்களே அவர்களைப் பாதுகாப்பதற்கு-கடைசிக் காலத்திலே கைவிடப்படுகிறார்களே -நிராதரவாக அவர்களுக்கு உதவி செய்வதற்கு நாம் அனைவரும் சேர்ந்து இந்தச் சங்கத்தின் மூலம் பாடுபடுவோம்!

[1.1.'83 அன்று சென்னை நிருபர்கள் சங்க வெள்ளி விழாவில் ஆற்றிய பேருரையிலிருந்து]





# வளம் பெருக்கும் குழாய்க் கிணற்றுக் கழகம்

**தமிழ்நாடு அரசு 1982-ஆம் ஆண்டில் உருவாக்கிய தமிழ்நாடு குழாய்க்கிணற்றுக் கழகம் தமிழ் நாட்டில் 1000.16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டு மாவட்டங் களில் ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டங்களை வகுத்து வருகிறது. அதன் பணிகளை விளக்கி தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகத் தலைவர் திரு ம. சின்னசாமி, எம்.எல்.ஏ., அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:**

பேட்டி : அ. மருதவிநாயகம்

**தமிழ்நாடு குழாய்க்கிணற்றுக் கழகம் எந்த ஆண்டு துவக்கப்பட்டது? அதன் நோக்கம் என்ன?**


19.3'82 அன்று இந்தக் கழகம் துவக்கப் பட்டது. தமிழகத்தில் சிறு, நடுத்தர விவ சாயிகளின் வறுமை நிலையைப் போக்கி, துயர் துடைக்கும் நோக்கோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாடு குழாய்க்கிணற் றுக்கழகம் என்னும் இந்த வாரியத்தை உரு வாக்கினார்கள்.

வறண்ட வானம் பார்த்த மேட்டுப் பக் கத்தில் உள்ள சிறு மற்றும் நடுத்தர விவசாயி களுடைய நிலங்களில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, நீர் இறைக்கும் இயந்திரங்கள் பொருத்தி, சமுதாயக் கிணறுகளாகப் பரா மரித்து, பாசன வசதிகளைப் பெருக்குவதே இந்தக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

தமிழகத்தின் மொத்தப் பரப்பான 130 லட்சம் எக்டரில் 60 லட்சம் எக்டர் பரப்பளவு வேளாண்மை செய்யப்படுகிறது. இதில் 32 லட்சம் எக்டர் நிலப்பரப்பு நீர்ப் பாசன வசதிகளைப் பெற்றுள்ளது. மீதமுள்ள 28 லட்சம் எக்டர் நிலப்பரப்பு மானாவாரி நிலப்பரப்பாக உள்ளதால் பாசனத்திற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அப்படிப் பட்ட நிலங்களுக்குக் குழாய்க் கிணறு அமைத்து, நிலத்தடி நீரைப் பயன்படுத்திப் பாசன வசதியைப் பெருக்கி, பசுமைப் புரட்சி ஏற்படுத்துவதுதான் இந்த வாரியத்தின் நோக்கமாகும்.

**இந்த வாரியத்தின் மூலதனம் எவ்வளவு?**

இந்தக் கழகத்திற்குத் தமிழ்நாடு அரசு 3 கோடி ரூபாய் மூலதனம் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.



### உறுப்பினர்கள் யார்? யார்?

தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகத்தின் பணிகளைத் திட்டமிடவும், அறிவுரை வழங்கவும் 16 உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆணைக் குழுவை அரசு அமைத்துள்ளது. இக்கழகத்தின் ஆணைக்குழுவின் இயக்குநர்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

1. திரு ம. சின்னசாமி, பி.எஸ்.சி., பி.எல்.,எம்.எல்.ஏ.,தலைவர்.
2. திரு ப. செல்வம், இ.ஆ.ப. நிர்வாக இயக்குநர்.
3. திரு எம். சின்னராஜ், எம்.எல்.ஏ.,
4. திரு ஜே.சி.டி. பிரபாகரன், எம்.எல்.ஏ.,
5. திரு வி. சத்தியமூர்த்தி, எம்.எல்.ஏ.,
6. திரு எஸ்.செம்மலை, எம்.எல்.ஏ
7. திரு சி. சீனிவாசன், விவசாய சங்கத் தலைவர்
8. திரு கே. சந்திரசூடன், இ.ஆ ப கூட்டுறவுத்துறைப் பதிவாளர்
9. திரு டி ஏ.எஸ். பிரகாசம், இ.ஆ.ப., நிதித்துறை இணைச் செயலர்.
10. திரு கே.மாதவசர்மா, இ.ஆ.ப. முதுநிலைச் செயலாளர், பொதுப்பணித்துறை.
11. திரு எஸ்.ஜே.அம்புரோஸ், பி.இ. தலைமைப் பொறியாளர் (பொது சிறுபாசனம்)
12. திரு ஏ. மோகனகிருஷ்ணன், பி.இ., தலைமைப் பொறியாளர், பாசனம்.
13. திரு ஆர்.குப்புசாமி, பி.இ. தலைமைப் பொறியாளர், நிலநீர்
14. திரு டாக்டர் ஆர். சக்திவடிவேலு, இயக்குநர், நீரியல் ஆய்வுத்துறை, அண்ணா பல்கலைக் கழகம்.
15. திரு ஆர்.கே. சிவனப்பன், பி.இ., முதல்வர், விவசாயப் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர்.
16. திரு வி.டி.துரைராஜ், இ.ஆ.ப. இயக்குநர், வேளாண்மைத்துறை.

### எந்தெந்த மாவட்டங்களில் இந்த அமைப்பு உள்ளது?

செங்கற்பட்டு, திருச்சி, தென்னார்க்காடு, மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களில் நான்கு மண்டல அலுவலகங்கள் உள்ளன.

### மாவட்ட அளவில் ஆற்றியுள்ள பணிகள் யாவை?

ஆதிதிராவிடர் மக்களுக்குப் பாசனக் குழாய்க் கிணறுகள் அமைக்க இவ்வாரியத்தின் பல்வேறு பணியாளர்களும் இணைந்து செயலாற்றுகின்றனர். பொதுப்பணித்துறையின் நிலநீர் பிரிவினரின் புள்ளி விவரங்களைக் கொண்டு நீர் மிகுந்து இருக்கும் பகுதிகளில் முடிவு செய்யப்பட்டு, இவ்வாரியத்தின் வருவாய்த்துறை அலுவலர்கள், நில அளவை அலுவலர்கள், பொறியாளர்கள், நிலவியல் நில இயற்பியல் ஆய்வாளர்கள் அனைவரும் இணைந்து சிறந்த தொழில் நுட்ப ஆய்வுகளைச் செய்து, குழாய்க் கிணற்றுத் திட்டங்களைத் தீட்டுகின்றனர்.

இதுவரை 3,154.03 ஏக்கர் பாசனவசதி பெறும் வகையில் செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ரூ.194 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### வாரியத்தின் எதிர்காலத் திட்டங்கள் என்ன?


மாவட்டங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான திட்டங்கள் தயாரித்து, செயல்படுத்த அரசு அனுமதி பெற்றுள்ளது. தமிழக குழாய்க் கிணற்றுக் கழகம் படிவுப் பாறைகள் அதிகம் இருக்கும் பகுதிகளான செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சை

---

நீர் எலிகள் வடஅமெரிக்காவில் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவை, பாதிநேரம் நீரிலும் பாதி நேரம் நிலத்திலுமாக வாழ்க்கை நடத்துகின்றன.

நீர் எலிகள் 4 முதல் 10 குட்டிகள் வரை போடும். ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறை இவை குட்டிபோடுகின்றன.

நீர் எலிகளின் தோல் மிகவும் மென்மையாக இருக்கும். இந்த மென்மையான தோலுக்கு உலகின் பல பகுதிகளிலும் கிராக்கி உள்ளது.



திருச்சி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களிலே குழாய்க்கிணறு அமைக்கும் பணியில் செயலாற்றிக் கொண்டு வருகிறது.

பின்னர் 1983-84ஆம் ஆண்டில புதுக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டங்களிலும் படிவுப் பாறை பகுதிகளில் குழாய்க் கிணறு அமைக்கும் பணி நடைபெறும். இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கூறிய மாவட்டங்களில் 1,187 கிணறுகள், 1982 முதல் 1984 வரை அமைக்கப்படும். இதில் தோண்டு கிணறு, வடிமுனைக் குழாய்க் கிணறு, குழாய்க் கிணறு, ஆழ் குழாய்க் கிணறு ஆகியவைகள் அடங்கும். இதன்படி குழாய்க் கிணறு அமைக்கும் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு, தேவைப்படும் மதிப்பீட்டுத் தொகையை அரசு ஒரு பகுதியை மான்யமாகவும், கடனாகவும் கொடுப்பதுடன் வங்கிகளிடமிருந்தும் கடன் பெறுவதற்கான வழி வகைகளையும் வரையறுத்துள்ளது. மேற்குறிப்பிட்ட அரசு ஆணையில் ஆதிதிராவிட மக்கள், பின் தங்கிய வகுப்பினர் மற்றும் இதர வகுப்பினர்களுக்கான திட்ட விதிமுறைகளை விவரமாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் குழாய்க் கிணறு அமைக்கும் திட்டங்களைச் செயலாற்றுவதற்கு வேண்டிய அதிகாரிகளும், இயந்திர சாதனங்களும், வாகனங்களும் சேகரிக்கப்பட்டு, ஜூலை மாதம், முதல்களப்பணிகள் மும்மரமாக எடுத்துக் கொள்ளப்பட்டு பல திட்டங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.

இதுவரை மேற்கூறிய 5 மாவட்டங்களிலே 155 குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான திட்ட மதிப்பீடுகள் 194 லட்ச ரூபாய் பெறுமானத்திற்குத் தயார் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கழகம் 1983ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள் சுமார் 3,000 ஏக்கர் நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனவசதிகளைச் செய்து தரத் திட்டமிட்டுள்ளது. 1983-84ஆம் ஆண்டில் மேற்கூறிய 7 மாவட்டங்களிலும் சுமார் 12,000 ஏக்கர் நிலத்திற்கு நிலையான பாசன வசதிகள் செய்து கொடுக்கத் திட்டமிட்டிருக்கின்றது.

இத்திட்டம் ஆதிதிராவிட மக்கள், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் இதர வகுப்பினர் நிலங்களுக்குக் குழாய்க் கிணறு அமைத்துப் பாசன வசதிகளைப் பெருக்கும் திட்டங்களை ஏற்றுச் செயலாற்றி வருகின்றது. இதுவரை 22குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்பது இடங்களில் துளையிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகம் ஆதி திராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பு விவசாயிகளுக்கு அளிக்கும் சலுகைகள் யாவை?**

ஆதிதிராவிடர் நிலங்களில் செயலாற்றப்படும் திட்டங்களிலிருந்து ஆகும் மதிப்பீட்டுத் தொகையில் ஐம்பது விழுக்காடு அரசு மான்யமாகவும், இருபத்தைந்து விழுக்காடு அரசு கடனாகவும், மீதமுள்ள இருபத்தைந்து விழுக்காடு வங்கியிலிருந்து கடனாகவும் பெற்று இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். ஆதிதிராவிட மக்கள் கடன் பெறுவதற்காக நில உச்சவரம்பு கிடையாது.

பிற்பட்ட வகுப்பினர்களில் 2.5 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளவர்கள் சிறுவிவசாயிகளாகக் கருதப்படுகிறார்கள். அவர்களுக்கு அரசு மான்யமாக ஐம்பது விழுக்காடு கொடுக்கிறது. பிற்பட்ட வகுப்பினர் அவர்களுடைய நிலப்பரப்புக்கேற்றவாறு திட்ட மதிப்பீட்டில் 12.5 விழுக்காடு முன் பணம் கட்ட வேண்டும். மீதமுள்ள 37.5 விழுக்காடு வங்கிகளின் மூலம் கடனாகப் பெற்று, குழாய்க் கிணற்றுக் கழகம் இத்திட்டங்களையும் செயலாற்றும்.

மற்ற வகுப்பினருக்கு அரசு மான்யம் கிடையாது. மற்ற வகுப்பினர்களின் திட்டங்களுக்கான குழாய்க் கிணறு திட்ட மதிப்பீட்டில் அவர்கள் நிலப்பரப்புக்கேற்றவாறு 12.5 விழுக்காடு முன்பணமாகவும் கட்டுதல்வேண்டும். மீதமுள்ள திட்டத் தொகை 87.5 விழுக்காடு இத்திட்டங்களினால் அமைக்கப்படும் குழாய்க் கிணறு, நீர் இறைவை இயந்திர சாதனங்கள் முதலியவற்றைப் பயன்பெறும் விவசாயிகள் ஒரு நீர்ப்பாசன சேவை சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டு பராமரித்து வரவேண்டும். இதற்காக ஏற்படும் செலவினங்களை இந்தச் சங்கமே செய்து கொள்ளவேண்டும்.

**இதுபோன்ற வாரியங்கள் வேறு எந்த எந்த மாநிலங்களில் உள்ளன?**

மராட்டியம் ,பஞ்சாப், அரியானா, ஒரிசா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் உள்ளன.

''வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயரும்'' என்பது பழமொழி. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, மக்களின் வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவது இந்தக் கழகப் பணியாகும். வானம் பார்த்த புஞ்சை நிலங்களை நிலத்தடி நீர் மூலம் பாசனத்திற்குக் கொண்டு வருவதும் இந்தக் கழகத்தின் நோக்கமாகும். நிலத்தடி நீர் எடுத்து வளத்துடன் வாழ்வுயர்வோம் என்பது தான் இக்கழகத்தின் முக்கிய நோக்கம்.



# தஞ்சை நகரில் நெஞ்சை அள்ளும் விழா

தஞ்சாவூர் மாவட்டத்தில் மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழா தஞ்சாவூர் திருவள்ளுவர் திரையரங்கில் டிசம்பர் 5 ஆம் நாள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

திருவையாறு அரசர் கல்லூரி மாணவர்களின் நாயன இசையுடன் விழா தொடங்கியது. தஞ்சை கோட்டாட்சியர் திரு. வி. தங்கவேலு வரவேற்புரையாற்ற, 'பாரத மணித் திருநாடு' என்னும் இளைய பாரத நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்ப்பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் டாக்டர் தெ. ஞானசுந்தரம் தலைமையில் திரு. மூ. அந்தோணிராஜ், செல்வி. க. இராஜேஸ்வரி, திரு. கங்கை மணிமாறன் உரையாற்றினர்.

பாரதியாரின் புகைப்படம் மற்றும் நூல் கண்காட்சியை மாண்புமிகு தமிழக சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர், டாக்டர் ம. பொ. சி., அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்த கருத்துகள் ஆவன:

''பாரதிக்கு முன் வாழ்ந்த கவிஞர்கள், குவியல் குவியலாகப் பாடினார்கள். அவை யாருக்கும் புரியவில்லை. புரியாமல் இருந்தால்தான் புலமை என்ற கருத்து நிலவி வந்தது. ஒரு செய்யுளுக்கு பதவுரை, விருத்தியுரை, பொழிப்புரை, இத்தனை சொல்லப்பட்டன. வாத்தியாருக்கு வேலை வேண்டாமா? அதற்காக அத்தனை உரைகள் எழுந்தன.

''பாரதி பாடினான். அந்தப் பாடலை, மக்களுக்குப் புரியும் தன்மையில் எழுதினான். அதைக் கேட்ட பின்னர்தான், 'வெள்ளைக்காரன் நமக்குக் கொடுமை செய்கிறானா' என்று மக்கள் கேட்டனர்; கொதித்தெழுந்தனர்; பாரதி பாதையை மட்டுமல்ல, பாணியையும் மாற்றினான்.''

பிற்பகல் 4 மணி அளவில், தேசிய மாணவர் படை, மாணவ மாணவியர், சுதந்திரப்போராட்ட வீரர்கள் பங்கு கொண்ட ஊர்வலம், புனித அந்தோனி மேல்நிலைப் பள்ளியிலிருந்து புறப்பட்டு, 7 மணி அளவில் காவேரி கூட்டுறவு சிறப்பு அங்காடித் திடலை அடைந்தது.

பிற்பகல் 5 மணியளவில் 'பாரதியார் கண்ட சமுதாயத்தினை உருவாக்காமல் இருப்பது மக்களின் குற்றமே' என்னும் தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது.

பேராசிரியர் செல்வ கணபதி வழக்கைத் தொடுத்தார்; எதிர் வழக்காடிய பேராசிரியர் சத்திய சீலன் மறுப்புரைகளைச் சரமாரியாக உலா வரச் செய்தார்.

நடுவராகப் பொறுப்பேற்றிருந்த வலம்புரி ஜான் தமது தீர்ப்புரையில் தெரிவித்ததாவது:

"பாரதிக்குவிஞ்ஞானப்பார்வை- ஆழ்ந்த பார்வை இருந்தது. அவன் கண்ட சமுதாயம் உருவாகிவிட்டது என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. எனவே பேராசிரியர் செல்வ கணபதி தொடுத்த வழக்கினை நான் ஏற்கிறேன்.''

சோழன் போக்குவரத்துக் கழகத்தினரின் மெல்லிசை நிகழ்ச்சி, விழாவின் சிறப்பம்சமாகத் திகழ்ந்தது.

பின்னர் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்திற்கு, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் தலைமை ஏற்றார்.

வந்திருந்தோரை வரவேற்ற மாவட்ட ஆட்சியாளர் திரு. ச. மெய்கண்டதேவன் இ. ஆ. ப. குறிப்பிட்டார்:

''பாரதி நாட்டுக்கவி, தேசிய கவி; நாடு, சமுதாயம், உலகம், பொதுவுடைமை, புதுமை, ஆகியவை குறித்து ஆயிரம் ஆயிரம் பாடல்களை எழுதி, புதிய பாரதத்திற்குப் பாயிரமாக விளங்கினார்.''

பின்னர், பாரதி நூற்றாண்டு விழாத் திட்டத்தை விளக்கியும் பாரதி உருவப்படத்தைத் திறந்து வைத்தும் உரையாற்றிய செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன் இ. ஆ. ப. குறிப்பிட்டார்:

"மக்கள் வாழ வேண்டும்-தமிழ் செழிக்க வேண்டும் என்றுஎண்ணி எழுதிய முதல் கவிஞன் இந்தக் கவிஞன்தான். ஆனா, ஆவன்னா என்று எழுத்துக் கூட்டிப் படிப்பவர்கள் கூட இந்த பாரதியின் நூல்களைப் படிக்க முடிந்தது. தமிழர்கள் அனைவரும் ஒரு முறையாவது பாரதியின் கவிதைகளை வாசிக்க வேண்டும்."

அடுத்து, உரையாற்றிய மாவட்ட வருவாய் அதிகாரி. திரு சோனை முத்துவேலன் தெரிவித்தார்:

''பாரதியைப் பார்த்தாலே வீரம் வரும்: அவரது பாட்டைக் கேட்டாலே வீரம் வரும். அத்தகைய தனிப் பண்பு - தனித்திறமை அவரிடம் இருந்தது.''

அடுத்து உரையாற்றிய திரு வலம்புரி ஜான் குறிப்பிட்டார்:

''கல்லறையில் பூத்த கறுப்பு மலராக பாரதி விளங்கினான்.

மரணம் அவனுக்கு முற்றுப்புள்ளி யில்லை; இடைவெளிதான்! உலகத்து நாடுகளில் எங்கெல்லாம் விடுதலை விழா கொண்டாடப் படுகிறதோ அங்கெல்லாம்பாரதி நினைக்கப்படுகிறான்.''

அடுத்து உரையாற்றிய தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் தெரிவித்தார் :

''உலகத்தில் உள்ள எல்லா மதங்களையும் - எல்லா மக்களையும் பற்றி பாரதி பாடினார். இப்படி விரிந்த மனப்பான்மை கொண்டு தலைவர்களாக-புலவர்களாக - வீரர்களாக நாம் ஆவதற்குத் துணை புரிந்தார்.''

அடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் திரு எல். கணேசன் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''நம் கவிஞர்கள் எல்லாம் மகேசனைப் பற்றியும் மன்னர்களைப் பற்றியும் பாடிய காலத்தில் அவன் மக்களைப் பற்றிப் பாடினான். எனவே மக்கள் இருக்கும் வரை அவனும் இருப்பான்''.

தலைமைதாங்கிய மாண்புமிகு சமுக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் மகாகவி பாரதியார் நினைவுப் பள்ளிக் கட்டடத்தினைத் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

''அவர், ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று குழந்தைகளைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார். 5ல் வளையாதது 50ல் வளையாது என்பதை உணர்ந்தவர் அவர். அதுமட்டுமல்ல, 'இளமையில் கல்' என்ற கொள்கைப்படி சிறுவர்களின் மனத்தில் நல்ல கொள்கைகளை விதைத்தால் - அவர்கள் நல்ல சமுதாயமாக உருவாவார்கள் என்று நினைத்தார். அந்த நோக்கத்தை நமது முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள் - சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக!''

பின்னர், பாரதியார் நினைவுக் கவிதை, கட்டுரைப் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பரிசளித்த மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர், அரசின் நலத்திட்ட உதவிகளைப் பலருக்கு வழங்கினார்.

அதன் பின்னர், செல்வி உமா தண்டாயுதபாணி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியுடன் தஞ்சை பாரதி நூற்றாண்டுவிழா இனிது நிறைவேறியது.

நிகழ்ச்சிக் தொகுப்பு:




பாவலர் பேகன்



தமிழைத் தொழுவோம் வருவீர் - நாம்
தமிழைத் தொழுவோம் வருவீர்—

அமிழ்தின் மிகவே இனிக்கும்
அரிய மொழிதான் மடவார்
சமைத்த ஒருபொங் கலினிற் சுவையாய்
தவழ்ந்தே உழவர் உளத்தில் களிக்கும்

இமய முடியில் இலங்க
எழில்வீற் றிருக்கும் மொழிதான்
நமது வயலின் நலம்காண் மணியாய்
நவமாய்ப் பொலிந்து நமையே புரக்கும்

மலையைப் பிளக்கும் வலிவும்
மதியைத் துலக்கும் பொலிவும்
கலையின் கலையாய்த் துலங்கும் தமிழ்தான்
கலப்பை தனிலே கனிந்தே விளங்கும்

புலவர் மனத்திற் பிறந்தே
புரப்போர் மடியில் தவழ்ந்தே
உலக மொழிகள் பலவும் சுரக்க
உயரும் மொழிநம் உயிராய்த் திகழும்







குரங்கணி மலையில் உள்ள முதுவர் குடும்பப் பெண்கள்.

# பழனி மலையின் பழங்குடிகள்

நே. தேவசகாயம்
காப்பாட்சியர்,
மானிடவியல் பிரிவு,
சென்னை அரசு அருங்காட்சியகம்.

மதுரை மாவட்டத்தில் பாண்டியனது சரித்திர கலாச்சாரங்கள், பண்பாடுகள் ஆகியவைகளை ஒருங்கே திரட்டியவாறு, கோபுரங்கள், கலைக் கோவில்கள் எழுத்தோவியங்கள் நமக்குக் காட்டுகின்றன. அதைப்போன்றே தமிழ்நாட்டின் ஒரு தரப்பைச் சார்ந்த ஆதிவாசிகளின் பண்பாடு, நாகரிகம், வளர்ச்சி ஆகியவற்றை மதுரை மாவட்டத்தின் உயர்ந்துள்ள மலைகள், நமக்குப் புலப்படுத்துகின்றன. அம்மலைகளில் மிகவும் முக்கியமானது மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த பழனி மலையாகும். கீழ்ப் பழனி மலையை ஒட்டிய சிறுமலை, தென்மலை, தாண்டிக்குடி, குரங்கணி என்னும் சிறு மலைகளில், பரவலாக முதுவர்கள், பலியர்கள், புலையர்கள், மன்னன், காட்டு நாயகன், இருளர், சோலகர், பனியர் ஆகிய பழங்குடியினர் காணப்படுகின்றனர். இவர்களில் மிகவும் முக்கியமானவர்கள் முதுவர்கள், பலியர்கள், புலையர்கள் ஆவர்.

போடிநாய்க்கன் ஊரை அடுத்துள்ளதே குரங்கணி எனப்படும் சுமார் இரண்டாயிரம் அடி உயரமுள்ள சிறுமலையாகும். இதனை அணுக, வேண்டிய போக்குவரத்து வசதிகள் தற்போது உண்டு. இச்சிறுமலையில் காணப்படும் சிற்றூர்களில் முதுவர்கள், மற்றும் புலையர்கள் வசிக்கின்றனர். தம்பிரான் புல்லுகோடி எனப்படும் முதுவர்களின் குக்கிராமம் சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. சிறிது தூரம் வண்டிப் பாதையிலும், பிறகு ஒற்றை நடைப்பாதையிலும் நடந்து செல்ல வேண்டும்.

மலையில் உயரமான இடத்தில் தனியாக பதினைந்து குடும்பங்களாக ஒன்று சேர்ந்து மலைச் சரிவுகளில் வாழ்ந்து வருகின்றனர். மலைச்சரிவுகளில் இரண்டு, மூன்று வரிசைகளில் காணப்படும் அவர்களின் சிறிய மண் வீடுகள், மற்ற கீழ்நாட்டு கிராமங்களில் காணப்படும் வீடுகளைப் போன்றே அமைந்துள்ளன. அவை ஓலையும், அதன் மேல் காட்டுப்புல்லினாலும் மூடப் பட்டவை. இந்தப் பழங்குடிகள் இன்னும் பழமையிலும், எளிய வாழ்க்கையிலும், உலகத்தை அறியாதவர்களாகவும், ஒதுங்கி வாழ்ந்து வருகின்றனர். தமிழ் நாட்டுப் பழங்குடிகளில் எழுபது சதவிகிதத்திற்கு மேற்பட்ட ஆதி வாசிகள் விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்டுள்ளனர் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் இங்குள்ள முதுவர்களுக்கு தங்களுக்கென்று விவசாயம் செய்யத் தனிநிலம் கிடையாது. ஆகவே மிகவும் பிற்போக்கிலுள்ள இவர்கள் அருகிலுள்ள தேயிலைத் தோட்டங்கள் பழத்தோட்டங்களில் தொழிலாளிகளாகப் பணிபுரிகின்றனர். ஆடவர் தினப்படியாக ரூபாய் நான்கு அல்லது ஒருபடி அரிசி பெறுகின்றனர். அவ்விதமே பெண்டிர் ரூபாய் மூன்று அல்லது ஒரு படி அரிசி கூலியாகப் பெறுகின்றனர்.

இவர்களின் முக்கிய உணவு கேழ்வரகு மற்றும் அரிசியும் ஆகும். மேலும் காடுகளில் கிடைக்கும், கிழங்குகள், தண்டுகள், வேர்கள், தேன், ஆகியவையும் இவர்க்ளின் இதர உணவு. தங்கள் இருப்பிடங்களில் ஆடுகள், கோழிகள், வாத்துகள் ஆகியவைகளை வளர்த்து வருகின்றனர். நேரம் கிடைக்கும் சமயங்களில் தாங்களாகவே செய்த எளிய வலையுடன் அல்லது பொறியுடன் வேட்டையாடுவர். அம்பு எய்திப் பறவைகளைப் பிடிப்பதில் இவர்கள் சிறந்தவர்கள்.

கேரளம், கோவை, ஆகிய இடங்களிலுள்ள மலைப் பகுதிகளில் வாழும் முதுவர்கள் பழனி முதுவரை விட இன்னும் கீழ் நிலையில் உள்ளனர். அவர்களின்

சிறுமலையில் உள்ள அழகர் என்னும் பலியர் - குடும்பத்தவருடன்.





கொடைக்கானல் வி. எஸ். ஆர். புரம் காலனியில் பலியப் பெண்.

வீடுகள் கட்டையினாலும், தட்டியினாலும் ஆனவை. இன்னும் திருமணங்களில் தங்கள் மனைவியருக்கு தாங்கள் செய்த சிறப்பு வேலை மிகுந்த மூங்கில் சீப்புகளை வெகுமதிகளாகவும், தாலியின் மதிப்பைப் போன்றதாகவும் கருதிப் பரிசாக அளித்து வருகின்றனர். தாயான முதுவர்கள் இன்னும் தங்கள் முன்னோர்கள் போலவே, தோளில் சரியும் சேலையை முடிபோட்டுத் தங்கள் சிறுகுழந்தைகளை முதுகில் தூக்கிச் செல்லுகின்றனர். தங்கள் உடையிலும், வேலையிலும், வெகுவாக இவர்கள் தங்களுடன் வேலை செய்து வரும் கீழ்நாட்டவரின் நட்பினால் புதிய மாறுதல்களை அடைந்து வருகின்றனர். போக்குவரத்து மூலமாகவும் நடந்தும், போடிநாயக்கன் வாரச்சந்தைக்குச் சென்று குடும்பப் பொருள்களை வாங்கி வருகின்றனர்-முக்கியமாக பண்டிகைக் காலங்களில்.

பலியர் எனப்படும் பழங்குடிகள் பழனி மலைகளில் ஒன்றான சிறுமலையில் வசிக்கின்றனர். திண்டுக்கல்லை அடுத்து, சுமார் பத்து மைல் தொலைவில் சிறுமலை இரண்டாயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ளது. மலையைச் சுற்றி வளைந்து செல்லக்கூடிய போக்குவரத்து வசதிகள் பல உண்டு. பழையூர் என்னும் கீழ்நாட்டவர் வாழும் மலைப் பகுதியைப் பேருந்து மூலம் அடைந்து அங்கிருந்து வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதையில், காட்டில், மேட்டில், குன்றில் நடந்து, சிறுசிறு ஊற்றுகளையும் கடந்து செல்ல வேண்டும்.

பலியர் இக்காட்டு மலைப்பகுதிகளில் பெரிய பழத்தோட்டங்களில் பரவிக் கிடக்கின்றனர். கல்லறைக்காடு, செம்பூத்துக்காடு ஐந்துமாமரத்துப்பள்ளம், தழைக்காடு ஆகிய சிறு சிறு கூட்டமாக பலியர் வசிக்கும் குக்கிராமங்களைச் சிறுமலையில் காணலாம். அவர்கள் இரண்டு, மூன்று குடும்பங்களாகச் சேர்ந்து அருகிலுள்ள வாழை, கொய்யா, எலுமிச்சை, மாதுளம், பலா, ஆகிய பெருந் தோட்டங்களில் நாற்று நடுதல், களை எடுத்தல், வாழை இலை புறித்தல், காய், பழங்களைப் பறித்தல், ஆகிய வேலைகளில் ஈடுபடுகின்றனர். முக்கியமாக வாழைத் தோட்டத்தில் வேலை செய்யும் ஒவ்வொரு பலியனிடமும் இரண்டு வித வெட்டுக் கத்திகள் உண்டு. ஒன்று L வடிவமும், மற்றொன்று U வடிவமும் ஆனது. வாழைக் குலைகளை வெட்டவும் வாழை இலைகளைத் தரிக்கவும், இக்கத்திகள் உதவுகின்றன. காய்த் தோட்டங்களில் வேலை புரியும் ஆண்கள் ரூபாய் இருபத்தி இரண்டு வாரக் கூலியாகப் பெறுகின்றனர். இவ் வேலையைத் தவிர்த்து ரோட்டில், தோட்டத்தில், பள்ளத்தாக்கில் காணப்படும் தேனை, நீண்ட கொம்பின் உதவியால் சேகரிப்பது இவர்களின் முக்கிய தொழிலாக கருதப்படுகிறது. எலி, அணில் போன்றவைகளை ஈட்டியால் வேட்டையாடுவர். மற்றும் காட்டின் கனிகள், வேர்கள், தண்டுகள் இவர்களின் இதர உணவாகும். பலியர்கள் நல்ல உடல் வலிமையைப் பெற்றுள்ளார்கள். ஆனால், உயரத்தில் சற்றுக் குறைந்தவராக உள்ளனர்.

ஐந்து மாமரத்துப் பள்ளம் என்னும் மலைப்பகுதியில் தன்னந்தனியாகத் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வரும் நூற்று இருபதுவயதான அழகர் என்னும் முதிர்ந்த பலியரைப் பற்றி ஒரு சில குறிப்புகள் சிறப்பானவை. சுற்றிலும் மலைச்சரிவு, வாழைத் தோட்டத்தின் நடுவில் மற்றக் காட்டுச் செடிகளின் நடுவே அமைந்துள்ளது அவரது சிறிய ஓலை வீடு. அழகர், நூற்று இருபது வயதாகியும் நாலு திருமணங்கள் தனது சொந்தத்தில் செய்திருந்தும் இந்த வயோதிகக் காலத்தில் மிகவும் சுறுசுறுப்பாகவும், அமைதியுடனும் வீட்டின் எல்லாக் காரியங்களையும் கவனித்து வருகிறார்.

கோடைக்கானல், பனைக்காடு கிராமத்தின் அருகே புதியதாக அமைக்கப்பட்டிருக்கும் வி. எஸ். ஆர். புரம் பலியர்களின் புதிய கிராமம் ஆகும். 1975-ஆம் ஆண்டு படித்த கீழ்நாட்டு வாலிபர்கள் இருபதுபேரின் பெருமுயற்சியால் ஒரு 'உதவிக்குழு' அமைக்கப்பட்டு, தங்கள் பண உதவியாலும், மற்றும் பெரிய தனவந்தர்களின் உதவியாலும் பத்து பலியர் குடும்பங்களுக்குப் புதிய கல்வீடுகள் கட்டப்பட்டுள்ளன. தற்பொழுது பலியர்களின் நல்வாழ்விற்காக குழந்தை காப்பகம், குழந்தைகள் படிப்பகமும், பெண்கள் தையலகமும் இங்கு இயங்கி வருகின்றன.

முதுவர்கள், பலியர்கள் தவிரப் புலையர் என்னும் பழங்குடியினர் தாண்டிக் குடி மலையில் இரண்டாயிரம் அடி உயரத்தில் வாழ்ந்து வருகின்றனர். வத்தலக்குண்டு

எனப்படும் ஊரை மேற்கு நோக்கியதே தாண்டிக்குடி மலையாகும். செல்வதற்கு வேண்டிய போக்குவரத்தும், சாலையும் உண்டு. மங்களம் கொம்பு காலனி, தாண்டிக்குடி காலனி ஆகிய சிற்றூர்களில் வாழும் புலையர்கள் சற்று நல்ல வசதிகளைப் பெற்றவராகத் தென்படுகின்றனர். மங்களம் கொம்பு காலனியில் கீழ்நாட்டு மக்களின் இருப்பிடங்களுக்கு அருகே தமிழ்நாடு அரசு கட்டியுள்ள புதிய கல்வீடுகளில் சுமார் பதினைந்து புலையர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் தோட்டங்களில் வேலை செய்தல், மற்றும் இதர கூலி வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். தினக் கூலியாக ஆண்கள் ரூபாய் ஆறும், பெண்கள் ரூபாய் மூன்றும் பெறுகின்றனர்.

பழனி மலை வாழ் பழங்குடிகளாகிய முதுவர், பலியர், புலையர் ஆகியவரிடம் ஒரு சில ஒற்றுமைகள் வாழ்க்கையில் காணப்படுகின்றன. பழனி மலைகள் யாவும் அதிக உயரம் உள்ளவைகள் அல்ல. அவை யாவும் சுமார் இரண்டாயிரம் அடிமுதல் மூவாயிரம் அடி உயரம் உள்ளவைதான். மேலும் பழனி மலைகள் யாவும் கீழ்நாட்டவருடன் போக்கு வரத்து வசதியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இம்மலைவாசிகள் யாவரும் தொழிலாளிகளாகவும், கூலியாட்களாகவும், தோட்டங்களில் பணிபுரிகின்றனர். யாவரும் பயிர்த்தொழிலில் ஈடுபடவில்லை. இன்னும் மிகக் கூச்சத்துடன் கீழ்நாட்டவருடன் பழகுகின்றனர். கீழ்நாட்டு மக்களுடன் காய்த் தோட்டங்களில் இப்பழங்குடிகள் வேலை செய்தாலும் அதிக அளவில் நாகரிக முன்னேற்றம் காணப்படவில்லை. இப்பழங் [illegible] ஓரளவு வாழ்க்கையில் திருப்தியுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டின் மற்ற பழங்குடிகள் மலைகளில் இயங்கி வருகின்ற பழங்குடிகளின் மேம்பாட்டுக் கூட்டுறவுச் சங்கம் (லாம்ப்) பழனி மலையில் காணப்படவில்லை. காரணம் அது தேவையின்மையே. தினம் தினம் போக்குவரத்து மூலமாக, சுலபமாக, மேல் வாழ் பழங்குடிகள் கீழ்நாட்டிற்கு வந்து வேண்டிய தேவையுள்ள பொருள்களை வாங்கிச் செல்வதால் லாம்ப் சங்கம் தேவையில்லாமையைக் காட்டுகிறது. இம்மலைப் பழங்குடிகளின் எண்ணிக்கை மிகவும் சொற்பமே.

இவ்விதமாக முதுவர், பலியர் [illegible] சமூக, பொருளாதார வாழ்க்கையை நேரில் பார்த்து, கேட்டு, கண்டறிந்ததுமல்லாமல் அவர்களால் செய்யப்பட்டு தினமும் உபயோகப்படுத்தப்படும் அவர்களின் வீட்டுப் பொருள்கள், தொழில் கருவிகள், பாத்திரங்கள் ஆகிய ஐம்பது கலைப் பொருள்கள் சென்னை, மதுரை அரசு அருங்காட்சியகங்களுக்கென அண்மையில் சேகரிக்கப்பட்டன.

பழங்குடிகளின் இக்கலைப் பொருள்களைக் காட்சிக்கு வைக்கும் பொழுது மலையில் வாழும் ஆதிகுடிகளின் சீரிய வாழ்க்கை, எளிமை, அமைதி ஆகிய தன்மைகளைப் படம் பிடித்துக் காட்டுவது மட்டுமல்லாமல் அதன் வழியே நமது நாகரிகம், பண்பாடு, கலை உணர்ச்சி ஆகியவைகளை ஒப்பிட்டுப் பார்க்கவும் முடிகிறதல்லவா!


**பலியர், கழுதைகளில் சுமை ஏற்றிச் செல்லல்.**


**தாண்டிக்குடி மலையில் உள்ள புலையர் இனப் பெண்கள் விறகு சுமந்து வருதல்.**

# இன்பப் பொங்கல்

**-தணிகை உலகநாதன்-**



வறுமையெனும் இருள்கிழித்து வளங்களெலாம் சேர்க்கும்
வாகையினைச் சூடுதல்போல் கீழ்வானம் தன்னில்
தருக்கோடு செங்கதிரோன் தோன்றுவதைக் காணீர்!
தமிழ்த்திருநாள் வள்ளுவர்நாள் வந்ததெனத் தமிழர்
வெறுப்புவிருப் பில்லாமல் இன்பமெனும் வெள்ளம்
விளையாடித் திளைத்திடவே வந்ததிந்தப் பெருநாள்!
பொறுப்பான உழைப்பாலே அறுவடையைச் செய்தே
புதுநெல்லை இல்லமெலாம் கொண்டுவந்து சேர்த்தோம்.

வந்ததுகாண் பொங்கலெனும் மறத்தமிழர் நன்னாள்;
மாண்புடனே புதுச்செயல்கள் தொடங்குகின்ற பொன்னாள்.
கந்தலுடை பழஞ்சட்டி பானைவெளி ஏகும்;
கவினாரும் புத்துணவும் புதுப்பொருளும் சேரும்;
செந்தமிழர் வீடெங்கும் வெண்ணிலவு காயும்;
சீர்திருத்தம் வந்துபுகும் சிறப்பெல்லா மோங்கும்;
செந்நெல்மணிப் புத்தரிசி செழும்பாலில் பொங்கும்;
தெருவெல்லாம் பொங்கலொலி வானத்தும் பரவும்!



# பொலிவு மிகு பொருட்காட்சி

அ. மருதவிநாயகம்

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியினை எடுத்துக் காட்டும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வாரியம் ஏற்பாடு செய்துள்ள 10-வது சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சித் திறப்புவிழா 24.12.82 அன்று சென்னை தீவுத் திடலில் துவங்கியது. சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு க. பாலசுப்பிரமணியன், எம்.எல்.ஏ. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது; ''கடந்த 5 ஆண்டுக் காலமாக மாண்புமிகு முதல்வர் எம்.ஜி. ஆர். ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, மிகுந்த வலிவோடும், பொலிவோடும், புதிய அம்சங்களோடும் தமிழகசுற்றுலாவளர்ச்சிக் கழகம் இந்தப் பொருட்காட்சியினைச் சிறப்பாக நடத்தி வருவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

''இத்தனை ஆண்டிலும் இல்லாத ஒரு சிறப்பு இந்த ஆண்டு, பாரதியார் நூற்றாண்டு விழா நடத்தப்படுவதால் அவருடைய கருத்துக்களை விளக்குகின்ற வகையில் இந்தப் பொருட்காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது.

பொருட்காட்சியின் முகப்பில், 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியாரின் கருத்து வரிகள் நம்மை வரவேற்


தாயம் அமைத்திடவும், சமுதாயத்திற்கு வேண்டிய கருத்துகளை அறிந்திடவும், மற்றும் பல்வேறு கருத்துகளை விளக்குகின்ற வகையிலும் பொருட்காட்சி அமைந்துள்ளது. மிகச் சிறப்பான அம்சமாக இந்த ஆண்டு தமிழகத்தின் தலைநகரையே காட்டும் வகையில் இந்தப் பொருட்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன மேலும் தமிழகத்தில் உள்ள பதினாறு மாவட்டங்களைச் சேர்ந்த அரங்குகள், அந்தந்தப் பகுதிகளின் கலை, தொழில் வளர்ச்சி பற்றி போட்டி போட்டுக்கொண்டு விளக்கும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரங்கினை அமைத்துள்ளனர். இவ்வளவு பெரிய முயற்சியை ஜெனரேட்டர் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

''இந்தியாவிலேயே மத்திய அரசு நடத்தும்பொருட்காட்சிக்கு அடுத்தபடியாகவும், மற்ற மாநிலங்கள் நடத்தும் பொருட்காட்சிகளைவிட பெரிதாகவும் சிறப்பானதாகவும் தமிழகம் மட்டுமே நடத்தி வருகின்றது.

''கடந்த ஆண்டுநடத்தப்பட்ட சுற்றுலாப் பொருட்காட்சியில் ஏறத்தாழ 350 அரங்குகள் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் இந்த ஆண்டு 400-க்கு மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 94 தமிழக அரசுத் துறைகளும், நிறுவனங்களும் பங்கேற்றுள்ளன. 10 பிற மாநிலங்களும், 30 தனியார் நிறுவனங்களைச் சார்ந்த பெரிய நிறுவனங்களும் பொருட்காட்சியில் பங்கு பெற்றுள்ளன.



# சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி பற்றிய சில தகவல்கள்



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1974-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பொருட்காட்சியினை நடத்தி வருகின்றது. அந்த வரிசையில் இவ்வாண்டு நடைபெறும் பொருட்காட்சி பத்தாவது ஆகும்.

இப்பொருட்காட்சி சென்னை தீவுத் திடலில் கூவம் ஆற்றின் இரு கரையிலும் சுமார் 22 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

பொருட்காட்சியில் மொத்தம் 400 நிறுவனங்கள் பங்கு கொள்கின்றன.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், தென்னிந்திய ரெயில்வே, இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸ், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், கோல் இந்தியா லிமிடெட், மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ், ஸ்பிக் ஆகிய நிறுவனங்களும் காஷ்மீர், இமாசலப்பிரதேசம், கர்னாடகம், கேரளம் மற்றும் புதுவை மாநிலங்களும் இந்தப் பொருட்காட்சியில் பங்கேற்கின்றன.

கண்காட்சியைக் காண வருவோரின் எண்ணிக்கை இவ்வாண்டு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பொருட்காட்சி 24.12.82 அன்று தொடங்கியது. 21.2.83 வரை நடைபெறும். பொருட்காட்சி மாலை 2 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெறும்.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் பல்வேறு பகுதியிலிருந்தும் பொருட்காட்சிக்குப் பேருந்து வசதி செய்து கொடுத்துள்ளது.

---

''மாலை நேரக் கல்லூரி போல பள்ளிக்குச் செல்லாதவர்கள் உலகத்தைக் கற்கும் அளவிற்கு இந்தப் பொருட்காட்சி 'பயன் உடையதாக அமைந்துள்ளது. இப் பொருட்காட்சி வெறும் பொழுது போக்கு அம்சம் கொண்டதாக மட்டும் அமையவில்லை. பொதுவாக, பொருட்காட்சிகள் சூதாட்டக் களமாக இருக்கும் நிலைமையை மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்த் பிறகுதான் மாற்றி அமைத்துள்ளார்கள். இந்தப் பொருட்காட்சி இலாப நோக்கம் கொண்டதல்ல. வருமானம் எவ்வளவு கிடைக்கின்றது என்பதைவிட மக்களுக்கு என்னசெய்தோம் என்பதையே கணக்கிட்டுப் பார்க்கிறோம்.

''ஒரு நிரந்தரச் சுற்றுலாப் பொருட்காட்சியினை இதே இடத்தில் அனமக்க அரசு கொள்கை அளவிலான முடிவை எடுத்துள்ளது. நிரந்தரப்பொருட்காட்சியினை அமைப்பதற்கான வடிவமைப்பினை நிபுணர்களிடம் கேட்டுள்ளோம். யார் நல்ல வடிவமைப்பினைத் தருகிறார்களோ அதைத் தேர்ந்தெடுத்து, அடுத்த ஆண்டு இதே இடத்தில் நிரந்தரப் பொருட்காட்சி அமைப்பதற்கான அடித்தளம் அமைக்கப்பட இருக்கின்றது. இதே இடத்தில் நிரந்தரப் பொருட்காட்சி அமைவதால் பல லட்சக் கணக்கான ரூபாய் செலவில் அரங்குகள் அமைக்கப்பட்டு, இடித்துத் தள்ளப்படும் நிலைமையை மாற்ற முடியும். அதனால் ஏற்படும் இழப்பை நிரந்தரப் பொருட்காட்சி அமைப்பதன் மூலம் ஈடு செய்ய முடியும். அந்நியச் செலாவணியை எதிர்நோக்கும் இந்தியாவுக்கு வெளிநாட்டுப் பயணிகள் வருகையால் ரூ. 800 கோடிக்கு அந்நியச் செலாவணி கிடைக்கின்றது. மூலப் பொருள் அனுப்பாமலே அந்நிய செலாவணி பெறும் துறையாகச் சுற்றுலாத்துறை ஒன்றுதான் விளங்குகின்றது. ஆகவே மத்திய அரசுஇத்துறைக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். சுற்றுலா வளர்ச்சி பெறவேண்டுமென்பதற்காகத்தான் அந்தக் காலத்திலேயே காசி முதல் இராமேசுவரம் வரை செல்ல வேண்டுமென்று பக்தி வழியாகப் போதிக்கப்பட்டது. ஆனால் இன்று காஷ்மீசிலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள இடங்களினைக் காணப் பயணிகள் வசதியுடன். வரலாம். அல்லது இயற்கை அழகைக் கண்டு அனுபவிக்க்வும் வரலாம்.

''ஒவ்வொரு மாநில மக்களின் நிலைமைகளைத் தெரிந்து கொள்ளவும், பண்பாட்டினைத் தெரிந்து கொள்ளவும், சுற்றுலாத் துறை தான் உதவியாக உள்ளது. பாரதியார் வலியுறுத்திய தேசிய ஒருமைப்பாட்டு வழியில் எல்லா மாநிலங்களும் தேசிய அளவில் சுற்றுலாவை வளர்க்க வேண்டும்.

''சுற்றுலாத்துறை இன்றைய நிலையில் மக்களுக்குத் தேவையானவற்றுள் ஒன்றாகிவிட்டது. ஆகவே மாநில சுற்றுலாத்துறைகளை வளர்த்தாக வேண்டும்.

மதித்து மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய இன்னும் கருணை காட்ட வேண்டும்.

''மாநிலங்களுக்கிடையில் மக்களின் ஒற்றுமையை வளர்ப்பதற்கு மத்திய அரசு சுற்றுலாத் துறையைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்து மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் உரையாற்றுகையில் பேசியதாவது: ''வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் ஏறத்தாழ 60 சதவிகிதம் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள். இந்தியாவிற்கு வரும் அவர்கள் தமிழகத்தின் கலாச்சாரத்தை அறிந்து கொள்ள, சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய வசதிகளை நமது சுற்றுலாத்துறை செய்தாக வேண்டும். இந்தியாவில் தயாரிக்கப்படும் நூல் தயாரிப்பில் கால் பங்கு தமிழகத்தில் தயாரிக்கப் படுகின்றது. கடந்த பல ஆண்டுகளோடு இந்த ஆண்டினை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இப்பொழுது உள்ள தொழில் வளர்ச்சி பெரிதும் பாராட்டுதற்குரியது. கடந்த 4 ஆண்டுகளில் சிறுதொழில்கள் இரண்டு மடங்கு அளவில் வளர்ச்சி அடைந்துள்ளன. மேல்நாடுகளில் சுற்றுலா வளர்ச்சி அடைந்துள்ளது போல் தமிழகத்திலும் சுற்றுலா வளர்ச்சியடையவேண்டும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,

''கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சியில் ஏறத்தாழ 20 இலட்சம் மக்கள் கண்டு களித்துள்ளார்கள். இந்த ஆண்டு அதைவிட அதிக அளவில் மக்கள் கண்டு களிப்பார்கள் என்று நினைக்கின்றேன்.''

சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு எம்.மாதவன் நம்பியார், இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார். டாக்டர் செல்வி பத்மா சுப்ரமணியம் அவர்களின் 'பாரதிக்கு அஞ்சலி' நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

பொருட்காட்சியில் நிறுவப்பட்ட அரங்குகள் அனைத்தும், பாரதியார் நூற்றாண்டு விழாக் கொண்டாடிய சிறப்பில் பாரதியாரின் எண்ணங்களையும் கருத்துக்களையும் எடுத்துக்காட்டும் வகையில் அமைக்கப் பெற்றுள்

# சத்துணவும் சமத்துவமும்!

மலேசியக் கவிஞர் **ஐ. உலகநாதன்**



**வா**ய்மணக்கும் நல்லுணவு
மண்மணக்கும் கல்விநலம்
தாயின் பணியனைத்தும்
தருமத்தில் நடக்கிறது.

மேல்த்தட்டும் கீழ்த்தட்டும்
ஓர் தட்டின் முன்னாலே
ஊர்க்கட்டுப் பாட்டிற்குள்
ஒழுங்காக நடக்கிறது.

கஞ்சிக்கும் பஞ்சமெனும்
கடைநிலையில் உள்ளவர்தம்
நெஞ்செலும்பு நிமிர்கின்ற
நேரமொன்று நடக்கிறது.

மதியத்துச் சத்துணவில்
மறுமலர்ச்சிப் புத்துணர்வில்
புதியதொரு தலைமுறைதான்
புறப்பட்டு வருகிறது.

ஊரில்உள்ள பிள்ளைக்கும்
சேரிவாழ் கிள்ளைக்கும்
வேரில்உள்ள வேற்றுமையை
வெட்டி முறிக்கிறது!

சாணத்தில் கலந்தஇளம்
சந்ததிகள் காலையிலே
காணத் தகுந்தபடி
காட்சிநலம் தருகிறது.



மாடடுத்துப் போன
மரப்பாச்சிப் பிள்ளையெலாம்
ஏடெடுத்து நாள்தோறும்
எதிர்காலம் படைக்கிறது.

முடமாகிப் போகாமல்
முளைக்கின்ற அரும்பெல்லாம்
திடமாகச் சத்துணவுத்
திட்டம்வழி சமைக்கிறது!

சாரமுள்ள சமுதாயம்
தழைத்துவர நாட்டிலுள்ள
ஈரமுள்ள புள்ளிகளின்
இதயம் திறக்கிறது!

# பொன்னிக்கும் ஆதரவு

## கோமதி ஸ்வாமிநாதன்

**பொ**ன்னம்மா கிழவி பிறக்கும்போதே கிழவியாகப் பிறக்கவில்லை. எல்லோரையும் போல குழந்தையாகத்தான் பிறந்தாள்.

கட்டை வண்டி ஓசையைத் தவிர வேறு எந்தவித நாகரிக வாகனங்களின் போக்குவரத்து ஒலியையும் கேட்டறியாத ஒரு குக்கிராமத்துக் குழந்தையாகத் தான் பிறந்தாள்.

பொன்னிக்குட்டியாகவும், பொன்னியக்காவாகவும், பொன்னியம்மாவாகவும் ஒரு காலத்தில் அவள் இருந்தாள் என்பது அவளுக்கே மறந்து போய்விட்டிருந்தது.

கடந்த பல வருடங்களாக அவள் மற்றவர்களுக்கு பொன்னிக் கிழவிதான். கொஞ்சம் பழகியவர்கள், அவசரத்திலும், வேகத்திலும் ஈடுபட்டிருக்காத நேரங்களில் 'ஆயா' என்று கூப்பிடுவார்கள்.

அந்த நேரத்தில் அவள் உடல் கொஞ்சம் புல்லரிக்கும். மிகவும் நெருங்கியவர்கள், பேரன், பேத்திகள் அன்புடன் அழைப்பது போலக் கற்பனை செய்து கொண்டு சில கண நேரம் மெய் மறந்து போவாள். அப்புறம்தான் அவளுக்கு நினைவுக்கு வரும், தனக்கு என்று யாருமே உறவுக்காரர்கள் இந்தப் பரந்த உலகத்

அன்றாடக் கஞ்சிக்கு மாலை நேரங்களில் கடை வாசலில் நின்று அரிசி வாங்கி உலை வைக்கும் குடும்பத்தில்தான் பிறந்தாள். அந்தக் கிராமத்தில் பள்ளிக்கூட வாசனை அடிக்கவேயில்லை. எல்லோருக்குமே இடது கைப்பெரு விரல் ரேகைதான், கடன் பத்திரங்களிலும் புரோ நோட்டுக்களிலும் புரள உதவின.

ஆனால், பொன்னி வாய் மொழியாகவே அல்லி அரசாணி மாலையையும் புலந்திரன் களவையும் பாடம் பண்ணி இனிய குரலில் பாடுவாள். ஊரில் கும்மி கோலாட்டம் என்றால், மதமதப்பால் வளர்ந்து கலகலப்பாய்ப் பேசும் பொன்னிக்குட்டி கலந்து கொள்ளாமல் அந்த நிகழ்ச்சி நடக்காது.

அரைவயிற்றுக் கஞ்சியிலும் ஆனந்தத்துடன் வாழத் தெரிந்த குடும்பம்தான் அவள் குடும்பம். ஆனால் அவளுக்குப் பதினைந்து வயது நடந்து கொண்டிருந்த போது, பொன்னியின் அப்பன் மாயாண்டி ஒரு மகா தவறைச் செய்தான்; பொன்னிக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைத்தான். கல்யாணம் செய்து வைத்தது தவறு இல்லை. ஆனால் கோளாறு எல்லாம் அவன் தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை முனுசாமியிடம் இருந்தது. அவனுக்கு முப்பது வயதாகியிருந்தும் எந்தத் தொழிலிலும் ஈடுபடாத முழுச் சோம்பேறி-அவன் ஈடுபட்டதெல்லாம், சீட்டுக்கட்டைப் பிரிப்பதிலும், கள்ளு மொந்தையைக் கையிலெடுப்பதிலும்தான்.

பாவம் மாயாண்டி! ஏமாந்து விட்டான். திருத்த முடியாத தவறைச் செய்து விட்டான்! பொன்னி மாயாண்டி வீட்டிலிருந்து இடம் மாறி, திருமணம் செய்து கொடுத்த அந்தஸ்தினால் பொன்னி அக்கா ஆனாள். சீக்கிரமே கால்வயிற்றுக் கஞ்சிக்கே சிரமப்பட ஆரம்பித்தபோது அவளுக்கு வயது இருபத்து ஐந்து. தளர்ச்சியினாலும், உடல் உழைப்பினாலும், அவள் அப்போதே பொன்னியம்மா ஆகி விட்டாள்.

ஆனால் அவளை மேலும் தளர்ச்சியடைய வைக்க குழந்தைகள் பிறக்கவில்லை. அப்



போதுதான் முனுசாமி அந்த கிராமத்தை விட்டே கிளம்ப ஏற்பாடு செய்தான். பட்டணத்திற்குப் போனால் புதுப்பிழைப்புத் தேடலாம் என்று யாரோ சொல்லிவைத்தார்கள். மனைவியை இழுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான். அது ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பதாம் ஆண்டு.

''ஆயா! ஆயா! கொஞ்சம் தொட்டில் ஆட்டேன்! தூங்க மாட்டேன் என்று அடம் பிடிக்கிறான்!'' என்ற குரல் சமையல் கட்டிலிருந்துவந்தது. பொன்னி, முற்றத்தில் கழுவிய பாத்திரங்களை உள்ளே கொண்டு போய் வைப்பதில் முனைந்திருந்தாள்.

சில நிமிடங்களில் கீச்சுக் குரலில் ஒரு கிராமியப் பாட்டு தொட்டில் பக்கத்தில் ஒலித்தது. தொடர்ந்த சில நிமிஷங்களில் குழந்தை தூங்கி விட்டது.

வீட்டு எஜமானி அம்மாள் வெளியே வந்தாள்.

''ஆயா! இந்த வயசிலேயும் நீ ரொம்ப நல்லா தாலாட்டுப் பாடறே! உன் குரல் கேட்டா அந்தப் போக்கிரிப் பயலும் தூங்கிப் போறான். என்ன மாயமோ? ராவேளைகளிலே அவன் தூங்காம முரண்டு பிடிக்கிறபோது, நான் பாடினா, அவனும் தூங்கறது இல்லை. என் வீட்டுக்காரருக்கும் அது பிடிக்கிறதில்லை!'' வீட்டு எஜமானி தேவகி பெருமிதத்துடன் பொன்னியைப் பாராட்டினாள்.

பொன்னிக்கு அந்த வயதிலும் நாணம் வந்தது. 'சின்னம்மா' உங்களுக்கு நினைவிருக்காது. ஒரு காலத்திலே உங்களுக்கே இந்த மாதிரி தாலாட்டுப் பாடி தூங்க வச்சிருக்கேன்! அப்ப, இன்னமும் நல்லாப் பாடுவேன். உடம்பிலே தெம்பு இருந்தது. ஹூம்! முப்பது வருஷம் ஓடிப்போச்சு!

## முதியோர் ஓய்வு ஊதியத் திட்டம்



உங்க ஐயா! டில்லியிலிருக்காரே! கடுதாசி போட்டாரா? சௌக்யமாயிருக்காங்களா? நேத்து தபால்காரரொருவர் வந்த போதே கேட்கணும்னு - நினைச்சேன்..'' என்றாள் பொன்னி உரிமையுடன்.

''எல்லாரும் சௌக்கியமா இருக்காங்களாம் ஆயா! இரண்டு மாசம் கழிச்சு அப்பாவும் அம்மாவும் இந்தப் பக்கம் வரப்போறாங்களாம்!...ஆயா!...நீ மார்க்கெட் பக்கம் போகப் போறியா? கொஞ்சம் தக்காளி வாங்கிக் கொடுத்துட்டுப் போயேன்...'' தேவகி நீட்டினாள்.

பொன்னிக்கு மனத்துள் கொஞ்சம் சபலம். தன்னைப் பற்றி தேவகியோட அப்பா விசாரிச்சிருக்கார் கடுதாசியிலே என்று சொல்லியிருக்க மாட்டாளா என்ற ஏக்கம்....! ஹூம் அவருக்கு எத்தனை வேலையோ? அவர் மறந்திருக்கலாம்! ஆனால் அந்த மகானுபாவனை என்னால் மறக்க முடியுமா! அந்த மனுஷன் ஒரு தெய்வம் கணக்காக் காப்பாற்றினாரே என்று நினைத்துக் கொண்டே கிளம்பினாள் அவள்.

பொன்னி-முனிசாமி இடையே புருஷன் பெஞ்சாதி உறவு அவர்கள் அன்று சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் இறங்கும் வரைதான் நீடித்தது. பொன்னியின் தலையிலே மூட்டையைத் தூக்கி வைத்துவிட்டு முன்னாலே நடந்த முனிசாமி, ராமேஸ்வரத்திலிருந்து திரும்பி யிருந்த பைராகிகள் கூட்டத்தில் கலந்து போயே போய்விட்டான்! அப்புறம் பொன்னி அவனைப் பார்க்கவே இல்லை. 'என்னை இப்படி முன்பின் தெரியாத சீமையிலே தவிக்க விட்டு விட்டுப் போனதுக்கு, ஊரிலிருந்தே சொல்லாமல் கொள்ளாமல் ஓடியிருக்கலாமே என்று பொன்னி புலம்பி அழுதாள்.

அடுத்து வந்த ஒரே ரயிலிலிருந்து இறங்கிய ஒரு இளைஞனும் அவன் மனைவியும், அழுது கொண்டிருந்த பொன்னிக்கு அவள் நிலையை உணர்ந்து உதவி செய்ய முன்வந்தார்கள். அங்கேயே நாலு ஆறுதல் வார்த்தை சொல்லிக் கையில் கொஞ்சம் சில்லறையைக் கொடுத்துக் கத்தரித்து விடவில்லை.


தங்களுடன் வீட்டிற்கே அழைத்துப் போனார்கள். அவளுக்கு ஊருக்குத் திரும்பிப்போகப் பணம் கொடுத்து உதவுவதாகச் சொன்னார்கள். பொன்னி தீர்

''என் புருஷனுக்கு கிராமத்துக்குத் திரும்ப யோக்கியதை இல்லை. ஒரே கடன். நான் அங்கே போகணும்னா அவரு இருக்கணும். அவரு இருக்கமாட்டாருன்னு தெரிஞ்சு போச்சு. என்னையே ஒரு கடனாக நினைச்சு மனுஷன் தலைமறைவாய் போயிட்டாரு! ரயிலிலே அவரு பேசிக்கிட்டு வந்ததை நினைச்சுப் பார்க்கிறேன். பட்டும் படாமலும், நான் பல வீடுகளிலே வாசல் பெருக்கி, பாத்திரம் கழுவி புழைச்சுப் பழகணும்னு ஏதோ சொன்னாரு! ஏதோ ஒரு முடிவுக்கு அவரு அப்பவே வந்துட்டாருன்னு தோணுது. இங்கே இருந்தா அகஸ்மாத்தாகவாவது அவரைமறுபடியும் பார்க்கலாம்ங்கற நம்பிக்கை. ஊருக்குப் போயிப் பிரயோசனமில்லை. எனக்கு இங்கேயே வயிற்றைக் கழுவிக்க ஒருவகை சொல்லுங்க. பெத்தவங்களுக்கு பாரமாக நான் போக விரும்பலேங்க'' பொன்னி ஒரு முடிவிற்கு வந்து விட்டாள்.

இரண்டாவது உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருந்த நேரம். பலர் சென்னையைக் காலி செய்துவிட்டுப் போயிருந்தார்கள். பொன்னிக்கு இரண்டு மூன்று தெரிந்த வீடுகளில் வேலைக்கு ஏற்பாடு செய்து கொடுப்பது அந்த இளைஞனின் மனைவிக்கு வசதியாக இருந்தது. அவைகளில் அவள் வீடு ஒன்று. பக்கத்திலேயே பொன்னிக்கு ஒரு மூதாட்டியின் துணையும், வசிக்கக் குடிசையும் கிடைத்தன.

அந்தத் தம்பதியின் கருணையினால் பத்து வருட காலம் ஓட்டினாள். அப்போதுதான் தேவகி பிறந்தாள். தேவகி பிறந்த இரண்டாவது வருடம் அந்தக் குடும்பம் உத்தியோக காரணமாக டில்லிக்குப் போக வேண்டி வந்தது. பொன்னியும் தன் உத்தியோகத்தை மாற்றிக் கொண்டாள். வீட்டு வேலைகள் செய்வதற்குப் பதிலாகச் சாப்பாட்டுக் கூடை சுமக்கத் தொடங்கினாள்.

இடையே மாயாண்டி விலாசத்தைச் சொல்லி ஒரு கார்டு எழுதச் சொன்னாள். அது விலாசதார் இல்லை என்ற குறிப்புடன் திரும்பி வந்தது. முனுசாமி திரும்பவும் அவள் கண்களில் படவே இல்லை. ஊர், உற்றார், கணவன் எல்லாவற்றையும் மறந்துவிட்டாள். அதற்குப் பதிலாக மனிதாபிமானம் பொங்கும் மனத்துடன் உழைத்தாள். உழைக்காமல் ஓடிப்போன தன் கணவன் பங்கிற்கும் சேர்த்து உழைத்தாள். உடலில் வலு இருக்கிறவரை உழைத்துச் சாப்



பிட வேண்டும் என்ற கொள்கை அந்தப் பாமரப் பொன்னியிடம் ஒட்டிக்கொண்டது.

நான்கு வருஷத்திற்கு முன்புதான் அந்தச் சம்பவம் நடந்தது. அறுபது வயதைத் தாண்டிய பொன்னிக்கிழவி ஒருநாள் அரண்மனைக்காரன் தெரு சந்திப்பின் பக்கம் பேருந்திலிருந்து இறங்கிய பிறகு சாப்பாட்டுக் கூடையை அகற்றும் நேரத்தில் அவசரமாக நடைபாதைக்கும், பேருந்துக்கும் நடுவே வந்த சைக்கிள் ஓட்டி அவள் மீது மோதித் தள்ளிவிட்டான்.

உடலில் காயம் ஏதும் இல்லை என்றாலும் அவள் ஒருவித அதிர்ச்சிக்குள்ளானாள். முழங்கால்களில் வலி தொடர்ந்தது. விளைவு தனக்குப்படி அளிக்கும், சாப்பாட்டுக் கூடை எடுக்கும் வேலையைச் செய்ய முடியவில்லை.

இந்த நிலையில் ஒரு காலத்தில் அவள் தாலாட்டுப்பாடி வளர்ந்த தேவகி பெரியவளாகி, தாயாகி, கணவனுடன் டில்லியிலிருந்து சென்னைக்கு வந்தாள்.

''ஆயா! நீ இனிமேல் வேலை செய்ய வேண்டாம். எங்கள் வீட்டிலேயே எங்களோடு இருக்கலாம்'' என்று தேவகி சொல்லிப் பார்த்தாள். பொன்னிக்கு அந்த ஏற்பாடு திருப்தியாக இல்லை. ''சின்னம்மா! உழைக்கணும் சாப்பிடணும். நான் உங்க வீட்டிலே கொஞ்சமாவது வேலை செய்ய அனுமதிக்கணும்'' என்றாள் பொன்னி.

தேவகி பேச்சை மாற்றினாள்.

''ஆயா! ரொம்ப வருஷமாச்சே! உங்க ஊர் உனக்கு நினைவிலே இருக்கா? உங்க ஊர்க்காரங்க யாரையாவது பார்த்தியா?'' என்று உரிமையுடன் கேட்டாள்.

''சின்னம்மா! அந்த வேடிக்கையை ஏன் கேட்கறீங்க? போன வருஷம் எங்க பேட்டையிலிருந்து ஒரு குடும்பம் மதுரைப் பக்கம் ஏதோ திருவிழாப் பார்க்கப் புறப்பட்டாங்க. எனக்கும் எங்க கிராமத்தைப் பார்க்கணும்னு ஆசை, கொஞ்ச நாளாகவே! அவங்க கூடப் போயிருந்தேன்.''

தேவகி இடைமறித்தாள்; ''உன்னை யாரும் அடையாளம் கண்டுக்கிட்டாங்களா?'' என்றாள்.

''சின்னம்மா! எனக்கே எங்க கிராமத்தை அடையாளம் கண்டுக்கிட முடியலியே! அப்படியில்ல மாறிப் போயிருக்கு. எங்க கிராமத்துக்கே பஸ் போகுதே! முன்னே எல்லாம் அஞ்சு மைல் மாட்டு வண்டியிலே போயில்ல காலையிலே பஸ்ஸுக்கு நிக்கணும்''.

''அப்புறம்?''

''எங்க ஊருக்கு எலக்ட்ரிக் விளக்கு வந்துடுச்சு. குடி தண்ணிக்கு குழாய் போட்டிருக்காங்க. ரோடு எல்லாம் போட்டிருக்காங்க. கம்மாயைப் பெரிசு படுத்தி இப்போ விவசாயத்துக்கு நிறைய வசதி பண்ணியிருக்காங்களாம்! சின்னம்மா! எங்க அய்யாவோட குடிசை இருந்த இடமே தெரியலே! அங்கே ஒரு பள்ளிக்கூடம் வந்திருச்சி பெரிசா! ஜனங்க சந்தோஷமாயிருக்காங்கசின்னம்மா! அந்த சந்தோஷத்திலே நானும் திரும்பி வந்துட்டேன். சர்க்காரு, கிராமங்களுக்கு ரொம்ப உதவி செஞ்சிருக்கு.''

பொன்னியின் குரல் உற்சாகத்தில் கரகத்தது.

''ஆயா! அதே சர்க்கார் உன்னைப்போல சொந்தக்காரங்களோ மற்ற வசதியோ இல்லாத வயசானவங்களுக்குப் பென்ஷன் கொடுத்து உதவுது. தெரிஞ்சுக்க. நான் உதவி பண்றேன்னு உனக்கு அதை ஏத்துக்கிட மனசு இடம் கொடுக்கலே! சர்க்கார் கொடுத்தா வாங்கிக்கணும். அது உங்க கிராமத்திற்கே உதவியிருக்கே! நாளைக்கு எங்க வீட்டுக்காரர்கிட்டே சொல்லி அதற்கான வழியைப் பார்க்கச் சொல்றேன். அதற்குப் பதிலாக நீ அப்பப்போ இங்கே வந்துஎன் மகனுக்கு தாலாட்டுப் பாடணும், என்ன சொல்றே ஆயா?''

தேவகி நிறுத்தினாள். பொன்னியின் முகத்தில் வெகுநாட்களுக்குப் பிறகு சிரிப்புப் படர்ந்தது. அது அவள் சம்மதத்தைக் குறிப்பிட்டது.

''சின்னம்மா! அந்தச் சேலை நல்லாயிருக்கா எனக்கு சொல்லுங்க'' என்று ஆனந்தத்துடன் ஒரு நாள் வந்தாள் பொன்னி. நடை தளர்ந்திருந்தாலும் அவள் மனம் தளரவில்லை.

''ஓ! சுதந்திரத் தினப் பரிசு தானே! சர்க்கார் உங்களுக்கு வழங்கும் அன்பளிப்பு! நல்லா இருக்கு ஆயா! இப்போ உதவித் தொகை கூட இருபத்தி ஐந்து ரூபாயிலிருந்து முப்பத்தி ஐந்து ரூபாயாக உயர்ந்திருக்கில்ல? உன் புடவை உனக்கு ரொம்பப் பொருத்தமாக இருக்கு! உனக்கு எழுபது வயசு இருக்குமா? பார்க்க அம்பது வயசு மாதிரி இருக்கு....'' தேவகி நிறுத்தினாள்.

''போங்க சின்னம்மா! அந்த மனுஷன் என்னை என்னிக்கு எழும்பூர் ஸ்டேஷனிலே விட்டுட்டுப் போனானோ அன்னிக்கே எனக்கு எழுபது வயசாயிருச்சு'' பொன்னி கண்களில் ஈரம் படர்ந்தது.


''ஆயா! அதை எல்லாம் மறந்துடு! மிச்சமிருக்கிற நாட்களைச் சந்தோஷமாகக் கழிக்கணும். உனக்குத் தெரியுமா? பொங்கல் திருநாளிலிருந்து உனக்குப் பகல் நேரங்களிலே சத்துணவையும் சர்க்கார் கொடுக்கப்போகுது. உடம்பிலே உயிரோடு தென்பும் இருக்க வேண்டாமா? அதுக்குத்தான்! உன்னைப்போல் சுமார் இரண்டு லட்சம் பேருக்குத் தமிழ்நாட்டிலே அந்தச் சாப்பாடு வசதி கிடைக்கப்போகுது.''

''நிஜமாகவா சின்னம்மா? ஜனங்களுக்கு உதவ சர்க்கார் என்னென்ன ஏற்பாடுகளோ செய்யறாங்க! மகராஜங்க. பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்கிறாங்களே, அது மாதிரியா சின்னம்மா?''

''ஆமா, அந்தக் காலத்திலே இல்லாத வசதிகளெல்லாம் இப்போ கிடைக்குதே போய் கொஞ்சம் தொட்டிலை ஆட்டேன்.''

''கண்ணே ராசா! கண் உறங்குடா'' என்று பாடிக்கொண்டே உள்ளே போனாள் பொன்னி.

இப்போது பொன்னிக் குட்டியின் உற்சாகம் அவள் மனத்தில் ஓடிக்கொண்டிருந்தது.




## தமிழகத்தின் மீனவ மகளிர்


தமிழ்நாட்டின் கடற்கரையோர கிராமங்களான திருச்சினான்குப்பம், கரையூர்தெரு, தரவைக்குளம் ஆகிய கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீன் விற்பனைக்கான கடன்கள் அளிக்கப்படுகின்றன. கரையூர் தெருவில் நியாயவிலைக் கடை ஒன்று இருக்கிறது. திருச்சினான்குப்பத்தில் ஒரு குழந்தைகள் காப்பகம் இருக்கிறது. தரவைக் குளத்தில் முதியோர் கல்வி வகுப்புகளும், தையல் பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன. தமிழ்நாட்டில் 1981 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் மீனவர் மகளிர் விரிவாக்க சேவை துவக்கப்பட்டது.

முதல் நடவடிக்கையாக இம்மூன்று கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. மீனவ மகளிர் இதில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். திருச்சினான்குப்பத்தில் 260 உறுப்பினர்களும், கரையூர் தெருவில் 170 உறுப்பினர்களும், தரவைக்குளத்தில் 150 உறுப்பினர்களும் தற்போது இருக்கிறார்கள்.

# தமிழகம் பெருமையை மீண்டும் பெறுகிறது









நிகழ்ச்சித்தொகுப்பு
**அ. மருதவிநாயகம்**

கங்கைகொண்ட சோழன் என்றும், கடாரம் கொண்ட சோழன் என்றும் பட்டம் ஏற்றவனும், ராஜராஜ சோழனின் அருமை மகனுமான முதவாம் இராசேந்திர சோழனின் பிறந்தநாளான மார்கழித் திருவாதிரையை இரு நாள் விழாவாக (1982 டிசம்பர் 29, 30) கொண்டாடத் தமிழ் நாடு அரசு முடிவு செய்தது. திருச்சி மாவட்டம் செயங்கொண்டம் அருகில் உள்ள கங்கைகொண்ட சோழபுரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள, விழா சிறப்புடன் நடைபெற்றது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் டிசம்பர் 29ஆம் நாள் காலை 6 மணி அளவில் திரு சனார்த்தனம் அவர்களின் நாதசுர இசையுடனும், கும்பகோணம் திரு செயராமன் அவர்களின் வீணை இசையுடனும், காசிமடம் தியாகராசன் பாடிய தேவாரப் பதிகங்களுடனும் விழா தொடங்கியது.

காலை 9 மணி அளவில் கருத்தரங்கம் திருப்பனந்தாள் காசிவாசி சுவாமிகள் தவத்திரு முத்துகுமாரசாமித் தம்பிரான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கருத்தரங்கில் டாக்டர் கலைக்கோவன், திரு. கருப்பமுத்து, திரு பி.அன்பரசு, திரு இ.சுந்தரமூர்த்தி, திரு என்.சேதுராமன் திரு. சாத்தையா, திரு சீதாமூர்த்தி, திரு எல். தியாகராசன் திரு.மு.கலைவாணன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டு இராசேந்திர சோழனின்பெருமைகளைச் சிறப்பாக எடுத்துக் கூறினார்கள்.

மாலையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் நடுவராக இருந்து பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டிமன்றத்திலே கங்கைகொண்ட சோழனின் பெரும் புகழுக்குக் காரணம் கலையே, வீரமே, நிர்வாகமே என்றுமூன்று அணியினர் தத்தம் கருத்துக்களை எடுத்துரைத்துப் பொதுமக்களின் கைதட்டலைப் பெற்றனர்.



கலையே என்ற தலைப்பில் திரு நடராசன், திரு. தாமரைக் கண்ணன், திரு ம.வெ.பசுபதி ஆகியோரும் வீரமே என்ற தலைப்பில் திரு தெ.ஞானசுந்தரம், திரு வே.மகாதேவன், திரு கே.என்.ராமச்சந்திரன் ஆகியோரும் ,நிர்வாகமே என்ற தலைப்பில் திரு.தங்கமணி, திருமதி.ஆ.பத்மாவதி, திரு.தமிழ்க்குடிமகன் ஆகியோரும் பட்டிமன்றத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நடுவர், தவத்திரு குன்றக்குடி அடிகளார் ''கங்கை கொண்ட சோழனின் பெரும்புகழுக்குக் காரணம் கலையே'' என்று தீர்ப்பளித்தார்.

இரவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு அறிஞர்கள், தலைவர்கள், சிறப்புரையாற்றினார்கள்.

திரு.பெ.முத்தையன் (அறங்காவலர், அருள்மிகு கங்கைகொண்ட சோழீச்சுரர் கோயில், கங்கைகொண்ட சோழபுரம்) அவர்கள் பேசுகையில் இந்தப் பகுதியில் உள்ள 'பொன்னேரி' ஏரியை ஆழப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உடையார் பாளையத்தைச் சேர்ந்த ஜமீன் திரு பெரிய குழந்தை ராஜா பேசுகையில், ''இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இராசேந்திர சோழன் பிறந்நாள் விழா பட்டிமன்றமாகக் கொண்டாடப்பட்டது. இன்று அரசு பெரிய அளவில் விழா நடத்துவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்'' என்றார்.



ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினர் திரு சா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகையில், ''வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்கள் வாழ்ந்த இடம் எப்படி உள்ளது என்பதை நீங்கள் இன்று பார்க்கிறீர்கள். இந்தப் பகுதியில் எந்தத் தொழில் வளமும் இல்லை ஆகவே புதிய தொழில்களைத் துவக்கவேண்டும்'' என்றார்.



செயங்கொண்டம் முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு கோ. தியாகராசன் அவர்கள் பேசுகையில், ''நல்ல முறையில் சீரும் சிறப்புமாக இங்கு இராசேந்திர சோழன் விழா முதல் முறையாக நடைபெறுகிறது'' என்றார்.

செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு ப.தங்கவேலு அவர்கள் பேசுகையில் ''300 ஆண்டுகளுக்குப் பிறகு சீருடனும் சிறப்புடனும் இங்கு விழா நடைபெறுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்'' என்றார்.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில், ''இந்துக்களுக்கு கங்கை புனிதமானது. சேரன், சோழன் முதலிய மன்னர்கள் கீழக் கடற்கரையோரமாகக் கங்கைக்குச் சென்றார்கள். சிந்து நதிப் பகுதியில் இந்து மதத்திற்கு சாதகமானவர்கள் அந்நாளில் இல்லை'' என்றார்.

திரு இரா.சௌந்தரராஜன் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், ''புரட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தில் பேசும் போது ஆலயங்களைப் பராமரிப்பேன்; புராதன கலைகளைப் பாதுகாப்பேன் என்று சென்னார் அதை இன்று செய்து காண்பிக்கிறார். மறைந்த, மறைக்கப்பட்ட வரலாறுகளை இந்த அரசு வெளிக் கொணரும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்றார்.

மத்திய அரசின் கலாச்சாரத் துறையைச் சார்ந்த கூடுதல் செயலர் டாக்டர் கபிலவத்சயன் அவர்கள் உரையாற்றுகையில், ''தஞ்சாவூர் பெரியகோவில் கங்கை கொண்ட சோழபுரம் பகுதிகளைக் கடந்த 30ஆண்டுகளாகப் பார்த்து வருகின்றேன். இங்கு பிறந்த மன்னன் பலதேசங்களுக்குச் சென்றுள்ளான். அவனது பிறந்தநாள் விழாவை இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடும் உங்களுக்கு எனது வணக்கத்தையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.






முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் பேசுகையில், ''சேர சோழ பாண்டியர்களை மூவாயிரம் ஆண்டுகள் யாராலும் வெற்றிகொள்ள முடியவில்லை. அதனால்தான் மாமன்னர்களாக விளங்கிய அசோகர், அலெக்சாண்டர் ஆகியோர் காவிரிக் கரையைத் தாண்டித் தமிழகத்திற்கு வரமுடியவில்லை. அத்தகைய வீரம் செறிந்தவர்களாகத் தமிழ் மன்னர்கள் இருந்தார்கள். நமது தமிழ் மன்னர்கள் இமயத்தின் உச்சியிலே புலிக் கொடியையும், வில் கொடியையும் பொறித்து இருக்கிறார்கள். அந்த அளவிற்குத் தமிழர்களின் வீரம் உலகமே வியக்கும் வண்ணம் இருந்தது. ஆனால் இன்றைக்குத் தமிழர்கள் நிலையை உணர்ந்து பார்க்க வேண்டும்'' என்று கூறினார்.

விழாவில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேற்புரை நிகழ்த்தி விழா சிறப்பு மலரினை வெளியிட, மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள், விழா நோக்கம் பற்றித் தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் விவரித்தார்கள்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ்.என். இராசேந்திரன் அவர்கள் சுற்றுலா மையத்திற்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''இதுபோன்ற விழாக்களை இந்த அரசு நடத்துவது மாமன்னர்களின் வாழ்க்கையையும், ஆட்சி முறையையும் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே கல்வியை வளர்த்தவர்கள் தமிழர்கள். ஆங்கிலேயர்கள் இங்கே வரும் முன்னே கட்டடக் கலையில் தமிழ் மன்னர்கள் எவ்வளவு சிறந்து விளங்கினார்கள் என்பதை வரலாறு நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

''இந்தப் பகுதியில் உள்ள இன்று 'பொன்னேரி' என்று அழைக்கப்படும் சோழ கங்கை ஏரிக்கு, அன்று கொள்ளிடத்திலிருந்து 60 மைல் வாய்க்கால் வெட்டி தண்ணீர் கொண்டு வந்து இருக்கிறார் இராசேந்திர சோழர். ஆனால் அதுபோன்று இன்றைய நிலையில் கொண்டுவருவது கடினம். இந்த ஏரியைத் தூர்எடுத்து ஆழப்படுத்துவதற்காக ரூ. ஒரு இலட்சம் விரைவில் செலவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் பல ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்''

முதல் நாள் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நிகழ்ச்சிக்கு மாண்புமிகு சட்டமன்ற மேலவைத்தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர்ம.பொ.சிவஞானம்அவர்கள் தலைமை தாங்கியும், கங்கை கொண்ட சோழனின் இலச்சினையைத் திறப்பு செய்தும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''கங்கைகொண்டான், கடாரம் கொண்டான் என்று
சிறப்புப் பெயர் பெற்ற
மாமன்னனின் விழாவில்
கலந்து கொள்ளும் நான்

தமிழ் நாட்டின் வரலாற்றைச் சிறிது நினைத்துப் பார்த்தேன். இன்றைக்கு இதுபோன்ற விழாக்கள் எடுப்பது தமிழர்களின்பிறவிக் கடமையாகும். தமிழ் மன்னர்களின் கட்டடக் கலையையும், சிற்பக் கலையையும், ஆட்சித் திறமையையும் உலகமே வியந்து வியந்துபாராட்டுகின்றது. சிதறிக் கிடக்கும் சிறுபான்மையினர் ஒன்றுபட வேண்டும், தமிழன் யார் என்பதை உலகம் உணர, நமது கல்வி முறையை மாற்றி இழந்த பெருமையை நாம் மீண்டும் பெற்றாக வேண்டும்.''

அரியலூர் கோட்ட உதவி ஆட்சித் தலைவர் திரு மு.கலைவாணன் இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார். விழா இறுதியில் கலைமாமணி செல்வி ஸ்ரீபிரியா மற்றும் வைஜந்தியமாலா குழுவினரின் பரதநாட்டியம் நடைபெற்றது.

இரண்டாம்நாள் விழா காலை 6 மணி அளவில் திருவிசைப்பா பாடலுடன் தொடங்கியது. கங்கைகொண்ட சோழீச்சுரருக்கு அபிசேக, அலங்கார தீபாராதனைகளை திருவேற்காடு ஐயப்ப சுவாமிகள் முன்னின்று நடத்தினார்கள்.

காலை 10 மணி அளவில் அண்ணாமலைப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் திருசை.வே.சிட்டிபாபு அவர்கள் தலைமையில் ஆய்வரங்கம் நடைபெற்றது. திருமதி ஆர். வசந்தகல்யாணி கோயிற் பணிகள் பற்றியும்,

### இராசேந்திரன் காலத்து அறிஞர்கள்

சர்வசிவ பண்டிதர்
இலகுளீச பண்டிதர்
ஈசானசிவ பண்டிதர்
நம்பியாண்டார் நம்பி
கருவூர்த் தேவர்
நம்பிகாட நம்பி
நாராயண கவி
அமிதசாகரர், குணசாகரர்
சதுராளன பண்டிதர்





# கங்கை கொண்ட சோழபுரத்தின் முன்னேற்றம்



பிற்காலச் சோழர்கள் பெருமையுற்ற பின் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். சோழ மன்னர்களில் திலகமாய்த் திகழ்ந்த ராஜராஜனுக்குப் பின்னர் அவனது மகன் முதலாம் இராசேந்திரன் கி. பி. 1012-ல் அரியணை ஏறினான். அவனது வீரதீரமிக்க சிறப்பான ஆட்சி கி. பி. 1044 வரை கோலோச்சியது. முதலாம் இராசேந்திரன் கடாரத்தைக் கைப்பற்றியதோடு கங்கைவரை சென்று கவின்பெரு புலிக்கொடியை வானுயர்த்திப் புகழ் பெற்றான்.

கங்கை வரை வெற்றி கண்ட காரணத்தால் அவன் கங்கை கொண்ட சோழன் என்றே அழைக்கப்பட்டான். அந்த வெற்றியை நினைவுறுத்தும் வகையில் கங்கை கொண்ட சோழபுரம் என்ற பெருநகர் உண்டாக்கினான். அது அவனது தலைநகராய்த் திகழ்ந்தது. இன்று களையிழந்து காணப்படும் அந்த இடம் அன்று சீரும் சிறப்பும் பெற்று திருநகராய் விளங்கியிருக்கிறது.

அங்கு சிற்பக் கலையின் உன்னத நிலையினைப் பறை சாற்றிக் கொண்டிருக்கும் பிரகதீசுவரர் ஆலயத்தை எழுப்பினான். கட்டிடக் கலையின் சிறப்பைக் காட்டும் வண்ணம் கோட்டம், கொத்தளங்கள் உருவாக்கப்பட்டன. எழில்மிகு மாடமாளிகைகள் கட்டப்பட்டன. தலைநகரைச் சுற்றி உயர்மதில்கள் எழுப்பப்பட்டிருந்தன. பொறியியல் வல்லாண்மைக்கு எடுத்துக்காட்டாக சோழகங்கம் என்ற வளம் செய்யும் மிகப் பெரிய ஏரி உருவாக்கப்பட்டு மக்களுக்கு வளமும் வாழ்வும் அளித்தது என்றும் இந்த நகரம் தமிழகத்தின் ஆழ்ந்த கலைச் சிறப்பினையும், கட்டடக் கலையின் ஆற்றலையும் மாறாத கடவுள் தன்மையையும் புராதனத் தன்மையையும் எடுத்துக் காட்டும் சரித்திரச் சான்றாக விளங்குகிறது.

திரு. ஸ்ரீதரன் கல்வெட்டுக்களின் அமைப்பு பற்றியும், திரு எஸ். இராமச்சந்திரன் அயல் நாட்டுத் தொடர்பு பற்றியும், திரு. செந்தில் செல்வக்குமரன் கொடைகள் பற்றியும், திரு. வேதாச்சலம் நாட்டுப் பிரிவுகள் பற்றியும், திரு மா.இராசேந்திரன் நிர்வாகத்தில் பெண்கள் பற்றியும், திரு.மு.அருணாச்சலம் சோழர் காலத்திய கோயில்கள் பற்றியும், திரு அருமைராசு ஒப்பற்ற தலைநகர் பற்றியும் டாக்டர் பிஸ் சார்ட் (பிரெஞ்சு) கட்டடக்கலை பற்றியும், டாக்டர் தஷன்ஸ் (பிரெஞ்சு அறிஞர்) நகரமைப்பு பற்றியும், செல்வி கொரினா வெசல்ஸ் (ஜெர்மானிய அறிஞர்) இராசேந்திர சோழன் காலத்திய வரலாறுகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

மாலையில் இராசேந்திரசோழனின் சிறப்புகள் பற்றித் திருச்சி எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கில் திரு.இராமராசன் (கம்பராமன்) 'பெண்கள்' என்ற தலைப்பிலும், வருவாய்த்துறை ஊழியர் திரு பெ.சீனிவாசன் 'வழி' என்ற தலைப்பிலும், திரு பொ. இராசேந்திரன் 'ஆட்சி' என்ற தலைப்பிலும், திரு. திருமலைராசன் 'கீர்த்தி' என்ற தலைப்பிலும் திருநா. காமராசன், 'வெற்றி' என்ற தலைப்பிலும் மற்றும் அரசப்பனார், திரு. செல்வராஜ் ஆகியோரும் கவிதை பாடினர்.

தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா.நாகசாமி அவர்கள் இராசேந்திர சோழன் வளைவுக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரை செய்தார்.



இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. சண்முக சிகாமணி இ. ஆ. ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி, கங்கை கொண்ட சோழன் வளைவுக்கு அடிக்கல் நாட்டினார்.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சாந்தாஷீலா நாயர் இ. ஆ. ப. அவர்கள் பேருந்து நிலையத்தைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் சத்துவுணக் கூடத்திற்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றுகையில் கூறியதாவது:



''இராசேந்திரன் கலைநுணுக்கம் உள்ளவர் என்பதற்கு இந்தக் கோயில் ஓர் எடுத்துக்காட்டு. போரில் வெற்றி பெற்றவர்கட்கும் தமிழ் அறிஞர்கட்கும், வீர மரணம் எய்தியவர்கட்கும் இந்த அரசு விழா நடத்தி வருகின்றது. மன்னர் மிகவும் சிவபக்தி மிகுந்தவர். உழைப்பால் உயர்ந்தவர்கள் சோழர்கள். பிரெஞ்சு நாட்டு நிபுணர்கள் இங்கு நுட்பமான கருவிகள் மூலம் ஆராய்ச்சிசெய்து வருகின்றார்கள். அவர்கள் தமிழ் கற்று வருகிறார்கள். தமிழ்நாட்டின் பெருமையை இந்த விழா மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மக்கள் அறிந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். இந்தப் பகுதி கடலால் சூழப்பட்டிருக்க வேண்டும் என்று இங்கு வைத்துள்ள கண்காட்சி மூலம் உணர்ந்தேன்''

மாண்புமிகு நிதிஅமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்து, கங்கைகொண்ட சோழ மாளிகை வரலாற்றுக்கூடத்தைத் திறந்து வைத்து உரை ஆற்றிய போது குறிப்பிட்டதாவது:

''இராசேந்திர சோழனின் பிறந்தநாள் விழாவை அரசு நடத்துகிறது. இந்த இடம் சுற்றுலா மையமாகத் திகழும். வரலாற்றுப் புகழ்மிக்க கலைப் பொருட்காட்சி இங்கு வைக்கப்படும். இது போன்ற விழாக்களின் மூலம் சோழமன்னர்களின் வீரம், கலை ஆற்றல் ஆகியவற்றை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. நாடெல்லாம் தமிழ் மன்னர்களின் புகழ் எவ்வாறு பரவிக் கிடந்தது என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. சோழ மன்னர்களுக்கு விழா எடுப்பது போல் சேர, பாண்டிய, பல்லவ மன்னர்களின் வரலாறுகளையும் நன்கு ஆராய்ந்து அந்த மன்னர்களுக்குத் தமிழக அரசு விரைவில் அந்தந்தப் பகுதிகளில் விழா எடுக்கும். தஞ்சை மாவட்டத்திலே மலைகளே கிடையாது. ஆனால் உலகமே வியக்கத் தக்க அளவில் தஞ்சைக் கோபுரமும், அங்குள்ள நந்தியும் கட்டப்பட்டு இருக்கின்றன. இந்தப் பெருமை இராசராச சோழனையே சாரும்.

''பஞ்சாயத்துத் தேர்தல்களில் மக்கள் எப்படி வாக்களித்தார்கள்? வேட்பாளர்களின் தகுதி, தேர்தலில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் என்ன? என்பவை பற்றி கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன.

''தமிழ் மன்னர்களின் வீர வரலாறுகளை முழுவதும் தெரிந்து கொள்ள இப்படிப்பட்ட விழாக்களைத் தமிழகஅரசு தொடர்ந்து நடத்தும்.''

இரண்டு நாள் நிகழ்ச்சிகளும் கங்கைகொண்ட சோழீச்சுரர் வாயிலில் உள்ள பீரங்கி மேடை அருகே அமைக்கப்பட்டிருந்த கடாரங்கொண்ட சோழன் கலையரங்கில் நடைபெற்றன.

லண்டனைச் சார்ந்த தமிழ் அறிஞர் திரு.ஆஷ் அவர்கள் இராம்சந்திர சோழன் பற்றித் தமிழில் உரையாற்றினார்.

இரவில் கங்கை கொண்ட விடங்கர் வீதி உலா, வாண வேடிக்கைகள், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கங்கை கொண்ட சோழன் பிறந்தநாள் விழா, உள்ளத்தைக் கொள்ளை கொண்ட விழாவாக அமைந்தது.



## முதல் இராசேந்திர சோழன்

| | | |
|---|---|---|
| தந்தை | .. | இராஜராஜ சோழன் |
| தாய் | .. | வானவன் மாதேவி என வழங்கும் திருபுவன மாதேவி |
| பிறப்பு | .. | மார்கழித் திங்கள் திருவாதிரை நட்சத்திரம். |
| இயற்பெயர் | .. | மதுராந்தகன் |
| பட்டப்பெயர் | .. | இராசேந்திரன் |
| ஆட்சிக்காலம் | .. | கி.பி. 1012—1044 |
| மறைவு | .. | கி. பி. 1044 |

இராசேந்திர சோழனின் சிறப்புப் பெயர்கள் இருப்த்தைந்து.

இராசேந்திர சோழனின் மனைவியர் ஐவர்

இராசேந்திர சோழனின் மக்கள் பன்னிருவர்

இராசேந்திரன் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் முப்பத்திரண்டு.

இராசேந்திர சோழன் வெற்றி கொண்ட நாடுகள் முப்பத்து மூன்று.

இராசேந்திர சோழனின் சேனாதிபதிகளும், வீரத்தலைவர்களும் அதிகாரிகளும் அறுபத்தேழு பேர்கள்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்து ஆண்ட இராசேந்திர சோழனும் அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த அரசர்களும் மொத்தம் பதின்மூன்று பேர்.

வடக்கே கங்கைக்கரை வரையிலும், தெற்கே இலங்கை முழுவதும், மேற்கே மேலக் கடற்கரை முதல் கிழக்கே மலேயா, சிங்கப்பூர், பர்மா, சுபத்ரா, ஜாவா, நிக்கோபார் முதலிய நாடுகளை அடிப்படுத்திச் சோழர்தம் வெற்றிக் கொடியான புலிக்கொடி பறக்கவிட்ட மாபெரும் சோழப் பேரரசன்.



## மாளிகை மேடு


கங்கை கொண்ட சோழபுரத்தில் 'மாளிகை மேடு'' என்று அழைக்கப்படும் கோவிலின் அருகில் உள்ள இடத்தில் தொல் பொருள் ஆய்வுத்துறையினர் அகழ்வாராய்ச்சி நடத்தி, இராசேந்திர சோழனின் அரண்மனை அடித்தளம், கோட்டை-கொத்தளத்தின் அடித் தளம் போன்றவற்றைத் தோண்டி, காட்சிக்காக வைத்துள்ளனர். திருச்சி மாவட்டத்தில் கிடைத்த காட்சிப் பொருள்கள்-தொல்பொருட் களையும் அருகில் ஒரு காட்சி நிலையம் அமைத்துப் பொதுமக்கள் பார்வைக்கு வைத் திருந்தனர்.
















தமிழிலே என்ன இருக்கிறது என்ற நிலைமாறி, தமிழிலே எல்லாம் இருக்கிறது என்ற நிலை உருவாகி வரும் காலத்தில் நாம் வாழ்வது நமக்குக் கிடைத்த பெரும்பேறு. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்றதொரு பொற்காலத்தை நோக்கி நாம் பீடு நடை போடுகிறோம். பாராண்ட மொழி மீண்டும் புதிய உணர்வுடன் வளர்ந்து பல்கலைச் செல்வமும் தமிழில் வளர்ந்தோங்கி வரும் காலமிது. வேற்று மொழிகளின் ஆதிக்கத்தால் தமிழர்களின் கலை, சமுதாயம், பண்பாடு, நாகரிகம் ஆகிய அனைத்திற்கும் சவால் ஏற்பட்டிருந்த நேரத்தில் தமிழிசையும் நம் மக்களாலே புறக்கணிக்கப்பட்டிருந்தது. மேடையிலே தமிழிலே பாடும் இசை வாணர்கள் எள்ளி நகையாடப்பட்டார்கள். இசை மேடைகளிலே இறை வணக்கத்திலும்கூட தமிழ் தடைபட்டிருந்தது. தேவாரமும், திருவாசகமும், திருக்குறளும், சிலப்பதிகாரமும் கண்ட செந்தமிழுக்கு இந்நிலை ஏற்பட்டதைக் கண்டு 'வாடிய பயிரைக் கண்டு வாடும்' அருளுள்ளம் படைத்த பல தமிழ்ப் பெரியார்கள் உள்ளம் துடித்தனர். அந்தத் துடிப்பு ஓர் இயக்கமாக உருவெடுத்தது. அந்த மாபெரும் இயக்கம்தான் தமிழிசை இயக்கம்.

அந்த இயக்கத்தின் தந்தையாகத் திகழ்ந்தவர் தில்லையிலே தமிழ்ப் பல்கலை வளர அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கண்ட கொடை வள்ளல் அண்ணாமலை அரசராவர். தமிழ்நாடு முழுவதும் தமிழிசை முழங்க வேண்டும் என்பதையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட அப்பெருமகனார் இன்று நம்மிடையே இல்லையெனினும், அவருடைய இலட்சியக் கனவு இன்று நனவாகி, நாடு முழுவதும் நல்லோர் உள்ளந்தோறும் குடிகொண்டு, தமிழிசைத் தென்றல் வீசிக் கொண்டிருக்கிறது.

முத்தமிழ் நடுநாயகமாகத் திகழும் இசைத்தமிழ், பழங்காலத்தில் மேம்பாட்டுடன் திகழ்ந்தது. வேற்று நாட்டாரும் விரும்பிக் கற்ற தமிழிசை, நம்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் அந்நியர் ஆட்சியில் நலிவுற்றது. இந்நிலை இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை நீடித்திருந்தது. நாயக்கர் ஆட்சிக்காலத்தில் வேரூன்றிய தெலுங்கு இசை, தமிழிசையை இசையரங்குகளில் இறுதியாகப் பாடும் துக்கடா இசையாக மாற்றிவிட்டது.

1936ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இசை மாநாடு அண்ணாமலையரசரின் உள்ளத்தில் புதியஉணர்வினை ஏற்படுத்திற்று. 16.11.1940ல் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் தமிழிசைவளர்ச்சிக்காக அண்ணாமலையரசர் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார். அதைத் தொடர்ந்து அண்ணாமலைநகரில் 1941ல் முதல் தமிழிசை மாநாடு நடைபெற்றது. இம்மாநாடு, இதன் பின்னர் திருச்சிராப்பள்ளியில் தந்தை பெரியார் அவர்களின் தலைமையில் நடந்த மாநாடு, அதையடுத்துத் தமிழிசையை ஆதரித்து நடந்த மாநாடு, அதையடுத்துத் தமிழிசையை ஆதரித்து இசைவாணர்கள் விடுத்த அறிக்கைகள், காஞ்சியில் நடந்த சென்னை மாநிலக் கலைச்சொல் ஆக்க மாநாட்டின் தீர்மானங்கள் ஆகிய அனைத்தும் தமிழிசை இயக்கத்தின் வளர்ச்சிக்கும், தமிழிசைச் சங்கத்தின் தோற்றத்திற்கும் முன்னோடியாகத் திகழ்ந்தன. அதே ஆண்டில், தொடர்ந்து சென்னை விக்டோரியா மண்டபத்தில் நாடகத் தந்தை பம்மல் சம்பந்தனார் தலைமையில்பேரறிஞர் அண்ணா, டாக்டர் திருமூர்த்தி, டி.செங்கல்வராயன், இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர், டி.எஸ். இராசரத்தினம், கே.பொன்னையா ஆகியோர் பங்கு கொண்டு தமிழிசை இயக்கத்தை ஊக்குவித்து ஆற்றிய உரைகள் இவ்வியக்கம் சாதி, சமய அடிப்படைகளுக்கு அப்பாற்பட்ட இயக்கம் என்ற உணர்வினைத் தமிழகத்தில் ஊக்குவித்ததோடு, தமிழ் மக்களின் தமிழிசை எழுச்சியைக் கூறுவதாகவும் அமைந்தது. இந்நிகழ்ச்சி அண்ணாமலையரசர்ன் அருமைக் குமாரர் முத்தையாவேள் அவர்களை இவ்வியக்கத்தின்பால் ஈடுபாடு கொள்ளச் செய்தது.

1941ம் ஆண்டு சென்னை தியாகபிரம்ம மகோற்சவ சபையின் இசை விழாவில் அண்ணாமலையரசரின் தலைமையுரை தமிழிசை இயக்கத்தின் முன்னுரையாக அமைந்தது. அதே ஆண்டு நிகழ்ந்த அண்ணாமலையரசரின் மணி விழாவில் அப்பெருமகன் பெருந் தொகையைத் தமிழிசைக்கு நன்கொடையாக வழங்கியது தமிழிசைக்கு மேலும் வலுவூட்டியது. தொடர்ந்து தமிழிசைக் குழந்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தாலாட்டிச் சீராட்டி வளரத் தொடங்கிற்று. தமிழிசை நூல்களின் வெளியீடுகளும், இசையரங்குகளும் சீராகவும், செம்மையாகவும் நடைபெறத் தொடங்கின.

அதன் பின்னர் தேவகோட்டையில் ரசிகமணி டி. கே. சி. தலைமையில் நடந்த தமிழிசை மாநாடும், திருச்சிராப்பள்ளியில் பொன்னையா பிள்ளை தலைமையில் நடந்த மாநாடும் இவ்வியக்கத்திற்கு மேலும் புத்துணர்ச்சியூட்டின. இதைத் தொடர்ந்து தமிழகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தமிழிசைக்குரல் ஒலிக்கத் தொடங்கியது. 1942-ல் நடந்த மதுரைத் தமிழிசை மாநாடு, புதுக்கோட்டை மாநாடு, ஆத்தங்குடி இசைய



## ஈடு எதிர் இல்லாத இசை

வளைந்து வளைந்தோடும் அந்த அருவி, வெண்மணலைத் தழுவிக் கொண்டு, தழதழத்த குரலில் பாடுவது கேளீர்! எந்தப் பாட்டு இதற்கு ஈடாகும்?

செடியும் கொடியும், தளிரும் இலையும், மலரும் கனியும் ஆடும் காரணம் அறியீரோ! அதோ, வீசும் காற்றுடன் கலந்து வரும் இசை கேட்டே, அவைகள் ஆடுகின்றன, நடன சுந்தரிகள் போல!

பச்சிளங்கன்று, தாயைக் கூப்பிடும் குரல் கேட்டீரோ! அதிலுள்ள இசை இன்பமே தனியானது!

போர்வீரன், தனது உடலில் கவசமணிந்து வாளை உறையினின்றும் எடுக்கிறானே, அச்சமயம் கிளம்பும் ஒலி! வீர உள்ளம் படைத்தோர்க்கு இசை!

இம்மட்டுந்தானோ! குழலா இனிது? யாழா இனிது? மக்களின் மழலையே இனிது. ஈடு எதிர் இல்லாத இசையாகும் இது!

இங்ஙனம் இசை இன்பத்தை, ஓடும் அருவியில், வீசும் காற்றில், விளையாடும் கன்றின் குரலில், கொஞ்சும் குழந்தையிடம், வீரரின் செயலில், காதலியிடம் காண்பீர்! களிப்பீர்!

## இசை இன்பத்தைத் தர வேண்டுமென்றால்.........

இசை, இன்பத்தைத் தரவேண்டுமானால், அதைக் கேட்போரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வேண்டுமானால், யார் முன்னால் பாடல் பாடப்படுகிறதோ, அது அவர்கள் புரிந்து கொள்ளக்கூடியதான மொழியில் இருத்தல் வேண்டும். இது அறிவுத் துறையில் அரிச்சுவடி!

நீக்ரோவின் நடனத்தைக் காண்கிறோம், கண்டு விட்டு நகைக்கிறோம். ஆனால் நீக்ரோவுக்கு நெஞ்சு இழைகிறது. நீக்ரோ நடனத்தைக் கண்டு! ஏன், அதனைப் புரிந்து கொள்கிறான்.

— பேரறிஞர் அண்ணா

ரங்கம், குடந்தை மாநாடு ஆகியவை குறிப்பிடத்தக்கன. பின் திருப்பத்தூர், கானாடுகாத்தான், திண்டுக்கல், வேலூர் மற்றும் எல்லா ஊர்களிலும் தமிழிசைக் கல்லூரிகளும் கழகங்களும் தொடங்கப்பட்டன.

தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னை மாநகரில் தமிழிசைச் செம்மல் டாக்டர் ஆர். கே. சண்முகனார் அவர்களின் சீரிய ஒத்துழைப்போடு அண்ணாமலையரசரால் 1943-ஆம் ஆண்டு தமிழிசைச் சங்கம் உருவாயிற்று. இந்நாள் தமிழிசை வரலாற்றிலே ஒரு பொன்னாள். தமிழிசைச் சங்கத்தின் தலைவராக அண்ணாமலையரசரும், துணைத்தலைவராக ஆர். கே. சண்முகம் அவர்களும் ஆனார்கள். அதே டிசம்பர் இறுதியில் முதல் தமிழிசை மாநாடு சென்னை செயிண்ட்மேரி மண்டபத்தில் தொடங்கிற்று. தமிழ்ச் சங்க நாதம் ஒலித்தது.

அண்ணாமலையரசர் தலைமையில் நடந்த இம்மாநாட்டில் பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் இராஜாஜி, பேராசிரியர் கல்கி, நாடகவாணர் பம்மல் சம்பந்தனார் போன்ற அறிஞர் பெரு

ழிசை முழக்கம் செய்தார்கள். மாநாட்டின் இறுதியில் பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாடு நடந்த எல்லா நாட்களிலும் நாள்தோறும் தமிழிசை வாணர்களின் இன்ப இசை விருந்தை தமிழ் உள்ளங்கள் செவிமடுத்து, இன்பவெள்ளத்தில் மூழ்கின. பல்வேறு எதிர்ப்புகளைத் தவிர்த்து தமிழிசை இயக்கம் வேரூன்றி வளரத் தொடங்கிற்று. அன்று தொடங்கிய தமிழிசைப்பணி இன்று தொடர்ந்து பல்லாற்றாலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

பல்லாண்டுகளாக நடந்து வரும் பண் ஆராய்ச்சி மாநாடு, பழந்தமிழ் இசையைப் பற்றி நாம் நன்கு அறிந்து கொள்ளவும், தமிழ் மக்களிடம் தமிழிசை யுணர்வை ஊட்டவும் பயன்படுகிறது.

தமிழிசைச் சங்கம் தொடங்கப்பட்ட மறு ஆண்டிலேயே தமிழிசைக் கல்லூரி தொடங்கப்பட்டு, பணியாற்றி வருவதை தமிழ் நெஞ்சங்கள் மனதார வாழ்த்தி வரவேற்கின்றன. இக்கல்லூரியில் வாய்ப்பாட்டு, வீணை, மிருதங்கம் முதலிய அனைத்து

ஆண், பெண் இருபாலருக்கும் அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரியின் பணியினைப் பாராட்டி அரசினர் பல்வேறு உதவிகளைச் செய்து வருவது தமிழிசைக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வளர உதவி செய்கிறது. வெளி நாட்டினர் சிலரும் இதில் பயின்று பலன் பெற்றுள்ளனர். 'இராசா அண்ணாமலை மன்றம்' என்ற மிகப் பெரிய சொந்தக் கட்டிடத்தில் தமிழிசைச் சங்கத்தின் பொன் விழா 1967-ல் இவ்வியக்கத்திற்கு தொடக்க காலம் முதல் ஆதரவளித்த பேரறிஞர் அண்ணா தலைமையில் நிகழ்ந்தது, வரலாற்றுச் சிறப்புமிக்கதோர் நிகழ்ச்சியாகும். தமிழிசை விழாவில் ஆண்டுதோறும் சிறந்த இசைவாணர் ஒருவருக்கு இசைப் பேரறிஞர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது.

தமிழிசைச் சங்கத்தின் சார்பு அமைப்புக்கள் இன்று மதுரை, காரைக்குடி போன்ற இடங்களில் செயலாற்றுவது மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். தமிழிசை இயக்கம் மாபெரும் மக்கள் இயக்கமாக உருவாகித் தமிழ்ப் பண்பாட்டினைத் தரணி அறியச்

# மாணவர் பக்கம்

## பொங்கல் விழா பிறந்த கதை

**தை** மாதம் முதல் நாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடுவதன் பொருள் என்ன? தை மாதத்திற்கும் தமிழனுக்கும் என்ன தொடர்பு? தமிழனுக்கு இந்நாள் மாத்திரம் ஏன் சிறந்த திருநாள்? என்பவை முதலில் விளக்கப்படல் வேண்டும்.

இது தை மாதம். ஒரு வருடத்தை வான நூற்பயிற்சி வல்லுநர், பகல் அதிகமாக உள்ள பகுதி இரவு அதிகமாக உள்ள பகுதி என இருபெரும் பிரிவுகளாக வகுத்துள்ளனர். ஆடி முதல் மார்கழி முடிய இரவு அதிகமான காலம். தை முதல் ஆனி முடிய பகல் அதிகமான காலம். தை பிறந்தால் பகல் தோன்றும். நேற்று வரை சூரியன் தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தான். இரவு அதிகமாகிக் கொண்டிருந்தது. குளிரும் மக்களை அதிகமாக வருத்திக் கொண்டிருந்தது. இவ்வாறு சூரியன் தெற்கு நோக்கியே சென்று கொண்டிருந்தால் உலகத்தில் இருள் நிறையுமே, பனி வருத்துமே என ஏங்கிக் கொண்டிருந்தனர் உலகினர். இன்று சூரியன் திரும்பி, வடக்கு நோக்கிச் செல்ல ஆரம்பித்து, வாடிய மக்களுக்கு ஆறுதல் அளிக்கின்றான். ஆகவே தான் இது நன்னாள்-திருநாள். இதைப் பார்த்துத்தான் தமிழ் மக்கள் இதைத் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள்.

இனி இது எப்படி முதல்நாள் என்று பார்ப்போம்? இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் என்னும் பிரிவினர்க்கு எப்போது நாள் தொடங்குகிறது என்றால், இந்துக்களுக்குக் காலை 6 மணிக்கு நாள் ஆரம்பித்துவிடுகிறது. முஸ்லீம்களுக்கு மாலை 6 மணிக்கு நாள் தொடங்குகிறது. முஸ்லீம்கள் சூரியனுக்கு மாறாக பிறையைக் கண்டு நாள் கணக்கு வைக்கிறார்கள். உதாரணமாக, இந்துக்களுக்குத் திங்கள் இரவாயிருப்பது முஸ்லீம்களால் செவ்வாய் இரவாகக் கருதப்படும். கிறிஸ்தவர்கள் முன்னே சொன்ன இரண்டு முறையையும் விட்டு விட்டார்கள். அவர்களுக்கு நள்ளிரவு 12 மணி அடித்த பிறகு நாள் தொடங்குகிறது. ஆனால் இவர்களல்லாத பழந்தமிழர்களுக்கு உச்சிப் பொழுதிலிருந்து நன்னாள் தொடங்கும். 'உச்சிக்கு அச்சமில்லை' என்றும் சொல்வார்கள். உச்சிக்கு நாள் இல்லை நட்சத்திரம் இல்லை, தேதி இல்லை, கிழமை இல்லை, சுத்தமான, வெள்ளையுள்ளம் படைத்த களங்கமற்ற நேரம் அல்லவா?

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத புதுப் பொருள்கள் விளையவும், மகிழ்ச்சிக்குரிய புதுமலர்கள் பூக்கவும், மக்களைத் துன்பத்தினின்றும் நீக்கவும் சூரியன் தென் திசையினின்றும் வட திசை நோக்கித் திரும்பத் தொடங்குகின்ற இந்நாள்-முதல் நாள் - நன்னாள் - திருநாள் எனச் சொல்லப் பெறுகின்றது.



தமிழர் திருநாளை ஓர் வெற்றித் திருநாள் எனலாம். ஏன் இது வெற்றித் திருநாளாகக் கருதப்படுகிறது? புதிய நெல் விளைந்து விட்டது. கரும்பைச் சாறாக்கிச் சர்க்கரை காய்ச்சியாய்விட்டது. இரண்டையும் சேர்த்தும் பொங்கிச் சாப்பிடுகிறோம். உழைப்பின் முழுப் பயனை இன்று பெறுகிறோம். மஞ்சளும், இஞ்சியும், வானுயர் கரும்பும் எல்லாமும் விளையும் காலம். வீடு புதிதாகிறது. ஆளும் புதியவனாக மாறுகிறான். எங்கும் புதிய நெல், புதிய பானை, புதிய உடை புதிய மலர், புதிய உள்ளம் காணப்படுகின்றது. இதைப் பார்த்துத் தமிழ் மக்கள் இந்நாளை இயற்கையோடு இயங்கும் திருநாளாகக் கருதி வெற்றித் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள்.

ஆதாரம் : வள்ளுவர் உள்ளம்.

தகவல் :

**வ. இரவிச்சந்திரன்**
12ஆம் நிலை 'அ' பிரிவு
அரசினர் மேனிலைப்பள்ளி
கலவை அஞ்சல்
வட ஆர்க்காடு மாவட்டம்

## இந்தியாவில்...

| | |
|---|---|
| மிக அதிகம் கற்றவர்களைக் கொண்டுள்ள மாநிலம் | — கேரளம் (60.4%) |
| மிக அதிக மக்கள் தொகை உள்ள மாநிலம் | — உத்தரப் பிரதேசம் |
| மிக நீளமான நதி | — கங்கை |
| மிக அதிகப் பரப்பளவுள்ள மாநிலம் | — மத்தியப் பிரதேசம் |
| மிகப் பெரிய இரயில் என்ஜின் உற்பத்திச் சாலை | — சித்தரஞ்சன் |
| மிக நீளமான சாலை | — கிராண்ட் ட்ரங் சாலை |
| மிக அதிகமான பழுப்பு நிலக்கரி கிடைக்குமிடம் | — நெய்வேலி |
| மிக உயரமான அணைக்கட்டு | — பக்ராநங்கல் |
| மிகப் பெரிய பாலைவனம் | — தார் பாலைவனம் |
| மழை வளம் அதிகமுள்ள இடம் | — சிரபுஞ்சி |
| மிகச் சிறிய மாநிலம் | — சிக்கிம் |

வை. சமுத்திரக்கனி,
மேல்நிலை இரண்டாமாண்டு 'அ' பிரிவு.
சி.இ.நா.வி. மேல்நிலைப் பள்ளி,
சிவகாசி.

# முகவையிலே புது எழுச்சி

மாவட்டம் தோறும், தலைநகரில் தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் திறக்கப்பட்டு வரும் தொண்டின் தொடர்ச்சியாக இராமநாதபுர மாவட்டத்தில், முகவை நகர் என வழங்கப்பெறும் இராமநாதபுரம் நகரில் 6.12.'82ல், நினைவுத் தூண் திறக்கப்பட்டது.

நாதசுர இசையுடன் விழா தொடக்கம் ஆகியது; வண்ண விளக்குகளின் பின்னணியில் - வைர நெஞ்சத்து மக்களின் முன்னிலையில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்ட விழா -அனைவரின் இதயத்தையும் மகிழ்வித்தது.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''புத்தரின் கொள்கையினால் வயப்பட்ட அசோக மன்னர், அன்று பொறித்துவைத்த கல் தூண் இன்று ஆராய்ச்சியாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. அதுபோன்றே பெரியார் அவர்களின் கருத்துகள் பொறிக்கப்பட்ட தூண்களை நாம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவி வருகிறோம்.''

விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கா.காளிமுத்து அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்.

''நொடிக்கு நொடி பழமை நூலாம்படையை அடித்ததால் பெரியாரைத் தமிழகம் நன்றியோடு நினைவு கூர்கிறது. தமிழ்ச் சமுதாயத்தின் உய்வுக்காக-உயர்வுக்காகப் பாடுபட்டவர் அவர் என்பதால் நன்றி காட்டுகிறது. பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு-மேட்டுக்குடியினரால் மிதிபட்ட சமுதாயத்திற்கு-மெய்க்காப்பாளனாக அவர் உதவினார்.

கி.பி 2ம் நூற்றாண்டில் கண் மூடிய சமுதாயத்தின் கண்களை 20ஆம் நூற்றாண்டில் திறந்து வைத்தார் பெரியார்''

''பெரியாரின் பொன்மொழிகள் இந்தச் சமுதாயத்திற்கு ஊட்ட மாத்திரைகள்-தூக்கமாத்திரைகள் அல்ல. அவர், வழி காட்டும் இலக்கணப் புத்தகமாகத் திகழ்ந்தார்''

அடுத்து உரையாற்றிய திரு இராஜனார்த்தனம், எம்.எல்.சி. தெரிவித்தார்:

''இன்று தந்தை பெரியார் அவர்களின் கருத்து நாடெங்கும் பரவியிருப்பதற்கு அவரது பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

''பெண் இன உயர்வுக்காகப் பெரும்பாடுபட்டவர் பெரியார். பெண்கள் அஞ்சா நெஞ்சத்துடன், அறிவுக் கூர்மையுடன் வாழ வேண்டும் என்பது அவரது போதனை''.

அடுத்து, உரையாற்றிய திருவாரூர் கே. தங்கராசு தெரிவித்தார்:

"தமிழ் இனம் ஏன் தாழ்ந்து போனது என்பதைத் தமது 8வது, 9வது வயதிலேயே எண்ணிப் பார்த்திருக்கிறார் அவர்.''

அடுத்து உரையாற்றிய இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி. இராமசாமி தெரிவித்தார்:

''பெரியாரின் கருத்துக்கள் நாட்டு மக்களிடம் தோல்வியடையவில்லை; வெற்றி நடைபோட்டுவருகிறது.

அடுத்து உரையாற்றிய கடலாடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு வி.சத்தியமூர்த்தி குறிப்பிட்டார்:

''எப்படிப் பேசினால் இந்த மக்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று எண்ணிப் பேசியவரல்ல; எப்படிப் பேசினால் இந்த மக்களைச் சிந்திக்க வைக்க முடியும் என்று எண்ணிப் பேசியவர் பெரியார்.



அடுத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு பொ. அன்பழகன் தெரிவித்ததாவது;

''நாயாக - பன்றியாக -நடைபோட்டு வந்த மக்களைப் பகுத்தறிவு வாதிகளாக நடக்க முடியும் வகையில் மாற்றி யமைத்த தந்தை பெரியாரின் கருத்துக்களுக்கு நினைவுத்தூண் எழுப்புவது நியாயமான செயல்''

நினைவுத் தூணைத் திறந்து வைத்து உரையாற்றிய மாண்புமிகு நிதிஅமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் குறிப்பிட்டார்:

''மனிதத்தன்மை வளர-மனிதப் பாங்கு வளரப் பாடுபட்ட தந்தை பெரியார் தமது உடல்நோய் குறித்துக் கவலைப்படாமல், 95வது வயதிலும் தமிழகம் முழுதும் சுற்றிச் சுழன்று வந்தார். உலகத்தில் வேறு எங்கும் இப்படி ஒரு தலைவரைக் காணமுடியாது.

''அவரது நூற்றாண்டைகொண்டாட உருவாக்கப்பட்ட குழு, 30 காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அறிக்கையைக் கொடுத்தது. அவற்றை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக ஆணையிட்டார்கள். அவை ஒவ்வொன்றாக நிறைவேற்றப் பெற்று வருகின்றன.''


பேருரையை முடித்துவிட்டு, மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள், 22 பேருக்கு நிலப் பட்டா, 51 பேருக்கு வீட்டுமனைப் பட்டா ஆகியவற்றை வழங்கியதுடன், முதியோர் உதவித் தொகை, விவசாயத் தொழில் உதவித்தொகை, இலவசசலவைத் தேய்ப்புக் கருவிகள், சைக்கிள் ரிக்ஷா, தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை அளித்தார்.

மாவட்ட ஆட்சியாளர் திரு. அர.சந்தானம் இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை கூறினார். அதன் பின்னர் கே. பி. ராஜ்மோகன் குழுவினர் நடத்திய 'அண்ணா ஒரு காவியம்' நாடகத்தில் சில காட்சிகளும் - அண்ணாவின் 'குமரிக்கோட்டம்' நாடகமும் நடைபெற்றன. இரவு 3 மணி வரை மக்கள் ஆர்வத்துடன் குழுமியிருந்த நிகழ்ச்சி-தந்தை பெரியாரிடத்தும் அறிஞர் அண்ணாவிடத்தும் அவர்கள் கொண்டிருந்த பற்றுதலை எடுத்துக்காட்டியது.

—நிகழ்ச்சித் தொகுப்பு
தமிழ்ப்பித்தன்

# செலவு குறைய, சிபாரிசுப்படி உரமிடுங்கள்.









**நெல்லுக்கு சிபாரிசுப்படி உரமிடுவது மிகவும் லாபகரமானது.**

எந்த ஒரு பயிருக்கும் சிபாரிசுப்படி உரமிட்டால் ஒரு குவின்டாலுக்கான உற்பத்தி செலவு குறையும். சம்பா நெல்லைப் பொறுத்தவரை, இதைக் கீழே தெளிவாகக் காணலாம்.

| | உரம் இடாவிட்டால் | சிபாரிசுப்படி உரமிட்டால் |
|---|---|---|
| உயர்விளைச்சல் நெல் சாகுபடி செலவு (ஏக்கருக்கு) | ரூ. 970 | ரூ. 1388 |
| விளைச்சல் (ஏக்கருக்கு) | 9 குவி. | 24 குவி. |
| எனவே ஒரு குவின்டால் உற்பத்திக்கு ஆகும் செலவு | ரூ. 108 | ரூ. 58 |

பார்த்தீர்களா! சிபாரிசுப்படி உரமிட்டால் உற்பத்தி செலவு கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்து விடுகிறது. லாபமும் மிக அதிகமாகிறது.

சம்பா நெல்லுக்கு ஏற்ற உரம் விஜய் 17-17-17. ஏக்கருக்கு 120 கிலோ விஜய் 17-17-17 உரத்தை அடியுரமாகவும் 45 கிலோ விஜய் யூரியாவை மேலுரமாகவும் இடவேண்டும். 5 கிலோ யூரியாவுக்கு 1 கிலோ வேப்பம் புண்ணுக்கு என்றவிகிதத்தில் கலந்து இட்டால் உரத்தின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

மேலும் நெல் பயிருக்கான சாகுபடி முறைகளை விவரிக்கும் புத்தகத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வட்டார அலுவலகம்
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001


VIJAY
MADRAS FERTILIZERS



சமச்சீர் உரமிட
# விஜய்

| விஜய் 17-17-17 உரத்தின் விவரக் குறிப்புகள் (சதவிகிதத்தில்) | |
|---|---|
| தழைச் சத்து | 17 |
| மணிச் சத்து | 17 |
| சாம்பல் சத்து | 17 |
| நிரப்பி (குறுமணல் அல்லது டாலமைட்) | 12.5 |

HTM-MFL-2832



# ஒகேனக்கல் உயிரோவியம்!

சலசலவென அருவி கொட்டுகிறது!

கலகலவென மக்கள் நீராடுகின்றனர்!

இந்த ரம்மியமான காட்சியை, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியில் காண முடிகிறது!

ஆடவர், பெண்டிர் குழந்தைகள்-இப்படிக் குதூகலமாய் நீராடுகின்ற இனிய அனுபவம் மறக்க முடியாத நிகழ்ச்சியல்லவா?

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் அழகிய சுற்றுலாத் தலங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்புற்று விளங்குகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் உல்லாசத்தலம், புராணச் சிறப்பும், வரலாற்றுப் பெருமையும் கொண்டதாகும்.

தருமபுரியிலிருந்து 43 கிலோ மீட்டர் தொலைவிலும், பெங்களூரிலிருந்து 130 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது ஒகேனக்கல்.

'ஒகேனக்கல்' என்றால் என்ன?

'புகைப்பாறை' என்பது அதற்குப் பொருள். கன்னடத்தில் 'ஓகே' என்றால் புகை என்பதாகும்.

மிக உயரமான மலையிலிருந்து அருவி வேகமாகப் பாறைகளில் பட்டுத்தெறித்து, பள்ளத்தில் வீழ்கின்றபோது, அதன் நீர்த் திவலைகள் பனிப்படலமாய்க் காட்சியளிக்கும். அவை வெண் புகைபோலத் தோற்றமளிக்கும். அதனால் தான் இதற்கு இப்பெயர் வந்தது.

இயற்கையாக அருவி விழும் இடத்திலும் (சுமார் 100 அடி உயரம் )செயற்கையாக அமைக்கப்பட்ட நீர் வீழ்ச்சியிலும் குளிக்கலாம்.

ஒகேனக்கல், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. இங்கிருந்து 16 கி.மீ. தூரத்தில் தாழ்வான பகுதியில் உள்ளது தான் ஒகேனக்கல். பெண்ணாகரம் கடல் மட்டத்திலிருந்து 1,500 அடி உயரத்தில் உள்ளது.

குளிக்கும் இடத்தை 'ஞான தீர்த்தம்' என்று அழைக்கிறார்கள். காவிரி ஆறு மூலிகைகளைத் தழுவி வருவதால், இப்புனித நீர் சக்தி வாய்ந்தது என்றும், இதில் நீராடினால் பிணிகள் நீங்கும் என்றும் பெரியோர்கள் கூறுகிறார்கள்.

இந்த ஆற்றுக்கு இடைப்பகுதியில் உள்ள அருவிகள் மிக உயரமானவை. அவை அடி பாதாளத்தில் வீழ்கின்ற 'ஓ' என்ற இரைச்சல் காதைச் செவிடாக்கும். இந்தப்பகுதி எழில் வாய்ந்தது. சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்வது. இந்த மையப்பகுதிக்குப் 'பரிசலில்' தான் போய் வர வேண்டும். அதற்கான நிறைய பரிசல்கள் கரைகளில் காத்துக் கொண்டிருக்கின்றன.

ஒகேனக்கல்லில், சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கென, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு இருக்கிறது. இங்கே ஒரு காவல் நிலையமும் உள்ளது. அவ்வப்பொழுது போய்வர பேருந்து வசதியும் உள்ளது.

இவையன்றி, ஊராட்சி ஒன்றியப் பயணிகள் விடுதியும், வனத்துறையின் பயணிகள் விடுதியும் இங்கு உள்ளன. மேலும் தனியார் உணவுவிடுதி, சிறுசிறு கடைகள் ஆகியவையும் இருக்கின்றன. ஒகேனக்கல்லைச் சுற்றி ஊட்ட மலை, கோவிந்தப்பாடி ஆகிய கிராமங்கள் உள்ளன. இங்குள்ள கிராம மக்களின் தொழில் மீன் பிடித்தல், ஆடு மாடுகள் மேய்த்தல்.

மேற்கிலிருந்து காவிரி கிழக்காக வந்து, தெற்கு நோக்கிப் போகிறது. அதனால் இதைத் 'தட்சிணவாகினி' என்று அழைக்கிறார்கள். 'மேக தாது' என்ற பெயரும் இதற்கு உண்டு.

சுற்றுலாப் பயணிகள் நீராடிவிட்டு மட்டும் போகாமல், சற்றுக் காலார நடந்துபோய்க் கண்டு களிக்கவும் இப்பகுதிகளில், வனத்துறையின் சார்பில் நிர்வகிக்கப்படும் 'குட்டி' உயிர்க்காட்சிச் சாலையும், முதலைப்பண்ணையும் உள்ளன.

இங்கே மிகப் பழமையான தேசநாதீஸ்வரர் கோயில் ஒன்றும் உள்ளது. இது அதியமான் காலத்தது என்று கூறப்படுகிறது. கோயிலில் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இக்கோயில், மைசூர் மன்னர்களால் பரிபாலிக்கப்பட்டது என்றும், 1915-ஆம் ஆண்டு மே மாதம் 10ந் தேதி கும்பாபிஷேகம் நடந்தது என்றும் ஒரு கல்வெட்டு கூறுகின்றது.

தென்னகச் சுற்றுலாத் தலங்களில் தொன்மைமிக்கதான ஒகேனக்கல் உல்லாசத்தலம், உள்ளம் கவர் உயிரோவியம் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

—பி. வி. கிரி

# வள்ளுவர் குறளுக்கு பாரதி படைத்த உரை

—டாக்டர் கு. மோகனராசு

இருபது நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மண்ணிலும், முந்நூறு ஆண்டுகளாக உலக அரங்கிலும் போற்றுதலுக்கு உரிய முதன்மைக் கவிஞராக-முழுமைக் கவிஞராக-தலைமைக் கவிஞராக—தாய்மைக் கவிஞராக விளங்கி வருபவர் வள்ளுவப் பெருந்தகை, இருபதாம் நூற்றாண்டின் ஏற்றமிகு கவிஞராக—எழுச்சிக் கவிஞராகத் தமிழ் மண்ணிலும் உலக அரங்கிலும் போற்றப்படும் சிறப்பிற்குரியவர் கவியரசர் பாரதியார்.

## பாரதி கண்ட வள்ளுவர்

எழுச்சிக் கவிஞர் பாரதியார் வள்ளுவரிடத்தும் குறளிடத்தும் கொண்ட பெருமதிப்பும் பேரீடுபாடும் அளவிடற்கரியன.

அவர்தம் கவிதைகளில்,

தெய்வ வள்ளுவன்
(சுயசரிதை)

என்றும்,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு
(செந்தமிழ் நாடு)

என்றும், வள்ளுவரை வானளாவப் புகழ்ந்துரைக்கின்றார்.

திருக்குறளுறுதியும் தெளிவும்பொருளின் ஆழமும் விரிவும் அழகும் கருதியும், ....................முன்பு நான் தமிழ்ச் சாதியை 'அமரத் தன்மை வாய்ந்தது' என்று உறுதி கொண்டிருந்தேன்.
(தமிழ்ச்சாதி)

என்றும், 'வான்மறை' என்றும் திருக்குறளைப் புகழ்ந்துரைக்கின்றார்.

## பாரதியின் உரைநடை

பாரதியாருக்குத் திருக்குறளில் உள்ள உண்மையான ஈடுபாட்டை உண்மையாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் கவிதைகளைப் போலவே—ஒரு வகையில் அவற்றினும் மேலாக — உரைநடைகள் பெரிதும் துணை நிற்பதை, அவ்வுரைநடைகளை ஆராய்வார் தெளிதல் கூடும்.

உரைநடைகளில் வள்ளுவரை உலகப் பெருங்கவிஞராகப் பாராட்டி அவருக்கு விழா எடுக்க வேண்டும் என்றும், சிலை வைக்க வேண்டும் என்றும், தம் உள்ள வேட்கையை வெளிப்படுத்தும் பாரதியார், இருபத்து மூன்று (23) முழுக் குறள்களை இருபத்தேழு (27) இடங்களில் தக்கவாறு பயன்படுத்தித் தம் கருத்துகளுக்கு அணி செய்கின்றார். அவற்றுள் ஒன்பது (9) குறள்களுக்கு உரையும் எழுதியுள்ளார்.

## பாரதியாரின் குறள் உரைகள்

பாரதியார் உரை வரைந்துள்ள ஒன்பது குறள்களும் பெரிதும் உரை வேறுபாடுகள் அற்ற—உரை முரண்பாடுகள் அற்ற குறள்களாகவே அமைந்துள்ளன.. ஆகவே, பாரதியார் எழுதிய உரையில் காணப்படும் 'உரை வேறுபாடுகள்' என்று குறிப்பிடத்தக்கதாக எதனையும் கொள்ள முடியாது. ஆனால், அதே நேரத்தில் கீழ்வரும் பண்புகள் பாரதியார் வரைந்துள்ள உரைகளுள் காணப்படுகின்றன.

## நடைமுறைக்கு ஏற்ற உரை விளக்கம்

சமுதாய நடைமுறைகளை மதிப்பீடு செய்வதே பாரதியாரின் அடிப்படை நோக்கமாக இருந்த காரணத்தினால், பாரதியார் குறளுக்கு எழுதிய உரைகள் அவர் வாழ்ந்த கால நடைமுறையைத் தழுவி அமைந்திருப்பதைத் தெளிவாகக் காண முடிகின்றது. சான்றாகத் திருக்குறளில் 'நாடு' என்ற அதிகாரத்தில் வரும்

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா(து) இயல்வது நாடு
(குறள். 734)

என்னும் குறளுக்கு,

> அதிகமான பசியும், அதாவது பஞ்சங்களும், நீங்காத நோய்களும் அதாவது பிளேக், காலரா முதலியவற்றைப்போல் விடாத இயல்பு கொண்ட தொத்து வியாதிகளும் அழிவு செய்யும் விரோதிகளும் இல்லாமல் விளங்கும் இயல்புடையதே 'ராஜ்யம்' அல்லது 'நாடு' என்று சொல்லத் தக்கதாகும்.
>
> (ராஜ்யம் அல்லது நாடு, பாரதி தரிசனம் நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், 1977, ப. 43)

என உரை வரைந்திருப்பதைக் கொள்ளலாம்.

## பொதுமைப்படுத்தல்

சாதி, மதம், மொழி, இனம், நாடு, காலம் ஆகியவை கடந்த உலகப் பெரும் பொதுமை நூலாக—புதுமை நூலாக விளங்குவது திருக்குறள். இந்நூலில் காணும் மற்றொரு புதுமை என்னவென்றால், ஓர் அதிகாரத்துக்குள் சிறைப்பட்டிருக்கும் குறள்

களை அவ்வதிகாரச் சிறையில் இருந்து மீட்போம் என்றால் அது எல்லார்க்கும் உரிய பொதுவான குறளாக அமைவதே ஆகும். இப்புதுமைப் பண்பு, திருக்குறளில் உள்ள பெரும்பாலான குறளுக்கும் பொருந்தும்.

அதிகார அமைப்பு என்னும் சிறையில் இருந்து மீட்டு, குறளுக்குப் பொதுமையான உரைகாணும் திறத்தைப் பாரதியாரிடம் தெளிவாகக் காணுகிறோம். இதற்குச் சான்றாகப் பாரதியார் எழுதிய, 'விடுதலை' என்னும் கட்டுரையில் பயன்படுத்தியுள்ள குறளையும், பொருளையும் அவை பயன்படுத்தப் பட்டுள்ள சூழலையும் கொள்ளலாம். சமுதாயத்தில் அறம் செய்ய வேண்டியதன் இன்றியமையாமையினையும் அந்த அறம் செய்வதற்குப் பொருள் தேவை என்பதனையும் ஒவ்வொரு மனிதனும் அந்தப் பொருளை நல்ல நெறிகளில் ஈட்ட வேண்டும் என்பதனையும் திருக்குறள் வழிநின்று வலியுறுத்தும் பாரதியார், அதனை அடுத்து,

> தீய காரியம் செய்து, கெட்ட தொழில் செய்து சேர்த்த செல்வம் நிற்காது. செல்வம் சேர்ந்த பிறகு அதன் உரத்தால் பிறருக்குத் தீங்கு செய்வோரும் விரைவிலே கெடுவார்.
>
> (தமிழருக்கு-ஸ்ரீ புவனேசுவரி பதிப்பகம், 1978. ப. 46)

எனக் கூறி அதற்கு உறுதுணையாக

அல்லற்பட் டாற்றா(து) அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

என்னும் குறளைக் கூறி அதற்கு,

> துன்பப்பட்டார் அது பொறுக்காமல் அழும் கண்ணீரானது, அந்தத் துன்ப முண்டாக்கியவனுடைய ஐசுவரியத்தை அறுத்தெரியும் ஆயுதமாகும்.

எனப் பொருள் உரைக்கின்றார். இங்குக் 'கொடுங்கோன்மை' என்னும் அதிகாரத்தில் வரும் மேற்சுட்டிய குறளை அவ்வதிகாரச் சிறையில் இருந்து மீட்டு, எல்லார்க்கும் பொருந்தும் பொதுமைப் பொருள் தருவதைத் தெளிவாக அறிய முடிகின்றது.





## உரையில் வேகம்-அழுத்தம் உடைமை

சில குறள்களுக்குக் குறளில் இல்லாத வேகம்—அழுத்தம் பாரதி தருகின்ற உரைகள் சிலவற்றில் காணப்படுவதையும் தெளிவாக உணர முடிகின்றது.

சான்றாக, மேற்சுட்டிய குறளில் வரும் 'தேய்க்கும்' என்பதற்கு 'குறைக்கும்' அல்லது 'மெல்ல மெல்ல அழிக்கும்' என்றே பலரும் பொருள் கொள்ள, பாரதியார் 'அறுத்தெரியும்' எனப் பொருள் கொண்டிருப்பது அவருடைய உணர்ச்சி வேகத்தையே காட்டுகின்றது. அதே போன்று,

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது (குறள். 99)

என்னும் குறளுக்கு,

> இனிய சொற்கள் சொல்வதனின்றும் நன்மைகள் விளைவது கண்டும் மானுடர் ஒருவருக்கு ஒருவர் கொடுஞ் சொற்கள் வழங்குவது மடமை.
>
> (தமிழருக்கு—மு. நூ. ப. 84)

என உரை எழுதும்பொழுது, 'மடமை' எனக் கூடுதல் செய்திருப்பது அவருடைய உரையில் காணும் உணர்ச்சி வேகத்திற்கு அல்லது உரையில் காணும் பொருள் அழுத்தத்திற்குச் சான்றாக அமைகின்றது.

## வைப்பு முறை மாற்றம்

குறளுக்குப் பொழிப்புரை தர வேண்டும் என்ற எண்ணம் பாரதியாரிடம் இருந்த அடிப்படை எண்ணம் அல்ல. தம் கட்டுரையை அல்லது தலையங்கத்தைப் படிக்கின்றவர்கள் இடையிடையே பயன்படுத்தும் குறளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலேயே - அதன் கருத்து இன்னதென அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலேயே பெரும்பான்மையும் உரை எழுதியுள்ளார். அதனால் குறள் கூறும் கருத்து வைப்புக்கும் பாரதியார் கூறும் உரையில் வரும் கருத்து வைப்பிற்கும் வேறுபாடு காணப்படுவதையும் அறிய முடிகின்றது. சான்றாக,

விலங்கொடு மக்க ளனையர்— இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர் (குறள் 410)

## மணத்தோடு பணத்தோடு மல்லிகைப் பூ

தமிழ்நாட்டில் மல்லிகைச் செடிகள் வளர்ப்பு மிகவும் பிரபலமானதாகும். கிட்டத்தட்ட 8,000 ஹெக்டேர் நிலத்தில் மல்லிகைச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. பழைய காலத்தில், பெரும்பாலும் அரசுத் தோட்டங்களிலும், கோயில்களுக்கு அருகிலும் பொது மைதானங்களிலுமே மல்லிகைச் செடிகள் வளர்க்கப்பட்டன. இன்றோ அது ஒரு துணைத் தொழிலாக வளர்கிறது.

தமிழ்நாட்டில் பூமாலைகளுக்கு பிச்சி, குண்டுமல்லி, முல்லை வகைகள் அதிக அளவில் உபயோகப்படுத்தப்படுகின்றன. பிச்சியை, சாதி மல்லிகை எனவும் கூறுவதுண்டு. சாதிமல்லிகையிலிருந்து விலை உயர்ந்த தைலம் வடிக்கப்படுவதால் இப்பூவிற்கு வணிக முக்கியத்துவம் உண்டு. வாசனைப் பொருட்கள், சோப்பு போன்றவற்றைத் தயாரிப்பதற்கு இத்தைலம் மிகவும் தேவைப்படுகிறது. இதனால். இதன் தேவை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

மல்லிகைச்செடி வளர்க்க அதிக ஆள்பலம் தேவை என்பதால், கிராமப்புற வேலைவாய்ப்பிற்கு இதில் அதிக வாய்ப்பு உள்ளது. ஒரு ஏக்கர் நிலத்திலுள்ள மல்லிகைச் செடியிலிருந்து பூவை எடுக்க, சராசரி 30 முதல் 40 பேர் தேவைப்படுகிறார்கள். 60 ஏக்கர் நிலத்தில் உள்ள மல்லிகைச் செடிகளிலிருந்து அன்றாடம் சுமார் 1000 கிலோ மல்லிகை எடுக்கலாம்.

மல்லிகைப்பூத் தைலம் தயாரிக்கும் ஆலைக்கு இது போதுமானதாகும்.

அதிக அளவில் மல்லிகைச் செடியை வளர்க்க விவசாயிகள் விருப்பம் காட்டுவதால், தோட்டப் பயிர்த்துறை, மலர்ச்செடி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இடு பொருள்களுக்கு 50 விழுக்காடு மானியத்தையும், இலவசத் தொழில் நுட்ப வழிமுறைகளையும் வழங்குகிறது.

ஒரு ஏக்கர் நிலத்தில் மல்லிகைச் செடி வளர்க்க 10,000 ரூபாய் செலவாகும். இச்செடிகளிலிருந்து 4,000 கிலோ மல்லிகைப்பூ கிடைக்கும். இதற்கு கிலோ 5 ரூபாய் வீதம் 20,000 ரூபாய் கிடைக்கும். ஆகவே ஒரு ஏக்கரில் மல்லிகைச் செடி பயிரிட்டால் நிகர இலாபம் 8,000 ரூபாய்க்கு மேல் கிடைக்கிறது. இதனால், தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் மேலும் அதிக நிலத்தில் மல்லிகைச் செடியை வளர்க்கத் தொடங்கியுள்ளனர்-

---

> மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் எத்தகைய பேதமிருக்கிறது. அத்தனை பேதம் கற்றார்க்கும் கல்லாதார்க்கும் இடையே உளது.
>
> (தமிழருக்கு— மு. நூ., ப. 136)

என உரை கூறுகின்றார். இங்குக் குறளில் 'விலங்கு, மனிதர்' என முறை வைப்பு இருக்க பாரதியார் தம் உரையில், 'மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும்' என முறை வைப்பை மாற்றி அமைத்திருப்பது நோக்கத்தக்கதாகும். இதே குறளுக்குப் பிறிது ஓர் இடத்தில் குறள் கூறும் முறைவைப்பை மாற்றாமல்,

> படியாதவனுக்கும் படித்தவனுக்கும் தாரதம்யம் எத்தனையென்றால் மிருகத்துக்கும் மனிதனுக்கும் உள்ளது அத்தனை.
>
> (ஊருக்கு நல்லது- புவனேசுவரி பதிப்பகம், 1979, ப. 14)

எனக் கூறியிருப்பதும் கருதத்தக்கது.

### புதிய குறள் உருவாக்கம்

திருக்குறளில் பெருமதிப்பும் பேரீடுபாடும் கொண்ட பெருங்கவிஞர் பாரதியார் அவர்கள் குறளை மேற்கோளாக எடுத்துக்காட்டி, அதற்கு உரை வரைந்துள்ளதோடு ஒரு புதுமையினையும் செய்துள்ளார்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய் (குறள் 69)

என்னும் குறளுக்குப் பாரதியார்,

> புத்திரப் பேறு உண்டான காலத்திலே மாதாவுக்குண்டான மகிழ்ச்சியைக் காட்டிலும், அப்புத்திரன் சான்றோனென்ற சொல்லைக் கேட்கும்போது அதிக மகிழ்ச்சி விளையும்
>
> (சக்ரவர்த்தினி கட்டுரைகள், வானவில் பிரசுரம் 1979, ப. 41)


என உரை வகுக்கின்றார். இவ்வாறு உரை வகுத்து, இக்குறளின் பொருளில் இருந்து பெறத்தக்க எதிர்மறைப் பொருளை,

> மகன் சான்றோன் அல்லன் என்ற சொல் செவிப் படும்பொழுது அத்தாய் மனம் அவன் இறக்கும்பொழுது உண்டாகும் துயரத்திலும் அதிகத் துயரம் அடையும்.

எனக் கூறி, அக்கருத்தை அப்படியே குறள் வடிவமாகத் தந்தும் உள்ளார். பாரதி தந்துள்ள அப்புதிய குறள் வருமாறு,

> மாயும் பொழுதிற் பெரிதழுங்குந் தன்மகனைக்
> கீழோன் எனக் கேட்ட தாய்

இப்புதுமை பாரதியாரின் சிந்தனை நுட்பத்திற்கும், யாப்பறி திறத்திற்கும் எடுத்துக் காட்டாக அமைவதோடு பாரதியார் குறள் மீது கொண்ட மதிப்பிற்கும் ஈடுபாட்டிற்கும் அரண் செய்வதாக - பேரரணாக அமைந்துள்ளது; அன்றியும் குறளுக்கு உரை கண்ட பிற உரையாசிரியர்களிடம் காணாத தனிச் சிறப்புடையவராகப் பாரதியாரைப் பிரித்தும் காட்டுகிறது.



# பலருக்கும் வேலைதரும் பனைத்தொழில்





பி. வி, கிரி

தமிழ்நாட்டில் எத்தனைப் பனை மரங்கள் உள்ளன என்று நமக்குத் தெரியுமா?

5 கோடி பனை மரங்கள்!

இவற்றுள் 2 கோடி பனை மரங்களே நமக்குப் பயன்படுகின்றன. பனையின் விளைவால் பயன்கள் பலப் பல. பல்லாயிரக் கணக்கானோர் அதனால் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். குறிப்பாக, இது கிராம மக்களுக்குக் கைகொடுத்து உதவி வருகிறது.

இந்தத் தகவல்களையெல்லாம் நாம் தெரிந்து கொள்வது, 'கிராமங்களில் பனைத் தொழில் மூலம் சுயவேலை வாய்ப்பை உருவாக்கும் திட்ட விழா'வில்.

நவம்பர் திங்கள் 27ஆம் நாள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் சார்பில், பனைத் தொழில் மூலம் சுயவேலை வாய்ப்பை உருவாக்கும் திட்ட விழா, மாதவரம் பனைப் பண்ணையில் மிகச் சிறப்பாக நடந்தது.

தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் இந்தச் சீர்மிகு விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

பனையின் பெருமையைப் பழம் பாடல்கள் பறைசாற்றும். அதனை நேரில் காணும் வாய்ப்பு நமக்குக் கிட்டியது. விழா மேடைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த பனைப்பொருட்கள் நிரம்பிய கண்காட்சி ஒன்று, நம்மையெல்லாம் பிரமிக்க வைத்தது. வாழை மரத்தைப் போல், பனைமரத்தின் எல்லாப் பகுதியும் நமக்குப் பயன்படுகிறது.

பகத்தரு என்று அழைக்கிறார்கள் போலும்!

கண்காட்சியில் பனந்தும்பு, பனை ஓலைப் பெட்டிகள், தொப்பிகள், விசிறிகள், பனை மரத்தாலான நாற்காலிகள் இப்படி எத்தனையோ பொருள்கள், ஓங்கி வளர்ந்த பனை மரத்தின் உயர்வைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன!

விழாப் பந்தலில் பெருமளவில் மகளிரே காட்சி தருகின்றனர். அவர்களில் பெரும்பாலோர் பனை மூலம் வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள் என அறிகிறோம்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச். ஜே. ராமச்சந்திரன், இ. ஆ. ப. அவர்கள் இந்த விழாவுக்குத் தலைமை வகித்தார். சிறப்பு அலுவலர் திரு. கூ. சம்பந்தம் அவர்கள் திட்டத்தை அறிமுகம் செய்து பேசினார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு குமரி அனந்தன், திரு ஆனூர் ஜெகதீசன், திரு சி. கணேசன், தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியத் துணைத் தலைவர் பட்டுக்கோட்டை திரு. எஸ். பாப்பையன் ஆகியோர் பனையின் சிறப்பினையும், அதனால் விளையும் பயன்களையும்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.ப. குழந்தைவேலு அவர்கள் பேசுகையில்—

''பனைமரங்கள் மக்களை வாழ்விக்கும் மரங்களாக விளங்குகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 5 கோடி பனைமரங்களில் சுமார் 2 கோடி பனை மரங்களே பயன்படுகின்றவை. இன்னும் 2 கோடி பனை மரங்களைப் பயன்படுகிற வகையில் நாம் செயல்பட வேண்டும். இங்கே அமைக்கப்பட்டிருக்கின்ற பனை ஓலைப் பொருட்காட்சி, செங்கை மாவட்டச் சிறப்புக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. காந்தி, அண்ணா, வினோபாபாவே வழியில் இந்த வாரியம் செயல்பட்டு வருகிறது'' என்றார்.

தமிழ்நாட்டில் உள்ள 5கோடிப் பனை மரங்களில் 2 கோடி மரங்களே பதநீர் இறக்கி வெல்லம் காய்ச்சவும், கற்கண்டு, சீனி தயாரிக்கவும், ஓலை, நார்ப் பொருள்கள், தும்பு தயாரிக்கவும் பயன்படுகின்றன. ஒரு கோடி மரங்கள் தொழிலுக்குப் பயன்படாத வகையில் முதிர்ந்தும், காட்டுப் பகுதிகளில் மனிதன் இலகுவில் சென்று பயன்படுத்த முடியாத நிலையிலும் இருக்கின்றன.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் பொருட்காட்சியைப் பார்வையிடுகிறார்.

மரங்களை எப்படிப் பயன்படுத்துவது, இதன் மூலம் ஏழை எளியவர்களுக்கு எப்படி வேலை வாய்ப்புத் தருவது, அதன் மூலம் உருவாகும் பொருள்களை எப்படி விற்று, கிராமவாசிகளுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பை அளிப்பது என்று இந்த இணையம் தீவிரமாகச் சிந்தித்து வருகிறது.

பனைத் தொழிலில் தற்போது 3.5 இலட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் உற்பத்தி ஆண்டுக்கு ரூ. 19 கோடியாகும். மேலும் 2 கோடி பனை மரங்களைப் பயன்படுத்தும்பொழுது உற்பத்தியும், வேலை வாய்ப்பும் பெருகும் அன்றோ?

2 கோடி பனை மரங்களைப் பயன்படுத்தி வறுமைக் கோட்டின் கீழ் இருக்கும், ஏழை எளியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட வந்த ஓர் உன்னத திட்டம்தான், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

செங்கை மாவட்டத்தைமாதிரி மாவட்டமாகத் தேர்ந்தெடுத்து இத் திட்டத்தினைச் செயல்படுத்திட, பனைத் தொழிலைக் கொண்டு வேலை வாய்ப்பளிக்கக் கடந்த ஆண்டு மாநில இணையம் தீர்மானித்தது. இதன் விளைவாக, மாவட்டம் முழுவதும் 40 பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டன. இதில் பெரும்பாலானவர்கள் பெண்கள். இவர்களுக்கு 6 மாத காலம் பயிற்சி அளித்து பயிற்சியின்போது மாதம் ரூ. 125 உதவித் தொகையும் வழங்கப்பட்டது. இவ்வாறு பயிற்சி முடித்த மகளிருக்குப் பரிசுகளும், சான்றிதழ்களும், விழாவில் வழங்கப் பெற்றன.

செங்கல்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனமானது, இம் மாவட்டத்தில் ஏழை எளிய கிராம மக்களுக்குப் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்க நிதி உதவிசெய்கிறது. அவற்றுள் பனைத்தொழிலும் ஒன்றாகும். இந்த நிறுவனம், தமிழ்நாடு பனை வெல்லக் கூட்டுறவு இணையத்தின் வாயிலாக 1,200 பேருக்குப் பல்வேறு பனைப் பொருள்கள் தயாரிப்பதில் ஆறு மாதக் காலம் பயிற்சி அளித்துள்ளது. இவர்களில் பெரும்பாலோர் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த பெண்களாவர்.

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிலேயே இவ்வளவு பேருக்குப் பயிற்சி அளித்து அவர்களுக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்திருப்பது இதுவே முதல் முறையாகும் என்பதைப் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும்.





# மாணவர் உருவாக்கிய சாலை



புதிய இருபது அம்சத் திட்டத்தின்படி ஏதேனும் ஒரு கிராமத்தை தொழில் நுட்பக் கல்விக் கூடங்கள் ஏற்று அவ்வூர் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைய வேண்டும் என்று திட்டமிடப் பட்டுள்ளது.

வளர்ந்து வரும் ஊரகப்பகுதிகள் திட்டமிட்ட முறையில் வளரவும் அப்பகுதியில் வாழும் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி செய்யும் வகையிலும் 'கிராம ஏற்புகள்' அமைந்து வருகின்றன.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கிராமங்களைத் தத்து எடுத்துக் கொண்டு அவ்வூர் மக்களில், பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்காக பலவகைகளில் உதவி அளிக்கின்றன.

கல்வி நிறுவனங்கள், ஊரகப் பகுதிகளை ஏற்றுக் கொள்ளும் பொழுது அவ்வூர் மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு உரியவைகளைச் செய்து வருகின்றன. அத்துடன் சமுதாய மேம்பாட்டுக்கு உரியவைகளை முன்னிருந்து செய்து வருகின்றன. அப்பகுதியில் தொழில் வளர்ச்சிக்குத் திட்டமிட அடிப்படைத் தேவைகளான வரைபடம் தயாரித்தல் ஊரில் கிடைக்கும் வசதி வாய்ப்புக் கூறுகள் ஆகியவற்றைச் செய்து வருகின்றன.



கிராம மக்களுக்குத் தொழில் நுட்ப அறிவுகளைப் புகட்டுவதுடன், உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிமுறைகளையும் சொல்லித் தருகின்றன. மக்களுக்கு மற்ற வசதிகளையும் செய்து தர உழைப்பையும் நல்குகின்றனர்.

அண்மையில் சென்னை மத்திய பல்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பள்ளிக்கரணை என்ற கிராமத்தை ஏற்றுக்கொண்டு அவ்வூர் வளர்ச்சிக்கு உரிய பணிகளைச் செய்து வருகின்றனர்.

மத்திய பல் தொழில்நுட்பக் கல்லூரி தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் 60 பேர்கள். பள்ளிக்கரணை மக்களுக்குப் பயன்படும் வகையில் புதிய சாலையை அமைத்தனர்.

தேசிய மாணவர் படையைச் சேர்ந்த பி. செல்வராஜ், கே. வேலாயுதம், எஸ். தனஞ்செயன், கே. ரவிகுமார், கே. வாசுதேவன் கே. வி. பி. ராவ் போன்ற முதுநிலை தேசிய மாணவர் படையினர் முன்னணியில் இருந்து இச் சாலையை அமைத்தனர்.

மத்திய பல்தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் திரு ஞானசம்பந்தம், ஆசிரியர் ஆர். சுப்ரமணியம், தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மேஜர் ஜெயராமன் போன்றவர்கள் உடனிருந்து மாணவர்களின் முயற்சிகளை ஊக்குவித்தனர்.

மாணவர்கள் சாலை போடுவது கண்டு பள்ளிக்கரணை ஊர் மக்களும் சமூகநல ஊழியர் தங்கராஜுவுடன் சேர்ந்து வந்து சாலை போடுவதில் உதவினர்.

சென்னை மாநகரத்தை அடுத்துள்ள ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊர் பள்ளிக்கரணை என்றாலும் அவ்வூரின் வளர்ச்சிக்கு அவசியமான சின்னஞ்சிறிய பணிகள் ஏராளமாக உள்ளன.

அந்தப் பணிகள் இளைய தலைமுறையினரான மாணவர்கள் செய்து வருகின்றனர். புதிய வாழ்வும் வளர்ச்சியும் ஊரகப் பகுதிகளில் உருவாக உதவி வரும் மாணவர்களைப் பாராட்டுவதும், அவர்களுடைய ஆர்வத்தைப் போற்றி வளர்ப்பதும் நமது கடமை ஆகும்.

—மாமுலன்



# பொன்னேரி கண்ட பல் விழா

ஆசிய ஜோதி, பண்டிதநேரு அவர்களின் பிறந்த நாளாகிய நவம்பர் 14ஆம் நாள், குழந்தைகள் திருநாளாக நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு இத்திருநாளை தமிழக அரசு சிறப்போடு கொண்டாடியதோடு, கிராமக் குழந்தைகளுக்கு இலவசப் பற்பொடி வழங்கும் திட்டத்தைத் துவக்கி, வரலாற்றுச் சிறப்பினைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் துவக்கவிழா செங்கல்பட்டு மாவட்டத்தில் பொன்னேரி தாலுகா வேம்பாக்கத்தில் 14-11-'82-ஆம் நாள் நடைபெற்றது. விழாவிலே பல் மருத்துவத் துறை சிறப்பாகப் பங்கு பெற்றது.

வாயிலும் பற்களிலும் ஏற்படுகின்ற நோய்கள், பல்வலி, வாய் துர்நாற்றம், இரணங்கள், ஈறுகளில் இரத்தம் வருதல், வாய் திறவாமை போன்ற தொல்லைகளைக் கொடுப்பதோடு, நோய் உடலின் பல பாகங்களுக்குப் பரவி உடல் உறுப்புகளையும் பாதிக்கின்றன. பல்நோய்களைத் தடுக்கவும், குணப்படுத்தவும் பல நவீன வசதிகள் பல் மருத்துவத்தில் இருந்தும் அவற்றின் பயனை முழுமையாகப் பெற முடியாமல் தவிப்பவர்கள் கிராம மக்கள். சென்னை பல் மருத்துவக் கல்லூரியின் சமுதாய பல்நலப் பாதுகாப்புத் துறையின் கீழ் மருத்துவர்கள், கிராமங்களில் இலவச பல் மருத்துவ முகாம்கள் நடத்தி, கிராம மக்களுக்குக் கூடுமான வரையில் பல் நலம் காப்பதில் உதவி புரிகின்றனர். கிராமங்களில் நடைபெறும் பல் மருத்துவ முகாம்களை அமைச்சர் பெருமக்களும், மற்றும் தலைவர்களும் கண்டு கிராம மக்களின் வாய், பல் சம்பந்தப்பட்ட நோய்களைக் கண்டறிந்துள்ளனர். திருச்சி மாவட்டத்தில் ஆமூரில் நடைபெற்ற பல் மருத்துவ முகாமில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு, கிராம மக்

டாக்டர் **பி. பி. ராஜன்**
**முதல்வர்**
**சென்னை பல் மருத்துவக் கல்லூரி**

களில் குறிப்பாக குழந்தைகளின் பல்வேறு பல்நோய்களைக் கண்டறிந்தார்கள்.

பற்களில் ஏற்படும் நோய்களைத் தடுக்கப் பல்வேறு முறைகளைக் கையாண்டாலும் நாள் தோறும் பல் துலக்கும் பழக்கம் மிக முக்கியமானது. இனவேறுபாடின்றி, சமய வேறுபாடின்றி, எந்நாட்டவரும் கடைப்பிடித்து வரும் அன்றாட சுகாதாரப் பழக்கங்களில் ஒன்றுதான் பல்துலக்குதல். நகரத்திலுள்ளோர் நவீன வசதிகளுடன் இப்பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தாலும் நமது கிராமங்களில் உள்ள குழந்தைகள் இந்தப் பழக்கத்தைச் சரிவரக் கடைப்பிடிப்பதில்லை. சரிவரப் பல் துலக்காத காரணத்தால், குழந்தைகள் ஈறுநோய்களாலும், பல்நோய்களாலும் பாதிக்கப்பட்டு வேதனைப்படுவதோடு உடல்நலமும் பாழ்பட்டு வாடுகிறார்கள்.


பற்களைத் துலக்கும் இந்தப் பழக்கத்தை பாலப்பருவத்தில் குழந்தைகளுக்குப் புகுத்த நல்லதொரு திட்டமாய் இந்த இலவசப் பற்பொடி வழங்கும் திட்டத்தை, மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தீட்டியுள்ளார்கள்.

தமிழக முதலமைச்சரின் சத்துணவுத்திட்டத்தில் பங்குபெறும் குழந்தைகளுக்கு இலவசப் பற்பொடி வழங்கும் திட்டத்தின் துவக்க விழாவே பொன்னேரி கண்ட புதுவிழாவாக அமைந்தது.

அந்த விழாவில்...

பல்நலக் கண்காட்சி - காண வந்த மக்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியாக, அறிவுக்கு விருந்தாக அமைந்திருந்தது.

இந்தக் கண்காட்சியில் கிராமக் குழந்தைகள் சிலர் பற்களைத் துலக்காததால், அவர்களின் பற்களில் அழுக்குகள் படிந்து பற்படலம் உண்டாகி, பற்காரை உருவாகி, ஈறுகளைத் தாக்கி, இரத்தம் வரும் காட்சிகள் படம் பிடித்துக் காட்டப்பட்டன. பல்துலக்கும் அவசியம் குழந்தைகளுக்குப் பக்குவமாய்ப் போதிக்கப்பட்டது.




ஆற்றுமணல், செங்கல், அடுப்புக்கரி, சாம்பல் இவைகளைப் பல்துலக்க உபயோகிப்பதால் ஏற்படும் தீங்குகள் வண்ண ஓவியங்களாக வரைந்து காண்பிக்கப்பெற்று, காணவந்த மக்களுக்கு விளக்கப்பட்டன. இவைகளை உபயோகிப்பதால் பற்கள் சிறுகச் சிறுகத் தேய்ந்து கூராவதும் இந்தக் கூரான பற்கள் சதையினைக் குத்திக் குத்தி அங்கு ரணம் உண்டாக்குவதும் அந்த ரணம் ஆறாமல் இருப்பதும், ஆறாத புண் புற்றாக மாறுவதும் படங்களின் மூலம் விளக்கப்பட்டன.

உண்ணும் உணவில் ஊட்டச்சத்து குறைவதால் ஏற்படும் வாய் நோய்களை வண்ணப்படங்கள் மூலம் விளக்கி, அவற்றைத் தவிர்க்க ஊட்டச்சத்து நிரம்பிய- கிராமங்களில் விளையும் கனிகளையும் காய்களையும் சுட்டிக் காட்டி, அவைகளை உண்டு, அந்நோய்களைத் தவிர்க்க வேண்டிய உண்மை மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது.

பற்களிலும் ஈறுகளிலும் நோய்களால் உண்டாகும் சீழ் மற்றும் நச்சுப் பொருட்கள் இரத்தத்தில் கலந்து உடலின் பல பாகங்களுக்குச் சென்று நோய்கள் உண்டாக்குவதை ஒரு சித்திரத்தில் மூலம் விளக்கி, பழுதான உடல் உறுப்புகள் சிலவற்றை மக்களின் பார்வைக்கு வைத்து உடல் நலமாக இருக்கப் பற்கள் பாழ்பட்டு இருக்கக்கூடாது என்ற கருத்து மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

உடைந்த பற்களாலும், உருமாறிய பற்களாலும் பொலிவிழந்த குழந்தைகளின் படங்களைக் காட்டி, அப்பற்களைப் பல் மருத்துவத்தால் செப்பனிட்டுச் சீர்செய்து சிறந்த பொலிவைக் கொடுக்கமுடியும் என்பது சான்றுகளுடன் விளக்கப்பட்டது.

நிலைமாறிய பற்களை வரிசைப்படுத்தி, பொலிவு கொடுக்கக் கூடிய பல் சீரமைப்பு முறைகளும் நிறம் மாறிய பற்களுக்கு நிரந்தர நிவாரணம் கொடுக்கக் கூடிய பல் மருத்துவ முறைகளும், காணவந்த மக்களுக்குத் தெளிவாக்கப்பட்டன.

குழந்தைகளிடம் பரவலாக இருக்கக்கூடிய சொத்தைப் பல் எப்படி உருவாகிறது; எப்படிப் பற்களிடையே பரவுகிறது என்னென்ன தொல்லைகளைக் கொடுக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தப் பல படங்களைக் காட்டி பற்சொத்தையைத் தடுக்கும் முறைகளும் குழந்தைகளுக்குப் போதிக்கப்பட்டன. கடைத் தெருவில் விற்கும் மிட்டாயும் ஐஸ்ஃபுருட்டும் குழந்தைகள் விரும்பும் நொறுக்குத் தீனியும் பற்களில் சொத்தை வருவதற்குத் காரணங்கள் என்பதை வலியுறுத்தி அவற்றை தவிர்க்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பனங்கொட்டையைக் கடித்தாலும், கண்டங்கத்திரிக்காயை சுவைத்தாலும் தான் பற்சொத்தை வருகிறது என்று எண்ணிவந்த கிராமமக்களுக்குப் பற்சொத்தையின் உண்மைகளை எடுத்துச் சொல்லப்பட்டன.





வளரும் சில குழந்தைகளிடம் காணப்படும் கைசூப்புதல், விரலைக்கடித்தல், உதட்டைக் கடித்தல், வாய் மூலம் சுவாசித்தல் ஆகிய பழக்கங்களால் மாறுபட்டு வளரும் தாடை அமைப்பையும் நிலைமாறி வளரும் பல்வரிசையும், அழகான சித்திரங்கள்மூலம் தெளிவுபடுத்தி அவற்றைச் சரிப்படுத்தக் கூடிய பல் சீரமைப்பு முறைகளை, விளக்கி அருங்கருத்துகள் கொண்ட அட்டைகள் பல ஆங்காங்கு தொங்கவிடப்பட்டிருந்தன. அதுமட்டுமல்லாமல் இந்தப் பழக்கங்களைப் பால பருவத்திலேயே தவிர்க்க வேண்டுமென்று பெற்றோர்களிடம் வற்புறுத்தப்பட்டது.

நகைச்சுவைக்காக மட்டுமல்லாமல், நல்ல பல கருத்துகளை நாட்டுமக்களுக்கு எடுத்துச் சொல்லும் பொருட்டு. ''பேசும் எலும்புக்கூடு'' ஒன்று பொருத்தப்பட்டு எலும்புக் கூண்டின் இசை விழாவும் சொல்விழாவும் இந்தக் கண்காட்சியில் நடைபெற்றன. இதன் மூலம் அறிவியல் கருத்துக்கள் பல மக்களுக்கு அருமையாக எடுத்துச் சொல்லப்பட்டன.

**இலவச பல் மருத்துவ சிகிச்சை முகாம்:**

சென்னை பல் மருத்துவக் கல்லூரியின் சமுதாயப் பல் நல பாதுகாப்புத்துறையின் கீழ், 50 மருத்துவர்கள் கொண்ட ஒரு குழு இலவச பல்மருத்துவ முகாம் நடத்தினர். பற்களைப் பரிசோதனை செய்து பார்த்துக் கொள்வதற்கு வாய்ப்பில்லாத கிராமக் குழந்தைகள் பலர் இந்தப் பல் மருத்துவமுகாமில் பங்கு பெற்றனர்.

மருத்துவ முகாமிற்கு வந்த குழந்தைகள் அனைவரையும்,

''நோய்நாடி நோய்முதல்
நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'',

என்னும் வான் புகழ் கொண்ட வள்ளுவனின் பொய்யா மொழிக்கிணங்க, முறைப்படி பரிசோதனை செய்து வாயிலும் பற்களிலும் தென்படுகின்ற நோய்களைக் கண்டறிந்து, அந்நோய்களைக் குணப்படுத்தும் முறைகள் குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் எடுத்துச் சொல்லப்பட்டன. நோயாளிகளின் உள்ளங்களில் உள்ள எண்ணற்ற ஐயங்களுக்கு, அறிவியல் ரீதியில் அவர்கள் புரிந்து கொள்ளும் அளவுக்கு விளக்கங்கள் கொடுக்கப்பட்டன.

பழக்க வழக்கங்களால் ஏற்படும் மாற்றங்களை அவர்களுக்குச் சுட்டிக்காட்டி அந்தப் பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.

பற்சொத்தையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்பலருக்குப் பழுதடைந்த பற்கள் மரப்பு மருந்து கொடுத்துப் பக்குவமாய் எடுத்தெறியப்பட்டன. பல் எடுத்தால் மூளை கெட்டுவிடும், கண் கெட்டுவிடும் என்றெல்லாம் பயந்து கொண்டிருந்த கிராமமக்கள், வலியில்லாமல் பல் எடுப்பது, அறுவைச் சிகிச்சையில் ஒரு கலையாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். பற்சொத்தையால் வேதனைப்பட்டு, சீழ்கட்டிகளோடு வந்த குழந்தைகள் சிலருக்கு, பல் அகற்றப்பட்டதோடு சீழ் கட்டிகளுக்கும் மருந்திட்டுப் பாதுகாக்கப்பட்டன.

ஈறுகளில் ரத்தம் வருகிறது என்று முகாமிற்கு வந்த குழந்தைகளுக்கு, அவர்களின் பற்களில் பச்சை நிறமாகவும் மஞ்சள் நிறமாகவும் படிந்துள்ள காரைகளைச் சுட்டிக்காட்டி, அந்தக் காரைகள் தான் ஈறுகளைத்தாக்கி இரத்தப் பெருக்கை வரவழைக்கிறது என்று அவர்களுக்கு எடுத்துக் காட்டப்பட்டது. மேலும் மருத்துவர்கள் அவர்களுக்கு வலியில்லாமல் இதமாக அந்தக் காரைகளை அகற்றி ஈறுகளைச் சுத்தம் செய்து, பற்களைப் பளப்பளப்பாக்கி, மருந்திட்டனர். பற்களில் படியும் காரைதான் பற்களை, உறுதியாகத் தாடைகளில் பொருத்தியிருக்கிறது என்று எண்ணியிருந்த கிராமமக்கள், அந்தக் காரைகளினால் ஏற்படும் தொல்லைகளை உணர்ந்து ஆச்சரியப்பட்டார்கள். பால் பற்கள் பழுதடைந்து, கூராகி, சதையில் குத்திக் கொண்டிருந்த குழந்தைகளுக்கு, அந்தப் பற்களின் கூரான பகுதியைத் தேய்த்து அது குத்தாமல் இருக்க வழி செய்யப்பட்டது.

ஆரம்பகாலச் சொத்தையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு முகாமிலேயே, இயந்திரங்களின் உதவியால் அந்தச் சொத்தையை அகற்றி, அகற்றப்பட்ட பகுதியில் வெள்ளி உலோக அடைப்புகள் செய்து, அப்பற்கள் பாதுகாக்கப்பட்டன. சொத்தைப் பற்களுக்கு இப்படி அடைப்புகள் செய்யப்படுவதைக்கண்டு அக்கிராம மக்கள் ஆனந்தப்பட்டார்கள். இதுபோன்ற வைத்தியங்கள் அவர்கள் கிராமங்களில் இல்லையே என்று வேதனையடைந்தார்கள்.

முகாமில், பல்மருத்துவ அறிவுரைகள் பைந்தமிழ் மொழியில் கவிகளாக எழுதித் தொங்கவிடப்பட்டிருந்தன.

''கூரான பற்களால் ஏற்படும் ஆறாத புண், தீராத புற்று நோயை வரவழைக்கும்''

''காயும் கனியும் கனிசமாய்த் தின்றால் வாயும் பற்களும் வனப்புடன் இருக்கும்''

''சொல் சுவையாக இருக்க பல் பழுதின்றி இருக்கவேண்டும்''

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்; பழுதற்ற பல்லே பயனுள்ள செல்வம்''

இதுபோன்ற பைந்தமிழ் வாசகங்கள் முகாமை அலங்கரித்ததோடு, படித்தவர்கள் உள்ளங்களிலெல்லாம் ஒரு பரவசத்தை உண்டாக்கின. மனிதனின் பொழுதுபோக்கு மட்டுமல்லாமல், அறிவுரைகளைப் பெறவும், புதியனவற்றை அறிந்து கொள்ளவும் திரைப்படங்கள் மிகவும் பயனுடையவை என்பது நாடறிந்த உண்மை. புகை பிடிப்பதாலும், புகையிலை போடுவதாலும் ஏற்படும் புற்றுநோய்களின் கொடுமைகளைத் திரைப்படமாக ஓட்டி கிராம மக்களுக்கு, இந்தப் பழக்கங்கள் எவ்வளவு கெடுதலானவை என்று போதிக்கப்பட்டது.

நாட்டுக்காக நாளெல்லாம் உழைத்துவரும் கிராமமக்களின் வாழ்க்கையில் மலர்ச்சியும் மறுமலர்ச்சியும் பெருக வேண்டும் என்று நாட்டுக்கு உழைத்த நமது மாபெரும் தலைவர்களின் லட்சியங்கள், தமிழக அரசால் நிறைவேற்றப்படும் பொன்னான இக்காலத்தில் பல் மருத்துவத்தைப்பற்றி கிராமங்களில் ஒரு விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்திய இந்தத் திட்டத்தின் வெற்றிக்கு அயராது உழைப்போம் என முடிவுகட்டி, அரசுக்கு நன்றி தெரிவித்து மனநிறைவோடு முகாமை முடித்து வெற்றி நடைபோட்டு வீடு திரும்பினோம்.




## பாரதிதாசன் ஒரு நோக்கு

**ஆசிரியர் : டாக்டர் ச. சு. இளங்கோ**

**விற்பனையுரிமை:** பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-1.

**விலை : ரூ 15 பக்கங்கள்: 251.**

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 'ஆத்திசூடி' நூலை ஆய்வு முறையில் நோக்கி, அரியதொரு நூலாக்கியுள்ளார் ஆசிரியர்.

ஆத்திசூடியின் அடிப்படை-நீதிபோதனையாகும். எனவே உலகின் பல நாடுகளில் உருவான நீதிநூல்கள் இங்கே ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

ஔவையின் ஆத்திசூடியிலிருந்து இளையர் ஆத்திசூடி முடியப்பல்வேறு ஆத்திசூடிகளின் சிறப்பையும் குறிப்பிட்டு ஒப்பு நோக்கி ஆய்வு செய்திருக்கிறார். உரையாசிரியர்களைப் பற்றியும் விவரங்களைக் கொடுத்திருக்கிறார். பாட வேறுபாடுகளையும் விட்டு வைக்கவில்லை. மற்ற ஆத்திசூடிகளிலும் பாவேந்தர் ஆத்திசூடி வேறுபட்டிருப்பதுடன் பகுத்தறிவுக் கொள்கையையும் பரவச் செய்கின்றது என்பதை ஆசிரியர் தேர்ந்து-தெளிந்து- வலியுறுத்திக் கூறியுள்ளார்.

'உணவு நெறிகள்' என்னும் பகுதியில் சங்ககால உணவுமுறையிலிருந்து இன்றைய உணவுவரை இலக்கியங்களின் வாயிலாகத் தொகுத்துக் கூறுகிறார். பாவேந்தர் அவர்களின் உணவு முறையையும் தமது நூல்களில் அவர் கூறியுள்ள உணவு முறையையும் எடுத்துக் காட்டி பாவேந்தர் 'அசைவ உணவுப் பிரியர்' என்பதை நிலைநாட்டியிருக்கிறார். ஆனால், எல்லோரும் அசைவ உணவுதான் உண்ணவேண்டும் என்று ஆசிரியர் வலியுறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்க செய்தி.

பாவேந்தர் நூலில் சொல்லப்படும் கனிகள், உணவு வகைகள் ஆகியவற்றிற்காக இணைப்பு என்னும் பகுதியும் மேற்கோள் நூல்களுக்குரிய நூல்பட்டியல் என்னும் பகுதியும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் ஆசிரியரின் உழைப்பு இந்த நூல் முழுதும் தெரிகிறது. ஆய்வு முறையில் இவர் ஒரு தனி பாணியைச் சிறந்த பாணியைக் கையாளுவது போற்றுதற்குரியது.

## திரு. வி. க. சிந்தனைகள்

**ஆசிரியர் : பி.எல். ராஜேந்திரன்**

**வெளியீடு:** செல்வ நிலையம், 18, முத்துமுதலி தெரு இராயப்பேட்டை, சென்னை-600 014.

**விலை ரூ. 12 பக்கங்கள் 195**

தலைப்பைக் கண்ணுற்றதும் திரு. வி. க. அவர்களின் பொன்மொழிகளின் தொகுப்பு என எண்ணத் தோன்றுகிறது. ஆனால் இது திரு. வி. க. அவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் திறனாய்வு முறையில் தெரிவிக்கும் ஒப்பற்ற நூல்.

அவரது மொழிப்பற்று, நாட்டுப்பற்று, சமயப்பற்று, தொழிலாளரிடத்துத் தோழமை ஆகி செய்திகள் சான்றுரைகளுடனும் மேற்கோள்களுடனும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவரது சிந்தனையில் தெறித்து வந்த வைர மணிவாசகங்களும் ஆங்காங்கே எடுத்துக் காட்டப் பெற்றிருக்கின்றன.

திரு.வி.க.வின் மேடைத்தமிழ், பத்திரிகைத் தமிழ், அனைத்தும் இந்நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஆற்றொழுக்கு நடையில் இந்நூலை எழுதியிருக்கும் ஆசிரியர் பாராட்டுக்குரியவர். 'தமிழர்களுக்கு அவர் ஒரு தமிழ்ச் சுரங்கம்; தேசிய வாதிகளுக்கு அவர் ஒரு வீர சிங்கம்' என்று ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது சரியான படப்பிடிப்பு ஆகும்.

இந்நூலில் தமிழகத்தின் -ஏன் இந்திய நாட்டின் ஒரு நூற்றாண்டுக்கால வரலாறே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது -என்று

## வாழ்வது எப்படி?

**ஆசிரியர்:** மு. முத்துக்காளத்தி எம்.ஏ.

**விற்பனை உரிமை:** பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-600 001.

**விலை: ரூ. 4.50 பக்கம் 82.**

சிரிப்பது சுலபம், பிறரைச் சிரிக்க வைப்பது கடினம். அதுபோல், வாழ்க்கை நூல்களைப் படிப்பது சுலபம், பிறர் படிப்பதற்குரிய வகையில் படைப்பது கடினம். மக்கள் எளிதில் படித்தறிந்து கொள்ளும் வகையில் வாழ்க்கை நூலை எழுதியிருக்கிறார் இந்நூலாசிரியர் என்பது பாராட்டுக்குரியது.

உடல் நலம் குறித்தும் உள்ள நலம் குறித்தும் கவனிக்க வேண்டிய உண்மைகள் சான்றுகளுடன் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. நூலாசிரியர் பெற்றுள்ள அனுபவம் நூலுக்குத் துணை செய்திருக்கிறது.

நோய் வருவதற்கு முன்னர் அதனைத் தடுத்துக் கொள்வதற்குரிய உபாயங்கள் இந்நூலில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. சொல்லவந்த விஷயம் சுவையுறச் சொல்லப்பட்டிருக்கிறது. எளிய, இனிய, விறுவிறுப்பான நடை நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

**—தமிழ்ப்பித்தன்**

## புகை அகராதி

**தொகுப்பு : து. ரங்காச்சாரி**

**நூல் கிடைக்குமிடம்:** 135, மேல சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்-620 006.

**விலை: ரூ. 1-50 பக்கங்கள்: 36**

புகை நமக்குப் பகை என்பார்கள். அதனால் விளையும் தீமைகள் அநேகம். இந்த உண்மையை உணர்த்துகிறது இச்சிறுநூல்.

சிகரெட்புகையிலுள்ள நஞ்சுகள் என்று 19 பெயர்களைப் பட்டியலே போட்டிருக்கிறார்கள். சிகரெட் குடிப்பதால் ஏற்படும் விளைவுகள்-அதனால் உயிருக்கே ஏற்படுகின்ற நிலைமையெல்லாம் சொல்லி நம்மை எச்சரிக்கும் இந்நூலில், இந்தப் பொல்லாத பழக்கத்தைக் குறைக்கும் வழிவகைகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

## குடும்ப அசைவ சமையல்

ஆசிரியர் : செல்வி

வெளியீடு : இலக்குமி நிலையம்,
10, காசிம் சாகிப் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை-600 014.

விலை: ரூ. 5-80 பக்கங்கள்: 127

உணவில் சைவம், அசைவம் என இருவகை இருப்பதை நாமறிவோம. சிலர் சைவ உணவு தயாரிப்பதில் கெட்டிக்காரர்களாகவும், சிலர் அசைவ உணவைத் தயாரிப்பதில் கெட்டிக்காரர்களாகவும் இருப்பார்கள். ஆனால் இரு வகை உணவையுமே சமைப்பதில் தேர்ந்தவர்களாக இருப்பார்கள் சிலர். சைவ உணவைவிட, அசைவ உணவைச் சமைப்பதில் சற்று சிரமம் இருக்கத்தான் செய்யும். அந்தச் சிரமத்தைக் குறைக்கின்ற வகையிலேயும், சுவையாகச் சமைக்கின்ற வகையிலேயும் இந்நூலிலுள்ள குறிப்புகள் பெரிதும் துணை செய்யும். ஆட்டுக்கறிக் குருமா முதல் மீன் புட்டு வரை சுமார் 103 அசைவச் சமையல் குறிப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. தேவையான பொருட்களும், தயாரிக்கின்ற முறையும் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

—பி. வி. கிரி

## இராணுவப் பழமொழிகளும் முதுரைகளும்

தொகுப்பாளர்:
சாமி. வெண்கண்ணன்

விற்பனையுரிமை:
307, லிங்கிசெட்டி தெரு,
சென்னை-600 001.

பக்கங்கள்: 136 விலை: ரூ. 8.00

தமிழில் பழமொழித் தொகுப்பு நூல்களும், பொன்மொழித் தொகுப்பு நூல்களும் ஏராளமாக வெளிவந்திருந்தாலும், ஒரு குறிப்பிட்ட துறைப் பழமொழிகளையும் மூதுரைகளையும் (பொன்மொழி) தொகுத்து வெளியிடப்படும் முதல் நூல் இதுவே.

இந்நூலில், உலகின் பல்வேறு பகுதிகளில் புழக்கத்தில் இருந்து வரும் இராணுவப் பழமொழிகளும், இராணுவ இயல் மூதுரைகளும் பேரளவில் திரட்டப் பெற்று அகர வரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

படிப்பவர்க்கு மட்டுமன்று, எழுத்தாளர்களுக்கும் சொற்பொழிவாளர்க்கும்கூட இந் நூல் ஒரு மிகச் சிறந்த 'களஞ்சியம்' ஆசிரியரின் பல்லாண்டு முயற்சியின் விளைவால் உருவான இந்த அரிய தொகுப்பு நூல், தமிழுக்குப் பெருமை சேர்க்கிறது. அச்சும், நூலமைப்பும் சிறப்பாக அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## நித்திரை பலன்

ஆசிரியர்:
டாக்டர்-வைத்திய ரத்னா
எஸ். சிதம்பர தாணுப்பிள்ளை

வெளியீடு: சித்த மருத்துவ நூல்,
ஆராய்ச்சி நிலையம்
இ-32, அண்ணாநகர்
(கிழக்கு)
சென்னை-600 102

பக்கங்கள்: 50 விலை: ரூ. 5-00

உழைக்கும் உயிரினங்களுக்கு உறக்கம் இன்றியமையாதது; உறக்கம் உயிரினங்களுக்குப் புத்துணர்வு தருகிறது. உள்ளத்திற்கு அமைதியையும், உடலுக்கு ஆற்றலையும் தருகிறது. இரத்தம் தூய்மை இழப்பதைத் தடுக்கவும் தூக்கம் தேவை என்பது உடற்கூற்று ஆய்வாளர் கருத்து.

பொதுவாக, ஆழ்ந்த நித்திரை கொள்வதும், குறைந்த நேரம் தூங்குவதுமே உடலுக்கு நலன் விளைவிக்கும். நிம்மதியற்ற நித்திரை-நெடுநேர உறக்கம் பல்வேறு வகையான பாதிப்புகளை உண்டாக்கும். 'நித்திரை பலன்' என்னும் இந்நூல் தூக்கத்தையும் கலையாக்கிக் காட்டுகிறது.

ஆசிரியர் இந்நூலில், தூங்கும் திசை, தூங்கும் விதம், தூங்கும் இடம், தூங்கும் நேரம், படுக்கை ஆகியவற்றிற்கும் உடல்நலத்திற்கும் உள்ள தொடர்புகளையும், பயன்களையும் - சிறந்த முறையில் ஆராய்ந்து தெளிவுபடுத்தியுள்ளார். தமிழில் - 'தூக்கக் கலை' இலக்கிய வரிசையில் ஒரு குறிப்பிடத்தக்க நூல் இது.

—'சாமிபழ'

## எளிய வைத்தியம் 250

ஆசிரியர் : இந்திரா சுப்பிரமணியம்

வெளியீடு: இலக்குமி நிலையம்
10, காசிம் சாகிப்
தெரு, இராயப்பேட்டை
சென்னை-600 014.

விலை ரூ. 3-50

அலோபதி, ஆயுர்வேதம், ஹோமியோபதி, சித்தா என்று மருத்துவ வகைகளைப் பிரித்தும் கிறார்கள். இன்றைக்கும் கூட கிராமப்புறங்களில் நாட்டு வைத்தியத்தின் மீது அபரிமிதமான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

மருத்துவ வசதியற்ற கிராமப்புறங்களில் இன்னமும் 'சித்தா முறை' கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நோய் ஏற்பட்டால் மருத்துவர்கள் அருகில் இல்லாத இடங்களில் உள்ள ஏழை -எளியவர்களுக்கு மாமருந்தாகப் பயன்படும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளதால் இது கைகண்ட மருந்து நூல் எனலாம்.

— ஜி. ஆனந்தன்

## இறைவைப் பயிருக்கு பயிர் பாதுகாப்பு

ஆசிரியர்: அரு. சோலையப்பன்

வெளியீடு: புத்தகப் பூங்கா,
48, முத்து முதலி தெரு,
சென்னை-600 014


பக்கங்கள்: 104 விலை: ரூ. 5

"மேழிச் செல்வம் கோழை படாது'' என்று ஒரு பழமொழி தமிழ்நாட்டில் வழக்கில் இருந்து வருகிறது. நமது பாரத நாட்டில் பெரும் பான்மையான மக்கள், விவசாயத்தையே நம்பி இருக்கின்றனர்.

இந்நூலில் ஆசிரியர், முதலில் நெல்லைத்தாக்கும் பூச்சிகள், நெல்லைத் தாக்கும் வைரஸ்கள் மற்றும் பூஞ்சானங்கள் (நோய்கள்) பற்றி விவரிக்கிறார். பிறகு நெற்பயிர்க்குப் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் பற்றி மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

அடுத்து, சோளத்தைத் தாக்கும் பூச்சிகளும், நோய்களும், அவற்றைத் தடுக்கும் முறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. வாழையைத் தாக்கும் பூச்சிகளும், நோய்களும் பற்றிக் கூறப்படுகிறது. இறுதியாக, பருத்தியைத் தாக்கும் நோய்களும், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளும் பற்றி ஆசிரியர் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று திண்ணமாகக் கூறலாம்.



# ஏறு தழுவல்


டாக்டர் சி.பாலசுப்பிரமணியன்

தமிழ் மொழித் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்


அட்டை செய்தி

பழந்தமிழர் வாழ்வு பீடும் பெருமையும் சான்றது. வரலாற்றின் தொடக்க காலத்திலேயே தமிழர் தமக்கெனத் தனித்ததோர் இடத்தினை வரலாற்று ஏடுகளில் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை முதலான ஐவகை நிலங்களில் வாழ்ந்த தமிழர்தம் வாழ்வில் தனித்தனி வாழ்வுப் போக்குகளை அமைத்துத் தொல்காப்பியனார் ஒழுகலாறுகளைப் படைத்திருக்கச் சங்க இலக்கியங்கள் அவ்வொழுகலாறுகளை விரிவாக விளக்கும் போக்கும் பாடல்களைக் கொண்டிலங்குகின்றன.

முல்லை நில மக்களின் வாழ்வு விழுமிய தாய்-தூயதாய்த் துலங்கியது.

'ஆகாத் தோம்பி ஆப்பய னளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா
டில்லை'

என்று சிலப்பதிகாரமும் முல்லை நில மக்களாம் ஆயர்தம் அருமையான வாழ்வினைப் புலப்படுத்தியுள்ளது. முல்லை நிலத்துப் பூவான முல்லைப்பூவினை ஆயமகளிர் தம் கற்பிற்கு அடையாளமாகத் தலையிற் சூடினர். முல்லை என்பதே, கற்பிற்கு அடையாளமாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் இலங்கியது.

முல்லை நில மக்களின் ஒழுக்கம்' இருத்தலும் இருத்தல் நிமித்தமும்' எனப் புகலப்பட்டது. அக்காலத்தே செல்வ-வளனைக் காட்டுதற்கு எடுத்துக்காட்டாகப் பசுக்கள் திகழ்ந்தன. எனவே, பசு மந்தைகளை மிகுதியாகக் கொண்டவன் செல்வ வளம் மிக்கவனாகக் கருதப்பட்டான். 'மாடு' என்ற சொல்லே செல்வம் என்னும் பொருளுடைத்து. எனவே மாடுகளைச் சுற்றியே ஆயர் வாழ்வு சுழன்றது. ஒரேயொரு பசுவினைக் கொண்டு அதன் வருவாயில் வாழும் ஒரு குடும்பம் வறிய குடும்பம் என உரைக்கப்பட்டதாக 'ஓரான் வல்கிச் சீரில்வாழ்க்கை' என்னும் குறுந்தொகைப் பாடலடியால் உணரற்பாற்று.

முல்லைநில மக்கள் எந்நில மக்கள் போலவே காதல் வயப்பட்டனர். காதல் வாழ்வு கற்பு வாழ்வில் நிறைந்தது. காதலித்த காதலரையே மணந்து கொள்ளக் காதலியரின் தாய் இசைவு தந்தாள். காரணம் அத்தாயும் ஒரு காலத்தே காதலியாயிருந்து காதலித்த காதலனையே கடிமணம் புரிந்தவளாயிற்றே! எனவே களவு மணம் கற்பு வாழ்வில் நிறைய அவள் மறுப்பேதும் சொல்வதில்லை. இதனைக் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' பின்வருமாறு குறிப்பிடுகின்றது :

அயர் மகனாயின் ஆயமகள் நீயாயின்
நின்வெய்ய னாயின் அவன்வெய்யை
நீயாயின்
நினைநோ தக்கதோ இல்லைமன்
நின்நெஞ்சம்
அன்னைநெஞ் சாகப் பெறின்

**முல்லைக் கலி: 7. 20-23**

ஆயினும் தாய்க்கு அஞ்சிக் காதலைச் சொல்ல முடியாமல் வாளாயிருந்தால் அதன் விளைவு வருத்தத்தில் போய் முடியும்; காதலுக்கு மணமன்றி மாற்று மருந்து வேறில்லை என்றும் தோழி காதலியைத் தெருட்டுவதைக் காணலாம்.

ஆயர்மகனையுங் காதலை கைம்மிக
ஞாயையும் அஞ்சுதி யாயின் அரிதரோ
நீயுற்ற நோய்க்கு மருந்து

**முல்லைக் கலி: 7. 25-27**

நிற்க, முல்லைத் திணைப் பாடல்களில் காதலும் வீரமும் கைகோத்து நிற்பதனைக் காணலாம். காதல் வீரத்திற்கு நிலைக்களனாக இருப்பதையும் வீரத்திற்குக் காதல் பரிசாக அமைவதனையும் முல்லைப் பாடல்களிற் காணலாம். காதலியைக் கைபிடிப்பது கொல்லேற்றுக் கோடு பிடித்து வெல்வதாய் அமையும். எனவேதான் கொல்லேற்றுக் கோடுபிடிக்க அஞ்சியவன் காதலியின் தோள் தழுவும் வாய்ப்பு இழந்தவனாகிறான் என்று கலித்தொகை நுவல்கின்றது.

ஆங்கு, பேசேற் றருந்தலை அஞ்சலும்,
ஆய்ச்சியர்
காரிகைத் தோள்கா முறுதலும்
இவ்விரண்டும்
ஓராங்குச் சேறல் இலவோ எங்கேளே

**முல்லைக் கலி: 6. 40-42**

மேலும், கொல்லேற்றுக் கோட்டிற்கு அஞ்சி நிற்பவனை ஆயமகள் மறுபிறவியிற் கூட மணஞ்செய்ய மறுப்பான் என்ற கருத்தமைந்த கலித்தொகைப் பாடலடி, பழந்தமிழர் தம் வீரவாழ்க்கையினை வியக்கப் பேசி நிற்கின்றது.

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை
மறுமையும்
புல்லாளே ஆய மகள்

முல்லைக் கலி: 3. 63-6

இதுபோன்ற வீர விளையாட்டுகள் பண்டைய கிரேக்கத்தில் மிகுதி என அறிகிறோம்.

எண் வகை மனத்தில் 'அசுரம்' என்பது ஒரு வகை என்றும், 'அசுரம் என்பது, கொல்லேறு கொண்டான் இவளை எய்தும், வில்லேற்றினான் இவளை எய்தும், திரியன்றி எய்தான் இவளை எய்தும், மாலை சூட்டப்பட்டான் இவளை எய்தும் என இவ்வாறு சொல்லிக் கொடுப்பது. இஃது அரும்பொருள் வினைநிலை என்பது என்று இறையனார் அகப்பொருளுரை குறிப்பிடுகின்றது. நம்பியகப் பொருள் இதனை 'விடை தழாஅல்' என்று நுவலும். இதற்கு உரை கண்ட பேராசிரியர் கா. ர. கோவிந்தராச முதலியார் அவர்கள், 'விடை தழாஅலாவது, வெல்லுந் திறனுடையனாகிய தலைமகன் தான் விழைந்த தலைமகளை மணத்தற் பொருட்டு கொல்லுந் திறலமைந்த ஓர் எருத்தினைப் பிடித்துத் தழுவி அடக்குதல்' என்பர்.

தான் விரும்பிய ஆய மகளை மணக்க விரும்பும் ஆயமகன், ஆயமகளின் அன்னை ஐயர் அரிதின் வளர்த்துவரும் கொல்லேற்றினைச் சாடிப் பிடித்துத் தழுவி அடக்கி அந்த வெற்றிச் சிறப்பிற்காக - வீரப் பரிசிலாக ஆய மகளிரை அடைவர் என்பது முல்லைக் கலிப்பாடல் முறைப்படி உரைக்கும் செய்தியாகும். அவை வருமாறு :

ஓஒ இவள், பொருபுகல் நல்லேறு கொள்பவர்
அல்லால்
திருமெய் தீண்டலர் என்று கருமமா
எல்லாருங் கேட்ப அறைந்த தறைந்து
எப்பொழுதும்
சொல்லால் தரப்பட்ட டவள்.

முல்லைக் கலி: 2. 9-12

கோளாளர் என்னொப்பார் இல்லென
நம் ஆனுள்
தாளாண்மை கூறும் பொதுவன் நமக்
கொரு நாள்
கோளாளன் ஆகாமை யில்லை அவர்கண்டு
வேளாண்மை செய்தன கண்.

முல்லைக் கலி: 1. 43-46

ஒன்றிப் புகரினத்து ஆயமகற் கொள்ளிழாய்
இன்றெவ னென்னை யெமர் கொடுப்ப
தன்றவன்
மிக்குத்தன் மேற்சென்ற செங்காரிக்
கோட்டிடைப்
புக்கக்காற் புக்கதென் நெஞ்சு.

முல்லைக் கலி: 5. 66-69

இவ் ஏறு தழுவுதல் பல நேரங்களில் தொழுவில் நடைபெறும்.

ஒரே வழி வியன்புலத்திலும் - அகன்ற வெளியிலும் நடைபெறும். மேய்ச்சல் நிலம் அன்று வியன்புலம் என வழங்கப்பட்டது. தம்முள் மாறுபட்டுத் தாக்கிக் கொள்ளும் ஏறுகளைப் பிரிப்பான் வேண்டி ஆயமகன் ஏறு தழுவி அவற்றை அடக்குதலும் உண்டு. சண்டு மகட்கொடை நேரும் நிகழ்ச்சி இல்லை. தம்முள் மாறுபட்டு உடற்றும் கொல்லேறுகளின் நிலையினைக் கலித்தொகை பின்வருமாறு குறிப்பிடும்.

நீறெடுப்பவை நிலஞ்சாடுபவை
மாறேற்றுச் சிலைப்பவை மண்டிப்பாய்
பாவையாய்த்
துளங்கிமில் நல்லேற் றினம்பல களம்புகும்
மள்ளர் வனப்பொத்தன.

முல்லைக் கலி: 6. 6-10

ஆயமகள் மோர் விற்கச் செல்லும்போது கொல்லேறு கொண்ட கணவனின் வீரத்தைப் பலரும் பாராட்டக் கேட்கும் வாய்ப்பினைப் பெறுவாள். ஆனாலுங்கூட அதற்குங்கூட அவளைப் பிரிந்திருக்க வொல்லா நிலையில் ஆயமகன் அவள் மாட்டுப் பேரமர் காதல் கொண்டு விளங்குகின்றான் என்பதனைப் பின்வரும் கலித்தொகைப் பாடலடிகள் பகரும்:

கொல்லேறு கொண்டான் இவள்
கேள்வன் என்று ஊரார்
சொற்லுஞ்சொற்கேளா அளைபிறி யாம்வரும்
செல்வம்எம் கேள்வன் தருமோஎங் கேளே

முல்லைக் கலி: 6. 43-45

இப்பகுதிக்கு 'உச்சிமேற் புலவர்கொள்' நச்சினார்க்கினியர் தரும் உரை, நுட்பமும் சிறப்பும் வாய்ந்தது எனலாம்.

''எம்முடைய தோழி! இவளுடைய கணவன் கொல்லுகின்ற ஏற்றைத் தழுவினான் என்று ஊரார் புகழ்ந்து சொல்லுகின்ற அச்சொல்லைக் கேட்டு மோரை விற்று யாம் வருஞ் செல்வத்தை எங் கணவன் தருமோ?

''ஓகாரம் தெருநிலை என்றது. அவன் புறத்துப்போய் இப்புகழ்கேட்க என்னை விடானென அவன் தன்மேலுள்ள விருப்பங் கூறிற்று''

இவ்வாறு பண்டைத் தமிழர் வீரமும் காதலும் இயைந்து நின்ற நிலையினை ஏறுதழுவுதல் என்னும் பண்டைய வழக்கு மெய்ப்பிக்கின்றது. ஏறுதழுவுதலின் முடிமணியாய இலங்கும் பாடல்களோடு இக் கட்டுரையினை முடிப்பாம் :

அஞ்சார் கொலையேறு கொள்பவரல்லதை
நெஞ்சிலார் தோய்தற் கரியவுயிர் துறந்து
நைவாரா ஆயமகள் தோள்;

வளியா அறியா உயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சும் நெஞ்சினார் தோய்தற்
கெளியவோ ஆயமகள் தோள்;

விலைவேண்டார் எம்மினத் தாயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டைத் தாம்வீழ்வார்
மார்பின்
முலையிடைப் போலப் புகின்.

முல்லைக் கலி: 3. 55-73


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்... அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

பதிவு எண் . M. 8676
தமிழரசு





